வாரப் பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194A, BANDARANAIKE MAWATTE, COLOMBO-12.

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு-12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 1993 வைகாசி திங்கள் 20-ம் நாள் (3—6—1962) ஞாயிற்றுக்கிழமை துல்ஹஜ் 29 | இதழ் 1

# ஜூன் 5-ல் அனைவரும் ஹர்த்தால் செய்க!

## அநீதியை எதிர்த்து ஆட்சேபம் தெரிவிப்பதே இதன் நோக்கம்

## தமிழ் பேசும் மக்களுக்கு தமிழரசுத் தந்தையின் வேண்டுகோள்

அவசரகால நிலைமையைப் பிரகடனப்படுத்தியும், தமிழ் பேசும் மக்களுக்கெதிராக அட்டூழியங்கள் புரிய இராணுவத்தினரையும், கடற்படையினரையும் கட்டவிழ்த்து விட்டும், தமிழ் பேசும் மக்களை அடக்கி ஒடுக்கி விட்டதாக அரசாங்க ஆதரவாளர் சிலரும், அரசாங்கத்துக்கு வெளியிலுள்ள வேறு பலரும் கருதுகின்றனர் இது உண்மைக்கு புறம்பானதாகும். தம்மீது அரசாங்கத்தினரால் திணிக்கப்பட்டு வரும் அநீதிகளைப் பொறுத்த வரையில், தமிழ் பேசும் மக்கள் அன்று போலவே இன்றும் மிக விழிப்புடன்தான் இருக்கிறார்கள். இந்த விழிப்புணர்ச்சியை எடுத்துக் காட்டுவதே ஜூன் 5ம் நாள் நடைபெறும் ஹர்த்தாலுக்கு முக்கிய காரணமாகும்.

திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பாராளுமன்றத்தில் சிங்களம் மட்டும் மசோதாவைச் சமர்ப்பித்த தினமும், காலிமுகத்திடலில் சத்தியாக்கிரகிகள் காடையர்களினால் தாக்கப்பட்ட தினமும் ஜூன் 5-ந் திகதியே. ஆகையால்தான் நாம், அத்தினத்தில் ஹர்த்தாலை அனுட்டிக்கிறோம்.

பலம் மிகுந்த அரசாங்கம் தமக்கிழைக்கும் அநீதிகளுக்கு, உலகறியத் தமது எதிர்ப்பை வெளியிட, ஹர்த்தால் ஒன்றே சமாதானத்தை விரும்பும் மக்களான தமிழ் பேசும் மக்கள் அனுட்டிக்கும் வழியாகும். இரத்தக் களரியை ஏற்படுத்தும் யுத்த வழி எமக்குச் சாத்தியமல்ல; அது எமது அகிம்சைக் கொள்கைக்கு மாறானதுமாகும்.



### யாழ். நகராண்மைக் கழகத்தின் புதிய தலைவர் டாக்டர் தர்மலிங்கம்

ஆகவே, தமிழ் பேசும் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நடாத்த எமக்குள்ள ஒருசில முறைகளில், ஹர்த்தால் அனுட்டிப்பதும் ஒன்றாகும் ஆகவே ஜூன் 5-ந் திகதியன்று பூரண ஹர்த்தால் அனுட்டிக்குமாறு வட, கிழக்கு மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு தமிழ் பேசும் ஆண் பெண், சிறுவர் அனைவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

### தூக்கதின ஏற்பாடுகள்

யாழ்ப்பாணக் குடாநாட்டிலும், மட்டக்களப்பு. திருகோணமலை, மன்னார், வவுனியா, ஆகிய பகுதிகளிலும், ஜூன் 5-ந் திகதி ஹர்த்தாலுக்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாகச் செய்திகள் கிடைத்துள்ளன!

இதே வேளையில் தமிழ் பேசும் மக்களின் உரிமைப் போராட்டங்களை எதுவும் இனிமேல் தலைகாட்டாதிருக்க வழி தேடும் படலத்தின் முதல் கட்டமாக எதிர்வரும் ஹர்த்தாலை முறியடித்துவிட என்னென்ன வழிவகைகளைக் கையாளலாம் என்று ஆட்சியாளர்கள் ஆராய்ந்து வருவதாக அறியப்படுகிறது.

எப்படியிருந்த போதிலும் இம்முறை ஹர்த்தால் அஹிம்சை வழியில் திறம்பட நடைபெறுமென்று தெரிய வருகிறது. தமிழ் பேசும் மக்கள் வதியும் பிரதேசங்களில் ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளும் பூசைகளும் அன்று நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.



மன்னார் மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை உரை நிகழ்த்துகிறார். திரு. அ. அமிர்தலிங்கம் அருகில் நிற்கிறார். அடுத்த படத்தில் மூதூர் இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகராகப் போட்டியிடும் ஜனாப் முகம்மது அலி பேசிக்கொண்டிருக்கிறார்.

## கூப்பனின்றி வெளியில் செல்ல முடியாது?

### அமுலுக்கு வரவிருக்கும் அதிசயச் சட்டங்கள்

தேசிய இடாப்பு தயாராகும் வரையும், அடையாளச் சீட்டுக்கள் வழங்கப்படும் வரையும் பொறுத்திருக்க முடியாமல புதுப் புதுச் சட்டங்களையும், திட்டங்களையும், புகுத்தி, குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களை அவதிக்குள்ளாக்க அந்தரங்க ஆலோசனைகளை அரசாங்கம் நடாத்தி வருகிறது. இன்னும் சிறிது நாட்களில் கூப்பன் புத்தகமின்றி தெருக்களில் நடமாடுவதே ஆபத்தாகிவிடப் போகின்றது.

இலங்கைப் பிரஜைகளுக்கான தேசிய இடாப்பு ஒன்று தயாரிக்க அரசாங்கம் ஆலோசித்து வருவது தெரிந்ததே! இத் திட்டத்தை அமுலாக்கும் பட்சத்தில், இலங்கையில் உள்ள தமிழ் பேசும் பிரஜைகளும் அனேகர் சந்தேகத்துக்கிடமானவர்கள் என்று கைது செய்யப்பட்டு விடவும் கூடும். பொலிஸ்-ராணுவ உத்தியோகத்தர்களே, தாங்கள் சந்தேகிக்கும் ஒருவரைத் திடீரெனக் கைது செய்துவிடலாம். தேசிய இடாப்புத் தயாரானதும், ஒவ்வொருவருக்கும், தங்கள் புகைப் படங்களுடன் கூடிய அடையாளச் சீட்டும் வழங்கப்படுமாம்.

இத்திட்டங்கள் சட்டமாகி அமுலாக்கப்படும் வரை பொறுத்திருக்க அரசாங்கமும், சம்பந்தப்பட்ட இலாகாக்களும் தயாராயில்லை. புதிய முறையில் ஒரு திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

தாங்கள் சந்தேகிக்கும் நபரிடம் கூப்பன் இருக்கிறதா? என்பதைக் கண்டுபிடிக்க முதலில் எத்தனம் செய்யப்படும். அவரிடம் கூப்பன் புத்தகம் இல்லாவிட்டாலோ, அல்லது சில மணி நேரங்களுள் கூப்பன் புத்தகங்களைக் காண்பிக்காவிட்டாலோ, அந்த நபர் உடனடியாகக் கைது செய்யப்படலாம். இதன் மூலம் சாதாரணமாக உள் நாட்டிலேயே பிரயாணம் செய்யும்

(9-ம் பக்கம் பார்க்க)

சகலவித மூலநோய் நிவாரணி

ரிச்செலட்ஸ் ப்ளட் பியூரிபயர்

(RICHELET'S BLOOD PURIFIER)

இரத்த சுத்தி செய்து






மூலம்

வாதம்

படை (ECZEMA)

மாத விடாய்

கோளாறுகள்

முதலானவைகளைக் குணப்படுத்துவதில் நிகரற்ற சஞ்சீவி இது. ஒரு போத்தல் ருசித்ததுமே மேலும் சாப்பிட்டு பூரண பலனை அடையவேண்டும் என்ற ஆசையும் நம்பிக்கையும் தானகவே ஏற்படும்.

எங்கும் கிடைக்கும்.

வெஸ்டன் ஏஜன்சீஸ்,

63, பேங்ஷால் வீதி, கொழும்பு.

( போன் : 2885 )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியம்:

# மன்னன் மீது அன்புக்கணை வீசும் ஆரணங்கு

## கதவிடுக்கு வழி நின்று பார்த்த காரிகை

### முத்தொள்ளாயிரத்தில் காதலர் காட்சி

காதல் வியாதி பொல்லாதது. எந்த வியாதியையும் குணப்படுத்திவிடலாம்; ஆனால் உள வியாதியைமட்டும் குணப்படுத்த முடியாது. உளம் திருந்தியவனுக்கு— திருத்தியவனுக்கு உருவ வழிபாடே தேவையில்லை. அவனை யாரும் எதுவும் செய்யமுடியாது. அவன் மனித தெய்வமாக—மனிதர்களால் போற்றப்படுகிறான். அவனது ஆற்றலை மக்கள் போற்றிப் புகழ்வர்.

காதல் நோயால் பீடிக்கப்பட்டோர்க்கு இந்த உலகம் பாலைவனமாகத்தான் காட்சியளிக்கும். அவர்களது காதல் ஈடேறும் வரையிலும் அவர்களுக்கு ஊண், உறக்கம் சரியாக ஏற்காது; தேன கசக்கும்; பால் புளிக்கும்; இலவம் பஞ்சு முள்ளாய்க் குத்தி உயிர் அணுக்களைப் படாத பாடுபடுத்தும்.

சேர நாட்டின் வீரம் கொஞ்சி விளையாடும் தெருவில் வெற்றிப்பவனி வந்து கொண்டிருந்தான் சேரன். அவனை ஓர் ஆரணங்கு உற்று நோக்கினாள். மறுகணம், கொண்டாள் காதல்! ஆம் கண்டதும் காதல் வந்துவிட்டது அவளுக்கு! சேரனின் உடலழகில்—வீரத்தில்—தூய்மையான மனத்தில் காதல் கொண்டாள் அந்த அணங்கு.

கதவின் இடுக்கு வழியாகப்பார்த்துக்கொண்டு நின்ற அவளிடம் சேரன் பேசவில்லையாம்; காதல் உரையாடலை அவள் தேன் நிகர்வாழ்க்கையில் அள்ளித் தெளிக்கவில்லையாம். அவளது சந்தனக் கன்னத்தைத் தடவி, கொஞ்சி மொழி பேசி, இதயத்தோடு இதயம் உறவாட வில்லையாம்! அதனால் அவளுக்கு அவன் மீது பொய்க் கோபம் வந்துவிட்டது. கதவுக்குப் பின்னால் நாணம் படர ஒளிந்து நின்று பார்த்த அந்தப் பாவை நல்லாள், இப்போது சேரன் மீது தொடுத்தாள் பாணம்! காதல் பூண்ட கன்னியர்களுக்கே உரித்தான துடுக்கான வார்த்தைகள் மிடுக்காக அவள் வாயிலிருந்து தெறித்தன.

'குடகு நாட்டுக் கொற்றவனே! படைபல கண்டவனே! வீரர்கள் பலரை தொடை நடுநடுங்க—உயிரைக் கையில் பிடித்துக் கொண்டுபோகும் அளவுக்கு ஓட ஓட விரட்டிய தென்னவனே! என் இதய மாளிகைக்கு மன்னவனே! கற்புக்கரசி கண்ணகிக்கு சிலை வடித்தெடுக்க கனகவிசயனின் கொழுத்த தலையில் கற்களைச் சுமக்கவைத்தவனே! உனது காதலை என் தலையில் சுமக்க வைப்பாயா? உன்னைக் கண்டது முதல் நான் உன்மீது காதல் சொரிந்தேனே, அது உனக்குக் கசக்கிறதா? வீரத்தின் உறைவிடமே! பகுத்தறிவுப் பாசறையின் கலங்கரை விளக்கமே! என் வாழ்வின் அகல் விளக்கே! கருமுகில் கப்பியிருக்கும் என் வாழ்வுக்கு உதயசூரியனாய் வரமாட்டாயா? வஞ்சிக் கோமான் என்ற பெரியதொரு பெயர் உங்கள் அழகு தவழும் உடம்பில் ஒட்டிக் கொண்டிருக்கிறதே, இருக்கலாமா? கண்களின் வழியாக வந்து எட்டிப் பார்த்த என் அன்பைத் தட்டிப் பறித்துக் கொண்டு போன என் அன்பரே! என் உள்ளத்தை—என் உயிர்த் துடிப்பை—என் மகிழ்ச்சி அணுக்களை வெட்டிச்சாய்த்து என் உள்ளத்தை நோகவைப்பதற்கென்றே இந்த வேடம்பூண்டு வருகிறீர்களா?' என்று தனக்குள்ளே—தன் மனத்திடமே சொல்லிக் கொண்டாள் அந்தத் தமிழ் மங்கை. சேரன் மீது அவள் கொண்ட காதல், இப்படி அவளைப் பேசச் செய்தது. காதல் வெறியால் பிலாக்கணம் பாடினாள். வெறி அவள் உள்ளத்தின் கனிவை அழித்து விட்டது.

எதிர்பாராதவிதமாக அவனும் வந்து கொண்டிருந்தான். வளையல் கலகலக்க—பூங்கொடி போன்ற உடல் வளைய, ஒரே யடியாகக் கூப்பாடு போட்டுக் கொண்டிருந்த அந்தத் தையல் தவயோகியானாள். கோபம் செத்துமடிந்தது; கனிவு பிறந்தது; அமைதி ஆட்சி செலுத்த ஆரம்பித்தது; ஆரவாரம் அடங்கியது; பேரார்வம் துளிர்த்தது. அவள் உடல் முழுதும் தேனாறு பாய்ந்தோடியது. அவன் இல்லாதபோது துடுக்கான வார்த்தைகளைச் சீற்றத்தோடு—உள்ளக் கொதிப்போடு—கொட்டிய அந்தப் பொற்கொடியாள், இப்போது அவனைப் பார்த்ததும் உருகிப் பனியாகி விட்டாள்; அவள் மெய் சிலிர்த்தது; உடல் புல்லரித்தது; இரத்த நாளங்களில் தேன் பெருக்கெடுத்தோடியது. கோபத்தின் முதுகெலும்பை முறித்து, மிதித்து, துவைத்து சமாதி கட்டிய அந்தக் காரிகை, கனிவு ததும்பும் வார்த்தைகளை முத்தாரமாக்கி, அன்புத் தேனில் தோய்த்துக் கொடுக்க ஆரம்பித்துவிட்டாள்.

பழையபடி அவனைப் பற்றிப் புகழ்ந்தேத்தத் தொடங்கினாள். எந்த வாயிலிருந்து வன் சொற்கள் கொப்பளித்ததோ அதே வாயிலிருந்து இன் சொற்கள் வெளிவந்தன. இல்லாத போது சொல்லத்தகாத தடித்த வார்த்தைகளைக் கொட்டித்தீர்த்து, தனது காதல் வெறியையும் மனக் கொதிப்பையும் கொட்டிக் கொண்ட அந்தத் தமிழ்ப் பாவைக்கு இப்போது வெறி தணிந்துவிட்டது. தெளிந்த நீரோடை போன்று அவள் உள்ளம் அமைதியடைந்தது. அன்புச் சுனைநீர் அவள் வாயிலிருந்து 'குபு குபு' வென்று வெளிவர ஆரம்பித்தது.

உணர்ச்சிக்கு உருவம்ஏது? மனிதனின் உள்ளத்திற்குத்தான் உறுதியான நம்பிக்கை ஏது? காதலுக்குக் கண்கள் கிடையாது அல்லவா? அதனால்தான் அப்படிப் பேசினாளோ என்னவோ? என்ன விருந்தாலும் கண்டவுடன் வெறி உணர்ச்சி தணிந்து, காதல் கசிந்தது; கண்ணீர் மல்கியது; நாத் தழுதழுத்து உணர்ச்சி அலைகள் இதயத்தின் எண்ணக் கரையிலே முட்டிமோதி சிதறி உள்ளத்திலே உடைபட்டுச் சிதறி விட்டது.

வெறியினும் மேலானது ஒன்றுமில்லை. அதைவிடக் கீழானதும் இழிவானதும் வேறில்லை. வெறிவந்திட்டால் அதை அடக்கமுடியாமல் மனிதன் தவறிழைக்கிறான். வெறிச் செயலால் மாமன்னர்கள் மண்டலங்களின் வாழ்வு சுடுகாடாகியிருக்கிறது. வெறிப்பிடித்துவிட்டால் அவனுக்கும் அவனைச் சார்ந்தவனுக்கும் கெடுதலே பயக்கும். வெறிவந்தவுடன் அறிவு, மூளை, உணர்ச்சி, பாசம், பரிவு, கழிவிரக்கம் எல்லாமே செத்தொழிந்து மண்ணாகப்போய் விடுகின்றன. வெறி உணர்ச்சி படைத்தவனை உலகம் பாராட்டாது அவனது வாழ்வின் அத்தியாயத்தைக் கிழித்து, நெருப்பிலிட்டுப் பொசுக்கத்தான் துடிப்பர். எனவே, மக்களாய்ப் பிறந்த நாம், மிருகங்களைப்போல் உடனடியாக உணர்ச்சிவசப்படாது, அமைதியாக, அஹிம்சையாக, கடமை, கண்ணியம், கட்டுப்பாடோடு எந்தக்காரியங்களிலும் ஈடுபடுவோம்; வெற்றிவாகை சூடுவோம். இந்த நற்கருத்தை அழகுத் தமிழில் அள்ளித் தருவது முத்தொள்ளாயிரம். பாடல் வருமாறு.

'வருக குடநாடன் வஞ்சிக்கோ
மான் என்(று)
அருகலர் எல்லாம் அறிய
—ஒருகலாம்
உண்டாய் இருக்க அவ்
ஒண்தொடியாள் மறவனைக்
கண்டாள்; ஒழிந்தாள்!
கலாம்! (18)

தே. நவமணி
கோலாலம்பூர்.

"மோரிஸன்"
பம்புகள்



மண்ணெண்ணெய் டீசல் எண்ணெய்
களில் குறைந்த செலவில் நீடியகாலம்
உழைத்து பலன் பெறக்கூடியது.
1½, 2, 2½ அங்குல அளவுகளில்
கிடைக்கும்.
ஏக விநியோகஸ்தர்கள்:
கே. என். அப்துல்காதர்
ராவுத்தர்
அன் கம்பெனி லிமிட்டெட்,
312, ஸ்கின்னர்ஸ் ரோடு தெற்கு, கொழும்பு-10.
டெலிபோன்: 2956. தந்தி: MEDAL
வடமாகாண விநியோகஸ்தர்கள்:
ராஜு ஸ்டோர்ஸ்,
2/B, ஸ்டான்லி ரோட், யாழ்ப்பாணம்

## கால்நடைகளுக்கு உணவு ஊட்டுவதில் கவனம் செலுத்த வேண்டும்

### சத்துள்ள உணவில்தான் அவற்றின் வளர்ச்சி தங்கியுள்ளது

காடுகளில் கிடைத்த கனி கிழங்குகளைப் புசித்துத் திரிந்த மனிதன் இன்று வகை வகையான சத்துணவைச் சுவை குறையாமல் சமைத்து உண்டு வருகிறான். அதேபோலத் தன் வாழ்வுக்கு எத்தனையோ வகையில் உழைத்து வளம் ஊட்டி வரும் கால்நடைகளின் உணவு விஷயத்திலும் சிறிது கருத்துச் செலுத்திச் சீரான உணவை அவற்றுக்கு அளித்து வந்தால் அவைகள் பல்கிப் பெருகி உலகுக்கு இன்னும் பல மடங்கு பயன் தரும் அன்றோ?

உணவுப் பொருள்களைப் பயிரிட மனிதன் கற்றுக் கொண்ட காலம் முதல் அவனுக்கு விவசாயத்தில் ஆடு மாடு முதலான கால் நடைகள் பெருந்துணை புரிந்துவருகின்றன. உழுதல், உரமிடுதல், விதைத்தல், அறுவடை, தான்ய சேமிப்பு, விற்பனைக்கு கொண்டு செல்லுதல் எனப்படும் ஒவ்வொரு நடவடிக்கையிலும் கால்நடைகள் செய்யும் உதவியும், எடுத்துக்கொள்ளும் பங்கும் மிக மிக அதிகம். அப்படியிருந்தும் [illegible] தையும் மனிதன் தன் சொந்த உபயோகத்துக்கு எடுத்துக் கொள்கிறான். அவனால் புறக்கணிக்கப்பட்டதும் அவனுக்குச் சிறிதும் பயன்படாததுமான தட்டைகளையும், தக்கைகளையும் வைக்கோலையுமே கால் நடைகள் உண்கின்றன. மனிதன் தன் வளர்ச்சிக்குத் தேவையான உணவை ஆராய்ந்து மதிப்பிட்டு பக்குவப் படுத்தி அளவறிந்து உண்பதுபோல் கால் நடைகளுக்கும் உணவூட்டுவதில் சிறிது கவனம் செலுத்துவானானால் அவைகளின் வளர்ச்சியும் வாழ்வும் சிறக்கும், இது விவசாயிகளின் கடமையும் ஆகும்.

#### வைக்கோல் உணவு

இந்தியாவில் நெல் விளை பிராந்தியங்களில் வைக்கோல்தான் மாடுகளுக்கு பிரதான தீவனமாகக் கிடைக்கிறது. வைக்கோலை அப்படியே மாடுகளுக்குப் போட்டால் ஊட்டம் அதிகம் கிடைப்பதில்லை என்று ஆராய்ச்சிகள் மூலம் கண்டறியப்பட்டிருக்கிறது. தான்ய வைக்கோல்கள் அனைத்திலுமே வெகு குறைவான போஷாக்குத்தான் இருக்கிறது. உடல் வளர்ச்சிக்கு வேண்டிய புரதம் அவற்றில் மிகக் குறைவு. மற்றும் பிராணிகளுக்கு முக்கிய தேவையான பாஸ்வரமும் சுண்ணாம்பு சத்தும் வைக்கோலில் மிகக் குறைவாக இருக்கின்றன. நாவிற்கு சுவையற்ற நார்ச் சத்தும் மணல் சத்தும் அவற்றில் அதிகம் உண்டு. இந்த இரண்டும் எளிதில் ஜீரணம் ஆவதும் இல்லை. வைக்கோலை கடித்து நொறுக்கி ஜீரணம் செய்வதற்குக்கூட கால் நடைகள் அதிகம் சக்தியைச் செலவிட வேண்டியிருக்கிறது. ஆக, வைக்கோலில் உள்ள கார்போஹைடிரேட்டால் கிடைக்கும் சிறிய அளவுச் சக்தியைப் பெறுவதற்குள் கால் நடைகள் எடுத்துக்கொள்ளும் சிரமம் மிக அதிகம். இவற்றின் காரணமாக வைக்கோலை மட்டும் உணவாகக்கொள்ளும் கால் நடைகள் தம் உழைப்புக்கும் வளர்ச்சிக்கும் வேண்டிய அளவு போஷாக்கை எளிதில் பெறுவதில்லை என்பது உணரப்படும்.

#### இந்தியாவின் நிலை

விவசாயத்தில் முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் கால்நடைகளுக்குப் புல்லையும் இதர பல தீவனப் பயிர்களையும் அதிகமாகக்

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஏ. வி. விக்னராஜா, திருமலே.

கே: “வட்ட மேசை...வட்ட மேசை... வட்டமேசை மகாநாடு வேண்டும்” என்று அகில இலங்கை கொழும்பு காங்கிரஸ் அறிக்கைமேல் அறிக்கை விட்டுக் கொண்டிருக்கிறதே! அந்த மகாநாடு எப்பொழுது கூடுமென்பது உங்களுக்காவது தெரியுமா?

ப: வட்டமேசை மகாநாடு நடத்த வேண்டுமானல் வட்டமான மேசை யொன்று வேண்டுமல்லவா? அவர்கள் அதற்கு ஓடர் கொடுத்து நீண்ட காலமாகி விட்டதெனினும் இன்னும் மேசை தயாரிக்கப்பட வில்லே. காரணம், வட்ட மேசை செய்யத் தேவைப்படும் வட்டமான பலகைக்கு இலங்கையில் பஞ்சம் ஏற்பட்டிருப்பதுதான். வட்டமான பலகை கிடைத்து, வட்ட மேசையும் செய்யப்பட்டு விட்டால், வாலும் தலேயுமில்லாத ஒரு வட்டமான மகாநாட்டை இந்த வட்ட மேசையைச் சுற்றி நடத்த வேண்டியிருக்கும். இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளும் அ. இ. கொ. கா. பிரதிநிதிகள் தாங்கள் உட்கார வட்ட நாற்காலிகள் தேவையென்று கேட்டுவிட்டாலோ நிலமை மேலும் சிக்கலாகி வட்ட மேசை மகாநாடு “வட்ட நாற்காலி மகாநாடாக” மாறி விடவும் கூடும். அதுவரை வ.மே.மா. வேண்டும்! வேண்டும்! வேண்டும்! என்ற தாரக மந்திரத்தை அ. இ. கொ. கா. குஞ்சுகள் இடை விடாது ஓதி கதிமோட்சம் பெறட்டும்!

ஃ

ஆர். எஸ், கலாநேசன், வேவத்தை.

கே: நான் படித்தவன். எனது காதலி படியாதவள். நாங்கள் இருவரும் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானம் செய்து விட்டோம். எங்களின் வாழ்க்கை ஒத்துப் போகுமா?

ப: ஏன் ஒத்துப் போகாது? படியாதவளாக இருந்தால் தான் மனைவி உங்களின் அறிவுக்கு அடங்கியிருப்பாள்.

ஃ

இளங்குமரன், கொழும்புத்துறை.

கே: அறிஞன் எப்போது முட்டாளாகிறன்?

ப: தனது அதிகப்படியான அறிவை அடகு வைக்கும் போது...

கே: இக்காலத்திலும் அரிச்சந்திரர்கள் வாழ்கிறர்களா?

ப: ஆம், நாடகங்களில்....

ஃ

ஹென்றி இராணி, இளவாலே.

கே: என் பெயர் இராணி. என் பெயருக்கு ஏற்ற பதவி எப்போது கிடைக்கும்?

ப: உங்களுக்கு ஓர் இராசா கிடைக்கும் போது...

ஃ

எஸ். ஜி. ரவீந்திரன், மன்னர்.

கே: உமக்கு எத்தனை பாஷைகள் தெரியும்?

ப: ஆறு பாஷைகள்—தமிழ், சிங்களம், ஆங்கிலம், பாலி, சமக்கிருதம், மலேயாளம்.

ஃ

வி. எல். சிதம்பரம், கண்டி.

கே: ஒரு மனிதன் ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் தூங்க வேண்டும்?

ப: குறைந்த பட்சம் 8 மணி நேரம்-காலே 9 மணி முதல் மாலே 5 மணி வரை தூங்கலாம்.

ஃ

எஸ். ஆர். எம். லிங்கமூர்த்தி, திருமலே.

கே: திரு. பொன்னம்பலம் எங்கே இருக்கிறர்?

ப: அவரைத் தமிழ் பேசும் மக்கள் மறந்து விட்டார்கள். இனி அவர் எங்கே இருந்தாலும் ஒன்றுதான்.

ஃ

சி. தருமலிங்கம், மட்டக்களப்பு.

கே: குயுக்தியாரே, உங்களிடம் கேட்கும் கேள்விகளுக்கு அன்பளிப்பு உண்டா?

ப: உண்டு-கேள்விகளுக்கு நான் கொடுக்கும் பதில் தான் அன்பளிப்பு.

ஃ

வி. கே. எஸ். பாலசிங்கம், முல்லேத்திவு.

கே: திரு. சுந்தரலிங்கம் மூதூரில் போட்டி போடுவது பற்றி தங்கள் கருத்து?

ப: தேர்தல் முடிவு பாதிக்கப்படாது என்பதுதான்.

ஃ

மு. க. ஸ்ரீகாந்தா, பருத்தித்துறை.

கே: ஆண்களுக்கு “அபிவிருத்தி வரி” போட்டிருப்பது போல் அடுத்த பட்ஜெட்டில் பெண்களுக்கும் வரி வருமா?

ப: அப்படித்தான் கேள்வி பெண்களுக்கு “அழகு வரி” போடப் போகிருராம் திரு. பீலிக்ஸ் பண்டாரநாயகா.

ஃ

ஆர். சிவசோதி, பதுளே.

கே: மூதூர், வெலிமட, அனுராதபுரம் ஆகிய இடைத் தேர்தல்களால் யாருக்கு இலாபம்?

ப: ஒலிபெருக்கிக் கம்பெனிகளுக்கும் அச்சகச் சொந்தக்காரர்களுக்கும்.....

ஃ

த. லோகநாதன், கிளிநொச்சி.

கே: எல்லாவற்றுக்கும் காரணம் அல்லது அர்த்தம் ஒன்று உண்டென்று விஞ்ஞானிகள் கூறுகின்றனரே, உண்மையா?

ப: இல்லே...பைத்தியக்காரர்கள் சிரித்தாலும் சரி, அழுதாலும் சரி அதற்குக் காரணமே கிடையாது. திரு. சுந்தரலிங்கம் அறிக்கை விட்டாலும் சரி, மேடையில் பேசினலும் சரி அதில் அர்த்தமே கிடையாது.

> திருவாளர்
> **குயுக்தியார்**
> மே/பா சுதந்திரன்
> தபால் பெட்டி இல. 1183
> கொழும்பு-12.

ஃ

மு. கனகலிங்கம், காரைநகர்.

கே: சதா மனத்தை உறுத்தும் துன்பங்களை மறக்க வழி...?

ப. இன்பங்களைப் பற்றி சதா “பகற் கனவு” காண்பது...

ஃ

க. சின்னராசா, கொடிகாமம்.

கே: எனது நண்பர் ஒருவர் தனக்கு அடிவிழுந்தால் மட்டும் திருப்பி அடிக்காமல் இருக்க மாட்டார். வேறு தீமைகள் செய்யும் எவர்க்கும் தீமை செய்ய நினைக்கமாட்டார். இதற்குத் தங்கள் பதில்?

ப: சுயநலம்! சுயநலத்தைப் பாராதவன் எப்படித் தான் பிறர் நலத்தைப் பார்க்க முடியும்?

ஃ

ஏம். பி. தியாகராஜா, இளிநொச்சி.

கே: உண்மையான காதலால் பிணைக்கப்பட்ட இரு உள்ளங்களைப் பிரிக்க முயன்றல் முடிவு எப்படி இருக்கும்?

ப: காதலின் வேகம் அதிகரித்து இருவரும் ‘அஸிட்’டின் உதவியைக் கொண்டு மூச்சுவிட மறந்து விடுவார்கள்.

ஃ

வை. முத்தையா, பலாங்கொட.

கே: இரும்பு மனிதர் டாக்டர் நாகநாதன் என்ன செய்து கொண்டிருக்கிறர்?

ப: தியாகம் என்னும் இரும்புச் சத்துள்ள உணர்ச்சி என்னும் “டொனிக்கை”க் கொடுத்து கோழைகளையும் தீரர்களாக்கிக்கொண்டிருக்கிறர்.

ஃ

“செல்வி”, சாவகச்சேரி.

கே: உற்றார் பெற்றோர் யாவராலும் வெறுக்கப்பட்ட ஒரு பேதைப் பெண் நம்பிய ஆடவனலும் வெறுக்கப்பட்டால் அவள் என்ன செய்வாள்?

ப: கோழையாக இருந்தால் ஒரு முழம் கயிற்றின் உதவியை நாடுவாள். தீரமுள்ள—அறிவுள்ள பெண்ணயின் தனதுள்ளத்தில் புரட்சியை ஏற்படுத்தி வைரம் பாய்ந்த மற்றெரு மரத்தைப் பற்றிக்கொண்டு இருண்ட தன் வாழ்வில் தீபத்தை ஏற்றிக் கொள்வாள்.

ஃ

ஸாப் ஹிப்ஸா, கொழும்பு—14.

கே: ஆண்கள் அஞ்ச வேண்டியது வானத்து மின் வெட்டுக்கா? அல்லது கன்னியர்களின் விழி வெட்டுக்கா?

ப: கன்னியர்களின் விழி வெட்டுக்கு...ஏனென்றல், வானத்து மின் வெட்டில் சிக்கியவர்களில் லட்சத்துக்கு ஒருவர் கூடப் பாதிக்கப்படுவது அபூர்வம். ஆனல் கன்னியர்களின் கண் வெட்டில் சிக்கியவர்கள் அனைவரும் ஆயுட் காலத் தண்டனை பெற்று குடும்பச் சிறையில் அடைக்கப்படுவார்கள்.

ஃ

க. இளயதம்பி, கிளிநொச்சி,

கே: பாடசாலேப் புத்தகங்களின்விலே அதிகமாயும், சினிமாப் புத்தகங்களின் விலே குறைவாயும் இருக்கிறதே! காரணமென்ன?

ப: பாடசாலேப் புத்தகங்களை வாங்குபவர்கள் பிள்ளைகளின்பெற்றேர், ஆகையால் அவற்றின் விலே அதிகம்;சினிமாப் புத்தகங்களை வாங்குபவர்களோ பிள்ளைகள், ஆதலால் அவற்றின் விலே குறைவு.

எம். மௌஸ், லுணுகலே.

கே: விபசாரிகளை அடக்குவது எளிதா? திருத்துவது எளிதா?

ப: கொழும்பு மாநகர சபையில் இப்பிரச்னை கிளம்பியபோது விபசாரிகளை “அடக்குவது எளிது” என்றது யு. என். பி. நகரசபைக் குழு, “திருத்துவது எளிது” என்றது சமசமாஜ நகர சபைக் குழு. இன்னும் இப்பிரச்னையில் முடிவு ஏற்படவில்லே.

ஃ

கு. பொன்னுத்துரை, சுழிபுரம்.

கே: தமிழ் நாட்டில் தி. மு. க. வளர்ச்சிக்கும் காங்கிரஸ் தேய்வுக்கும் காரணம் என்ன?

ப: தமிழகத்திலே இன உணர்ச்சி அதிகரிப்பதும், விவசாயிகளிடமிருந்து காங்கிரஸ் விலகிச் செல்வதுமே இந்த அரசியல் மாற்றத்துக்கு முக்கிய காரணங்களாகும்.

ஃ

செ. புவனேந்திரன், மட்டக்களப்பு.

கே: மட்டக்களப்பில் சில கொம்யுனிஸ்டுகள் தங்களுக்குக் கடவுள் வணக்கம் உண்டென்றும், கடவுள் இல்லே என்று கொம்யுனிஸ்டுகள் கூறவில்லேயென்றும், மற்றவர்கள் தான் அப்படிக் கூறுகிறர்கள் என்றும் சொல்லுகிறர்களே! இதைப் பற்றி தங்கள் கருத்து?

ப: “மதம் மக்களுக்கு அபின்” என்றர் கொம்யுனிஸ்ட் தந்தை கார்ல் மார்க்ஸ்.

ஃ

ப. சிவப்பிரகாசம், இரக்குவானே.

கே: “தொண்டமானியம் அல்லது இ. தொ. கா” என்ற தலேப்பில் கட்டுரை அனுப்பினல் பிரசுரிக்கப்படுமா? அல்லது...!

ப: இப்படி ஓர் ஈயமோ காரீயமோ இருப்பதாகத் தெரியவில்லே.

ஃ

கிருபா, கல்முனே.

கே: நான் காணும் உலகங்களே நீரும் கண்டால் என்ன நிகழும்?

ப: இருவருக்கும் சேர்த்து வ. மு. பட்டம் கிடைக்கும்.

## வள்ளுவ வணக்கம்

“திமிலேத்துமிலன்”

மூத்தகுடி தமிழரென முழுஉலகும்
    முரசறைய முளைத் தெழுந்து
சாத்திரங்கள் பலவினுக்கும் தலைமையென
    முன்னின்று தருமங் கூறி
தோத்திரஞ்செய் பொதுமறையாய் வையமெல்லாம்
    பணிந்தேத்தும் தூய்மை பெற்று
வீற்றிருந்து செங்கோன்மை விளம்பிவரும்
    திருக்குறளை விளைவித்த செம்மல்.

வாசுகியென் ஞெருபெண்மை மணிவிளக்கைத்
    துணையாக்கி வாழ்க்கை யென்னும்
பாசநிலா தனிலூர்ந்து இல்லறமென்
    ஞெருசொர்க்கப் பாதைகாட்டி
மாசுவிலாக் கைத்தொழிலாம் நூல்நூற்றல்
    எனவோர்ந்து வறுமை நீக்கிப்
பேசரிய அறிவொளியாய்த் தமிழுலகே
    பெருமைகொளப் பிறந்த செம்மல்.

அகரமெனத் தொடுத்தகுறள் அகிலமெலாம்
    தனியாண்டு அணுவினுள்ளும்
பகரவொணுப் புதுமையெலாம் பலகாட்டித்
    துளைத்தூர்ந்து பவனி செல்லும்
நுகரவெனில் ஒருசுவையா? உணர்விலெலாம்
    நுழைந் தறிவி னுள்ளும் தோறும்
சிகரமெனக் கூடிமுயங் இடலின்ப
    மெனநிறைவு செய்யும் செம்மல்.

காலமெலாம் நின்றுலவிக் கன்னியெனும்
    தமிழ்த்தாயைக் காவல் செய்யும்
கோலமுறு பொன்மதிலாய், கோபுரமாய்க்,
    குடை கொடிசெங் கோலா யின்னும்
ஞானமெலாம் அமுதினும் சுரபியென
    ஒருகுறளை நமக் களித்த
சிலமுறும் வள்ளுவனின் திருப்பாதக்
    கமலமலர் சென்னி வைப்பாம்!




ராஜ பீடி ஸ்பெஷல்

இலங்கை எங்கிலும் புகழ் பெற்றதும்
எல்லோர் மனதிற்கும் திருப்தி அளிப்பதும்
ராஜ பீடி ஸ்பெஷல்
ஒன்றே தான்
புகைத்து பலனடையுங்கள்

ராஜா பீடி கம்பனி
கொழும்பு-14.

டெலிபோன் : 2739

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகளை மீண்டும் பெறும் வரை போராட்டம் ஓயாது

## மன்னார் கூட்டத்தில் தமிழரசுத் தந்தை

தமிழ் பேசும் மக்களின் குடியுரிமை, பிரதேச உரிமை முதலியவற்றை மறுத்து, சிங்களம் மட்டும் சட்டத்தைத் திணித்து வரும் இந்த ஆட்சியை இலங்கைத் தமிழரசுக் கட்சி எதிர்த்து வந்துள்ளது. இதே சட்டங்களை நாம் எப்போதும் எதிர்த்தே தீருவோம். எந்தவகைத் துன்பம் வந்தாலும் சோர்வடையவே மாட்டோம். எதிர்வரும் ஜூன் 5-ம் திகதி துக்கதினத்தையும் ஹர்தாலையும் தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் பூரண வெற்றியுடன் நடத்துவதற்கு ஒத்துழைப்புத் தரும்படி தமிழ் பேசும் மக்கள் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்'' என்று தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்கள் கடந்த 26-5-62 சனிக்கிழமை மன்னார் மைதானத்தில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் ஒவ்வொரு உரிமையாகப் பறி கொடுத்து வந்தார்கள். இதை அறிந்து முதன் முதலில் அறை கூவல் விடுத்தது தமிழரசுக் கட்சிதான். கடைசியாக 1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதி சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டது. அன்றுதான் தனது அறப் போராட்டத்துக்கு தமிழரசுக் கட்சி அத்திவாரமிட்டது. காலிமுகத் திடலில் சத்தியாக்கிரகம் செய்த சத்தியாக்கிரகிகளைக் காடையர்கள் கல் கொண்டும் கம்பு கொண்டும் தாக்கினார்கள். அந்நாளை இலங்கை தமிழ் பேசும் மக்கள் வாழும் பகுதிகளில் துக்க நாளாக அனுஷ்டித்து வருகிறோம். இம்முறையும் தமிழ் பேசும் மக்கள் அனைவரும் ஒற்றுமையாக ஒருமனப்பட்டு துக்கதினம் அனுஷ்டித்து ஆட்சியாளர்கள் மட்டுமல்ல, அகில உலகமே அறியும்படி செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார்.

கோப்பாய் பிரதிநிதி திரு. மு. பாலசுந்தரம் பேசுகையில், இலங்கையில் மதத் துவேஷத்தையும் இனத் துவேஷத்தையும் ஆட்சியாளர்கள் தூண்டிவிடுகின்றனர். இப்படியான துவேஷங்களை வளர்த்த அரசு என்றுமே நிலைத்ததில்லை எனக் கூறினார்.

### துன்பப்பட்டால் தான் இன்பம் காணலாம்

எகிப்து நாட்டில் அடிமைப் பட்டு இன்னலுற்ற இஸ்ரவேல் மக்களின் அடிமைத்தளைகளை நீக்குவதற்கு மோசெஸ் எவ்வளவோ கஷ்டங்களை அனுபவித்தார். விடுதலை பெற்ற மக்களை தேனும் பாலும் பெருக்கெடுத்தோடும் கானான் தேசத்துக்கு அழைத்துக் கொண்டு போகும் வழியிலும், குறித்த இடத்தை அடைந்த போதும் எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருந்தது. இதே போன்றுதான் நாமும் நமது விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற துன்பங்களை அனுபவிக்க வேண்டியிருக்கும் என்று பருத்தித்துறைப் பிரதிநிதி திரு. கே. துரைரெத்தினம் கூறினார்.

### உலகில் எங்குமே நடைபெறவில்லை

அறப்போர்அணித்தலைவர் திரு ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் பேசுகையில், கடந்த சத்தியாக்கிரகம் நடைபெற்று முடிவாக மட்டக்களப்புத் தென்முனையிலிருந்து ஆரம்பித்த ஊர்வலத்தின் போது பொலிசார் தம்மைக் கைது செய்து ராணுவத்தினரிடம் ஒப்படைத்ததும், ராணுவவீரர்கள் தன்னை வளைந்து கொண்டு தாடியைப் பிய்த்தும், தலைமுடியை இழுத்தும்சேஷ்டைகள் செய்து விளையாடியதையும் குறிப்பிட்டார். 52 நாட்கள் 5 மாவட்டங்களில் ஆட்சியாளரின் நிர்வாகம் பூரணமாக ஸ்தம்பிக்க வைத்ததே உலகத்தில் எங்கும் நடைபெறாத விடயமாகும். இத்தகைய செயலாற்றிய எமது போராட்டம் எப்படித் தோல்வியாகும்? என்றும் கேட்டார்.

மூதூர் தொகுதி இடைத் தேர்தலில் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் ஜனாப் எம். ஈ. எச். முகம்மது அலி பேசுகையில் ஒருவரை ஒருவர் கண்டிப்பதில் காலத்தை வீணடிக்காமல், சாதி சமயவேறுபாடற்ற வகையில் நாம் ஒற்றுமைப் பட்டோமானால், சிறிமாவோ ஆட்சி நம் காலடியில் வந்து கெஞ்சவேண்டிய நிலைஏற்படும் என்றும், இத்தகைய ஒற்றுமைக்காக தான் அயராது பாடுபடத்திடசங்கற்பம் பூண்டுள்ளதாகவும் கூறினார்.

வவுனியாவிலிருந்து விரட்டப்பட்டு, அரசியலில் துறவு பூண்ட சுந்தரலிங்கம் மூதூரில் வந்து விஷமம் விளைவிக்கிறார், அவருக்கு மூதூர் மக்கள் நல்ல பாடம் படிப்பிக்கத் தயங்க மாட்டார்கள் என்றும் ஜனாப் முகம்மது அலி குறிப்பிட்டார்.

தமிழரசுக் கட்சித் தலைவர் திரு. எஸ். எம். இராசமாணிக்கம் பேசுகையில், தமிழர்—முஸ்லிம் ஒற்றுமையைத் தமிழரசுக் கட்சி ஆரம்ப காலம் தொடக்கமாக வலியுறுத்தி வந்துள்ளது அதனுலேதான் இம்முறை மூதூர் இடைத்தேர்தலில் ஜனாப் முகம்மது அலியை அபேட்சகராக நியமித்துள்ளது என்றும் வருங்கால தமிழ் பேசும் மக்களின் சந்ததியினர் இந்நாட்டில் மானத்தோடு வாழ வேண்டுமானல் நாம் சிறிதளவாவது தியாகம் செய்தாக வேண்டும். தியாகம் செய்ய முன்வராவிட்டால் நமது போராட்டம் எதுவுமே வெற்றியடையப் போவதில்லை. கேவலம் சம்பள உயர்வுக்காகவும், பதவி உயர்வுகளுக்காகவும் சிங்களத்தைப் படித்தோமானால், நம்மினத்தைக் காட்டிக் கொடுத்த துரோகிகளாவோம், என்றும் கூறினார்.

திருமலைப் பிரதிநிதி என். ஆர். இராஜவரோதயம் பேசுகையில், தமிழரசுக் கட்சி தமிழ் பேசும் மக்களிடம் அளித்த வாக்குறுதிகளை எந்தவகையிலும் மீறவில்லை. தமிழ் பேசும் மக்களை, கடந்த சத்தியாக்கிரகம் முடிவுற்ற வேளையில் ராணுவத்தினர் இம்சித்தனர். அந்த ராணுவத்தின் தலைவர்கள் இன்று சிறையில் மிகக் கேவலமான நிலையில், ஆட்சியைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருக்கின்றனர் என்று சொன்னர்.

ஜனப் மசூர் மௌலான, ஜனப் கே. எஸ். ஏ. கபூர், வவுனியா பட்டினசபைத் தலைவர் திரு. சுப்பிரமணியம் ஆகியோரும் பேசினர்.

கூட்டத்துக்கு மன்னர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. ஏ. அழகக்கோன் தலைமை தாங்கினர்.




## வாழ்க்கையின் சின்னம்! வாழ்வின் புத்துயிர்!!

ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் நரம்புத் தளர்ச்சி முதலிய பலவீனங்களை ஒரே நாளில் நிவிர்த்தியாக்கும்.

இதற்கு அத்தாட்சியாக கீழே குறிப்பிடும் நற்சாட்சியை வாசியுங்கள்.

Aynr. Dr. T. H. மதுரநாயகம், கதிர்காமம்,
வைத்தியராஜ் M/s T. D. மதுரநாயகம் & கோ., 12-4-1962
ஞானசுந்தர வைத்தியசாலை,
கொழும்பு.

ஐயா,

இன்று எனக்கு 85 வயதாகிறது. நான் கடந்த 55—60 வருடகாலமாய் ஞானசுந்தர வைத்தியசாலையில் பலவிதமான வியாதிகளுக்கு வைத்தியமும் செய்து, பலவித தயாரிப்பு மருந்துக்களும் வாங்கிச் சாப்பிட்டிருக்கிறேன். பூரண சுகமடைந்திருக்கிறேன். முக்கியமாகத் தங்களின் கருணைக்கிழங்கு லேகியம், ரிஷி நேத்திர சஞ்சீவி தைலம், ரிஷி சாலாமிஸ்ரி லேகியம் மிகவும் கை கண்டது. உன்னத



தயாரிப்பு என்பதை முழு மனதோடு உறுதிப்படுத்துகிறேன். இந்த நற்சாட்சி தாங்கள் எவ்விதத்திலும் பிரசுரஞ் செய்யலாம். தங்களின் வைத்திய சிகிச்சையாலும், மருந்துகளின் மகிமையாலும் இன்னும் சுகதேகியாக வாழுகிறேன்.

இங்ஙனம்
லெச்சுமணன் சாமியார்

**30 நாள் மருந்து விலை ரூ. ~~10-00~~**
**15 நாள் மருந்து விலை ரூ. ~~6-00~~**

தபால் பாக்கிங் செலவு -/95 சதம்.

## ஞானசுந்தர வைத்தியசாலை,
## T. D. மதுரநாயகம் & கோ.,

187, செட்டியார் தெரு, கொழும்பு-11.

விபரமடங்கிய கெட்லாக் இனமாக அனுப்பப்படும்.


# தாயகம் செல்லும் கவிஞர் பரமஹம்ஸதாசன்



1948-ல் வருடத்தில் ஏழுர் காளிகோயில் முன்றிலில் இந்திய சுதந்திர ஞாபகார்த்த விழா நடைபெற்றுக் கொண்டிருந்தது. இந்திய தேசியக் கொடியை கம்பத்தில் உயர்த்துவதற்காக எழுந்து சென்ற உருவம் குறிப்பிட்ட பணியைச் செய்து முடிக்காது, வானளாவினின்ற கம்பத்தின் உச்சியில் சுருக்கப்பட்டிருந்த மூவர்ணக் கொடியையே பார்த்த வண்ணம் நின்றிருந்தது. கண்கள் நீரை உகுத்தன. கைகளில் கொடிக்கம்பத்தின் கயிறு இருந்தது.

எவ்வளவு நேரம் தான் பொறுத்திருக்க முடியும்? கூட்டத்திற்குத் தலைமை தாங்கியவர் அந்த உருவத்தை அணுகிகொடியை முடிச்சவிழ்த்துப் பறக்கவிட உதவி செய்தார். ஒலிபெருக்கியின் முன்னின்றார். வார்த்தைகள் எதுவும் வெளிவரவில்லை— உணர்ச்சிக்குன்று— ஆம் அவர் தான் நமது கவிஞர் பரமஹம்சதாசன்.

தூய வெள்ளை உடை அணிவார். அவர் தம் உள்ளத்தின் தூய்மையை எடுத்துக்காட்ட உடைகளின் வெண்மை போதாது. பேச்சிலே மென்மை—நடையிலே மென்மை— உடலிலே மென்மை—அன்பும், அறமும், அகிம்சையும் இவர்தம் ஆயுதங்கள். காரமான பேச்சைக் காண்பது அரிது, ஆனல் அவரது [illegible] உணர்ச்சிகளையும் கிளறிவிடும். உள்ளதை உள்ளபடி எடுத்துரைக்கும் ஆற்றலுள்ள அவர் பேனு, அவரது உள்ளத்தின் தூய்மையையும், தமிழ்ப் பற்றையும், தேசபக்தியையும் எடுத்துக் காட்ட என்றுமே தயங்கியதில்லை.

மட்டக்களப்பு மண்ணிலே கவிஞர் பரமஹம்சதாசன் பல வருடங்கள் புரண்டவர். விபுலாநந்தப் பெருங்கடலுடன் மானசிக உறவு கொண்ட கவிஞர் காவியுடை தரித்த சந்நியாச வாழ்வு பூணவிட்டாலும், பரமஹம்சருடைய அடிச்சுவட்டைப் பின்பற்றி வாழ்பவர், தூய பிரமச்சாரி.

பிரமசரியத்தை வாழ்க்கையில் அனுஷ்டிப்பதில் எண்ணற்ற இடர்கள் ஏற்படக்கூடும். கவிஞர் கண்டிப்பான முறையில் பிரம்மசரியத்தை அனுஷ்டித்ததனுலும், மச்சமாமிசங்கள் பாவிக்காதிருந்தமையினுலும் உடல் உபாதைகளுக்குள்ளானர். நண்பர்கள் பலர் கவிஞரை ஒரு குடும்பஸ்தராக்கிவிட எவ்வளவோ முயற்சிகள் செய்தும் பலனளிக்கவில்லை.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு தேசிய கீதம் அமைத்தல் வேண்டுமென்ற பிரச்சினையை சுதந்திரன் 1958-ல் வெளியிட்டது. தேசிய கீதத்தை இயற்றி அதற்கான பரிசையும் பெற்று, இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உள்ளங்களில் நீங்காத இடத்தைப் பெற்றுக் கொண்டார் கவிஞர் பரமஹம்சதாசன்.

மு. சுப்பராமன் என்பது இவரது சொந்தப் பெயராகும்.

இலங்கையில் தனது கடமைகள் யாவற்றையும் முடித்துக் கொண்டுள்ள கவிஞர் இலங்கையை விட்டுத் தமது தாய் நாடான தமிழகம் செல்லுகின்றார்.

எங்கு சென்றாலும் தமிழ்பேசும மக்களுக்குத் தமது கவிதைகளால் சீரிய தொண்டாற்றுவாராக.

கவிஞருக்கு இலங்கையின் பல பாகங்களிலும் பிரிவுபசார விழாக்கள் நடைபெற்று வருகின்றன. எழுத்தாளர்கள் சார்பில், வளரும் எழுத்தாளர் சங்கத்தால் ஜூன் மாத ஆரம்பத்தில் கொழும்பில் ஒரு பிரிவுபசார விழா நடைபெறவிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொங்கு கடல்போல் உன் படை

# களம் நோக்கிப் புறப்படட்டும்!

## உற்றதுணை புரிவோம் அயராது போரிடுங்கள்!

## எமது அறப் போராட்ட அறை கூவலுக்கு தமிழகத்தின் ஆசியும் வாழ்த்துக்களும்

போருக்குப் புறப்படும் மகனை, ''பகை முறித்து வெற்றிவாகை சூடி வா'' என்று வீரத்தாய் ஆசி கூறி அனுப்புவது போல் ஈழத் தமிழகத்தில் இன்னல்படும் சேய்க்குலமாம் எமக்கு ''உரிமைப் போராட்டம் நடாத்துங்கள்—உறுதுணையாய் நாம் இருப்போம்'', என்று உறுதி கூறுகின்றது தமிழகம். படைபலம் வேண்டாம், பணம் வேண்டாம்—பாராட்டும் உள்ளம் மட்டும் போதும்—பகையை வெல்ல—இதோ! தமிழகத்திலிருந்து வெளியாகும் 'திராவிடஸ்தான்', ''மாலை மணி'' ஆகிய ஏடுகள், ஜூன் 5 துக்கநாள் அறிவிப்புக்கு வாழ்த்துரை வழங்கியுள்ளன.

இலங்கைத் தமிழர்களின் அறப்போராட்டம் மீண்டும் துவங்க இருக்கிறது!

முத்தமிழ் இனத்தைக் காக்க முதுபெரும் கிழவர் புறப்பட்டு விட்டார்!

''சிங்களவரின் கொடுமை இனி தூள் தூள்'' என சிம்மக் குரல் எழுப்பி சிங்கத் தமிழர்கள் புறப்பட்டு விட்டனர்!

''ஜூன் திங்கள் ஐந்தாம் நாள் இலங்கை தமிழ் பிரதேசமெங்கும் துக்கதினம் கொண்டாடப்படும்'' என செந்தமிழ்த் தலைவன் செல்வநாயகம் அறிவித்திருக்கிறார்!

தமிழ் மக்களின் சார்பிலும் தமிழகத்தின் சார்பிலும் அவரைப் பாராட்டுகிறோம்:

''உங்களது அறப்போர் வெல்க, வெல்க'' என வாழ்த்துகிறோம்!

''உங்களது இலட்சியம் வாழ்க, வாழ்க'' என வாழ்த்துகிறோம்!

மமதை பிடித்தலையும் சிங்கள வெறி அடங்கட்டும், ஒடுங்கட்டும்! உங்கள் உயிர் அதற்குப் பயன்படட்டும்'' என வாழ்த்துகிறோம்!

நேர்மை வெல்லட்டும், நீதி வாழட்டும், தமிழ் இனத்தின் புகழ் பரவட்டும்!

செல்வநாயகா, செந்தமிழ்த் தலைவா, உந்தன் குருதி உந்தன் நாட்டை வாழவைக்கட்டும்!

தலைவணங்கா தமிழ் இனத்தின் தலைவா—தடைக் கட்டம் கண்ட தமிழ்ப் பெரும் கிழவா! போர் போர் என முழங்கு, பொக்கைவாயைத் திறந்து முழங்கு! பொழுது புலரட்டும்!

பொங்கும் கடல் போல் உந்தன் படை புறப்படட்டும்! பொல்லாங்கு காயட்டும்!

செந்தமிழன் செந்நீரை விட்டு வளர்த்தான்! இலங்கையை செந்நீர் விட்டு வளர்த்தான்! அவன் கண்டதென்ன? கண்ணீர்! கண்ணீர்!

### இது தண்டனையா?

காடுகளை வெட்டினன், மேடுகளை திருத்தினன்! மலைகளைக் குடைந்தான், மக்கள் வாழும் நிலமாக்கினன்! இது தவறா? இதற்குத் தண்டனையா?

இலங்கையை நாடாக்கியது தமிழன்-ஆனல் அவன் நாடோடி!

இலங்கையை சீர்மிகு நகராக்கியது தமிழன்-ஆனல் அவன் கண்ணிலே செந்நீர்!

இலங்கை செழித்தது தமிழனல், வளம் கொழித்தது தமிழனல்—ஆனல் அவன் வாழ்வு வரண்ட பாலை! இருண்ட காடு!

உழைத்தான், உழைத்தான்—உடல் தேய்கிறவரை உழைத்தான்—அவனுக்கு உரிமை இல்லை! பெருமையில்லை. பெரும் புகழும் இல்லை!

வியர்வையைக் கொட்டி நாட்டை வாழவைத்தான்—ஆனல் அவன் மொழி நசுக்கப்படுகிறது, அவன் மொழி அழிக்கப்படுகிறது!

தமிழன் இல்லை என்றால் சிங்களமில்லை, சிங்கள இனமும் இல்லை! ஆனல் அவனுக்கோ எதுவுமில்லை!

### உரிமை இல்லை

சிங்கள மொழிதான் நாடாள வேண்டுமாம்! செந்தமிழ் மொழிக்கு அந்த உரிமை இல்லையாம்! செப்புகிறார்கள்—சிந்தனையற்றவர்கள்!

சிறுத்தை உறுமிவிட்டால்—சிறு நரிகள் ஓட வேண்டும்—சிங்களவர்களுக்கு இது புரிய வேண்டும்! சென்ற ஆண்டு சிங்கத் தமிழ்ப் படை புறப்பட்டதும்-சிங்களத்தின் கொட்டம் அடங்கியதும் தெரிந்ததே!

சிங்கள மொழியோடு, தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக இருக்க வேண்டும்—இல்லையேல் தமிழ் இனம் கொதித்தெழும் என செல்வநாயகம் முழங்கியதும்—சிங்களக் கொற்றம் அறிந்ததே!

பட்டாளம் வந்தது-தமிழனின் பட்டான உயிரைக் குடித்தது! மறவர் இனம் மண்டியிடவில்லை! மாருகமார் தட்டிக் கிளம்பியது!

தமிழ் பேசும் மக்கள் மட்டுமே வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது!

### போர் முழக்கம்

போட்டி சர்க்கார் நடத்தவும் முயன்றார்கள்! சர்க்காருக்கு எதிராக தனி தபால் நிலையமே இயங்கிற்று! இலங்கைத் தமிழரசுக் கழகத்தை சிங்கள அரசு தடை செய்தது.

தலைவர்களை சிறையிலே பூட்டி வாட்டியது! தமிழனுடைய உடலும், வாடா மலர் என்பதை வகை கெட்டவர்களுக்கு எப்படித் தெரியும்!

முடிவில்—சிங்களம் மண்டியிட்டது! தலைவர்கள் விடுதலையடைந்தனர்!

இன்று மீண்டும் போர் முழக்கம் ஒலிக்கத் தொடங்கிவிட்டது!

தமிழர்களுக்குஇன உரிமை வேண்டும்! தமிழ் மக்கள் வாழும் பகுதியை தமிழர்களே ஆள வேண்டும்! என்ற விடுதலை கீதம் பாடத் தொடங்கப்பட்டு விட்டது.

### ஜூன் ஐந்து

ஜூன் திங்கள் ஐந்தாம் நாள் துக்கதினம் கொண்டாடப்படும்! கடையடைப்பு—அறப்போர்.

தமிழன் என்றுமே கண்ணியத்தை இழக்கமாட்டான்—கடமையில் சிறிதும் தவற மாட்டான்! சிங்கள அரசு இதைப் புரிந்து கொள்ள வேண்டும்!

தமிழனுக்கு உயிர்—அவனது மொழிதான்! இதைப் பறிக்காதே!

தமிழன் தன்மானம் உள்ளவன், தனிப் பெரும் புகழ் படைத்தவன்! அவன் ஒரு காலத்தில் நாடாண்ட பரம்பரையைச் சார்ந்தவன்!

அவன் வாழும் நிலத்தை அவன் ஆள்வதுதான் நியாயம்! நேர்மை!

தமிழன் கருணை உள்ளம் படைத்தவன்—கங்காணி இனத்தவனல்ல! இதனல் ஏமாளி என்றும் எண்ண வேண்டாம்!

அன்புள்ளம் கொண்டவனை ஆயுதத்தால் வெட்டி வீழ்த்துவது அறிவுடைமையாகாது!

இலங்கைத் தமிழர்களுக்கு உரிமையை வழங்கிவிடு! இல்லையேல் மறவன் பெருமை உலகமெங்கும் ஜொலிக்கும்!

# வீழ்ச்சியுற்ற இனத்தை வாழவைக்க வந்தவரே!

## உங்களுக்கு எம் வாழ்த்து

## ''மாலைமணி'' தரும் தலையங்கம்

டெல்லி பாராளுமன்றத்தில், எடுத்த எடுப்பிலேயே நமது மனோகரன், இலங்கைத் தமிழர்களின் அவல நிலையை எடுத்துக் காட்டி முழக்கம் செய்திருக்கிறார்!

இலங்கைத் தீவில் அவதிப்படும் லட்சோப லட்ச தமிழ் மக்களின் சோகக் குரலை அங்கே ஒலியாக்கித் தந்திருக்கிறார்!

''சிங்களத் தீவிலிருந்து இந்தியர்கள் விரட்டப்படுகிறார்கள்! இந்திய சர்க்காரோ கவலைபற்று, கருணை துளியுமற்றுக் கிடக்கிறது—காரணம் என்ன? இலங்கையில் அவதிப்படும் அத்தனை பேரும் தமிழர்கள் என்பதாலா? தென்னாட்டவர் என்பதாலா? திராவிடர்கள் என்பதாலா?'' என்ற வினவையும் எழுப்பி இருக்கிறார்!

மனோகரன் வினவிற்கு, நேரு பெருமகனார் தந்த பதிலில் மறுப்போ, விளக்கமோ இல்லை—மழுப்பல் தான் இருந்தது!

உண்மை நிலையை எப்படி மறுக்க முடியும்? எனவே தான் நேரு மழுப்பி இருக்கிறார்—அது வேறு ஒரு அரசாங்கத்தின் பிரச்சினை என்றும் கூறி இருக்கிறார்!

### கதி என்ன?

தமிழகத்தில் வாழ முடியாமல், தாயகத்தை வெறுத்துவிட்டு—சிங்களம் சென்று சீரழியும் தமிழர்களின் கதி தான் என்ன?

இந்திய சர்க்காரோ இந்த பிரச்சினையைக் கவனிக்கவும் மறுக்கிறது—சிங்கள சர்க்காரோ விரட்டுகிறது! இந்த நிலையில் தமிழன் எப்படி வாழ்வான்? இதயமுள்ளவர்கள் சிந்திக்க வேண்டும்!

சிங்களத் தீவை சிறப்பாக்கியது, சீராக்கியது தமிழன்! சிங்களத் தீவை வளமாக்கியது, வனப்பாக்கியது தமிழன்! அவனுக்கு அங்கே வாழ்வில்லை, வளமில்லை, குடி இருக்க உரிமையும் இல்லை!

பெற்று வளர்த்த இடமும் அவனுக்கு வாழ்வளிக்கவில்லை—சென்ற இடத்திலும் அவனுக்கு சோறு கிடைக்கவில்லை! தமிழ் இனத்தின் தலைவிதி இதுதானா? இதை மாற்றவே முடியாதா?

இலங்கைத் தீவில்—தமிழர்களுக்கு வாழ்வில்லை, வளமில்லை என்பதோடு அவனுக்கு பாதுகாப்பும் இல்லை. அவனது உயிருக்கோ, உடைமைக்கோ ஏதும் உத்தரவாதமும் இல்லை!

சிங்கள அரசாங்கம் கொடுமைப்படுத்துகிறது, இந்த நிலையில் தமிழன் என்ன செய்வான்—உரிமையற்றுக் கிடக்கும் நாம்தான் என்ன செய்ய முடியும்?

### எங்கள் நன்றி

இலங்கைத் தீவில் இயங்கி வரும் தமிழரசுக் கட்சியும், பண்புள்ள தலைவர் செல்வநாயகத்தின் பணியும்தான் நமக்கெல்லாம் கொஞ்சம் மன ஆறுதல்களை அளிக்கின்றன! அவரது பணியால்தான் இலங்கைத் தமிழர்களும் கொஞ்சம் நிம்மதியோடு வாழ்கின்றனர் என்றால் அது மிகையாகாது! அவருக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இது... செல்வநாயகம் ... [illegible] ... எதிர்த்து அறப்போர் நடத்தி, தமிழர்களுக்கு தனி ஆட்சி கோரும் பணியினை நாம் வெகுவாகப் பாராட்டுகிறோம். மறவர் குலத்தின் பெருமையைக் காத்திடும் உங்களை, உங்களது பணியை நாடே பாராட்டுகிறது. அதற்காக நாங்கள் பெருமையும், பூரிப்பும் கொண்டு மகிழ்ச்சியடைகிறோம்.

உங்கள் ... பணியால்தான் அங்கு வாழும் தமிழகத்து தமிழர்களும் கொஞ்சம் மன நிம்மதியைப் பெறுகின்றனர். உங்களது அன்பும் ஆதரவும் அவர்களுக்குத் தொடர்ந்து இருக்க வேண்டும் என்பதே எங்களது ஆசையாகும்!

(9-ம் பக்கம் பார்க்க)

**மத்திய எழுது வினைஞர் பரீட்சை 27-9-62**

❀ பரீட்சை பற்றிய பூரண விபரங்கள்

❀ பரீட்சைத் துணை நூல்கள்

❀ கடந்த கால வினு விடை

என்பனபற்றிய இலவச விபரங்களுக்கு இன்றே எழுதுக.

**அற்லஸ் ஹோல்,**
723, மருதானை றோட், கொழும்பு.

**பாகப்படி மூலித் திராவகங்களால் தயாரிக்கப்பட்டது**

MEVICAR BALM

**மெவிக்கார் பாம்**

இது தலையிடி, தேள்கடி, வாதம், பல்வலி, இருமல், ஜலதோஷம், வெட்டுக்காயம் முதலிய வியாதிகளை நொடிப்பொழுதில் நீக்கி சுய நிலையை அடையச் செய்யும்.

ஒருமுறை உபயோகித்து உண்மை அறியுங்கள்.

எல்லா வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

உங்கள் வீடுகளில் அவசியம் இருக்க வேண்டியது.

உடன் வெட்டுக் காயங்களுக்கு கை கண்ட தைலம்

**விலை போத்தல் ஒன்று ரூ 1-25 சதம்**

பிற ஊர்களில் ஏஜண்டுகள் தேவை.

**கவி கெமிகல்ஸ்,**
19, செட்டியார் தெரு, கொழும்பு-11.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி! பட்டினி! சாக்காடு!
## விடுதலைப் பயணத்தில் கிடைக்கும் பரிசுகள்

### மன்னார் த. அ. க. கூட்டத்தில் அமிர்தலிங்கம்

**"எந்த ஒரு நாடும், எந்த ஒரு இனமும் சும்மா இருந்து சுதந்திரம் பெற்றது கிடையாது. இலட்சக்கணக்கான உயிர்களைப் பலியிட்டுத்தான் ஒவ்வொரு நாடும் சுதந்திரம் பெற்றுள்ளது. நாம் செல்லும் விடுதலைப் பாதை நிச்சயம் சுகமான பாதையாக இருக்காது. பசி, பட்டினி, சாக்காடு இவைதான் நம்பாதையில் குறுக்கிட முடியும்" இவ்வாறு மன்னார் மைதானத்தில் நடைபெற்ற தமிழரசுக் கட்சிக் கூட்டத்தில் பேசும்போது வட்டுக் கோட்டைப் பிரதிநிதி திரு. அ. அமிர்தலிங்கம் கூறினார்.**

அவர் மேலும் பேசுகையில், "1956-ம் ஆண்டு ஜூன் மாதம் 5-ம் தேதிதான் தமிழரசுக் கட்சி இன விடுதலைக்கான நேரடிப் போராட்டத்தில் ஈடுபட்டது. உலகத்தின் ஏனைய நாடுகளில் நடைபெற்ற போராட்டங்கள் பல நூறு வருடங்களும் தொடர்ந்து நடைபெற்றிருக்கின்றன. ஆறுவருடங்கள் போரிட்டதுமே நமக்குச் சோர்வு மனப்பான்மை தட்டிவிடுகிறது. நமது அண்டை நாடான இந்தியாவின் விடுதலைப் போரைச் சீர்படுத்திச் செப்பனிட்டு, காந்திஜியின் அடிச்சுவட்டில் சென்ற காங்கிரஸ் தொடர்ந்து 90 வருடங்கள் ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போரிட நேர்ந்தது. காந்திஜி நடத்திய உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு 10,000க்கு அதிகமானோர் சிறை சென்றனர். உடனடியாகச் சுதந்திரம் கிடைத்ததா? அம்மக்கள் சோர்வடைந்தார்களா?"

#### இராட்டினமே ஆயுதம்

"வெள்ளையனே வெளியேறு'; என்று கோஷமிட்டனர். சுதேசப் பொருள் மோகத்தை மக்களிடம் வளர்த்தனர். அது மட்டுமா? இந்திய விடுதலையை அஹிம்சை முறையில் பெற முடியாது என்று கண்ட நேதாஜி சுபாஷ் சந்திர போஸ், வெளியேறிச் சென்று இந்தியத் தேசியப் படையை, அந்நிய நாட்டின் துணையுடன் நிறுவினார்.

ஆனால் இராட்டினம் ஒன்றையே மகாத்மா காந்தி ஆயுதமாகக் கொண்டார். இன்று நாம் சத்தியாக்கிரகம் என்று கூறும் போதெல்லாம் நம்மைக் கேலியும், கிண்டலும் செய்யும் நம்மவரும், மற்றையோரும் காந்தி தாங்கிய இராட்டினத்தை


திரு. அ. அமிர்தலிங்கம்

எண்ணிப்பாருங்கள் அன்றும் இராட்டினத்தையும், காந்திஜியின் கோலத்தையும் கிண்டல் செய்யத்தான் செய்தார்கள்-இன்று நம்மைக் கிண்டல் செய்வது போல.

ஆங்கிலேயர்களிடமிருந்து விடுதலை பெற ஐரிஷ் மக்கள் 300 ஆண்டுகள் தொடர்ந்து போரிட்டனர். அல்ஜீரிய மக்கள் தங்கள் விடுதலைக்காக இன்றுவரை 10 லட்சம் மக்களைப் பலி கொடுத்துள்ளனர். இன்னும் அவர்களது போராட்டம் ஓயவில்லை.

இறந்தவர்களின் கல்லறைகளிலிருந்துதான் சுதந்திர சமுதாயம் உருவாக முடியும் என்று ஒரு இத்தாலிய நாட்டு வீரன் கூறினான். அதேபோன்றுதான், நம் மக்களும் நமது இன விடு

(13-ம் பக்கம் பார்க்க)

### மன்னார் கடைத் தெருவில் ஒற்றுமை உறுதி

**தமிழரசுத் தந்தையின் தலையீடு வெற்றி அளித்தது**

மன்னார் கடைத் தெருவில் கடை வைத்திருக்கும் வர்த்தகர்களிடம் சில பிணக்குகள் இருந்து வந்தன. அந்தப் பிணக்குகள் நீங்கி இன்று ஒற்றுமை ஏற்பட்டுள்ளது.

கடைகளை சாப்புச் சட்டத்துக் கமையப் பூட்டும் ஒழுங்குகளில் இதுவரை கருத்து வேற்றுமைகள் நிலவி வந்தன. தமிழரசுத் தந்தை திரு. எஸ் ஜே. வி. செல்வநாயகம் அவர்களின் வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து வர்த்தகப்பெருமக்கள் கடந்த வாரத்திலிருந்து ஒற்றுமையாக இயங்குவதாக ஒப்புதல் அளித்துள்ளமை அப்பகுதிப் பெருமக்களின் பரந்த மனப்பான்மையைக் காட்டுகின்றது.

#### ஜூன் 5

ஜூன் 5-ம் திகதி தமிழ் பேசும் மக்கள் வதியும் பிரதேசங்களில் துக்க நாள் அனுஷ்டிக்கப்படும் போதும்,மன்னார்கடைத் தெரு வர்த்தகப் பெருமக்களும் ஒற்றுமையாக கறுப்புக்கொடிகள் கட்டி, கடைகளைப் பூட்டி ஹர்த்தால் நடத்துவார்களெனப் பெரிதும் நம்பப்படுகிறது.


சிறந்தது! சிக்கனமானது! சிந்தனையூட்டுவது!




யானை பீடி

காரம், மணம், குணம் நிறைந்த யானை பீடி, புகைப்போருக்கு புத்துணர்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கவல்லது. தொழிலாளிகளும், திறமைசாலிகளும் விரும்புவது யானை பீடியே உழைப்புக்கு உறுதியான உற்சாகத்தைக் கொடுப்பதும், அந்த உழைப்பில் கிடைக்கும் ஊதியத்துக்கேற்ற சிறந்து புகைக்கும் நிகரற்ற பீடி யானை பீடியே! புகைப்பதினல் பூரண திருப்தி பெற யானை பீடி புகையுங்கள்!

யானை பீடி கம்பெனி,
62, மெசஞ்சர் வீதி, கொழும்பு. தொலை பேசி 7651


## மக்கள் குரல்

### கொம்யூனிஸ்டுகள் துப்பாக்கி யுத்தம்

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் பத்திரிகையின் கடந்த வார இதழின் (26. 5. 62) கடைசிப்பக்கத்தில், சென்ற 19-ம் திகதி யாழ் முற்றவெளியில் நடந்த கட்சிக் கூட்டத்தில் ஒரு யாழ் கம்யூனிஸ்ட் தலைவர் பேசியவை வெளியாகியுள்ளன.

அதில் அவர் "நாங்கள் போராடத் தொடங்கினல் தமிழரசுக் கட்சியைப் போல் கச்சேரி வாசலில் குந்தியிருந்து விட்டுப் போக மாட்டோம், சமயம் நேர்ந்தால் அவசியம் ஏற்பட்டால் துப்பாக்கி ஏந்திப் போராடவும், தயங்காதவர்கள் கம்யூனிஸ்ட் கட்சியினர்" என்று சூளுரைத்ததாக வெளிவந்தது. இது தமிழ் பத்திரிகையின் உருவம், வீரத்தோற்றம். தாம் தமிழுக்காக இப்படியும் போராடுவோம் என்று வீரமுழக்கம் செய்தவர்—தமிழ் பத்திரிகையில்.

அதே கட்சியின் ஆங்கிலப் பத்திரிகையில் அதே நபரின் பேச்சு பிரசுரிக்கப்பட்டுள்ளது. ஆனல் சமயம் நேரின் துப்பாக்கி எடுத்தும் போராடத் தயங்க மாட்டோம் என்று கூறிய பகுதி தணிக்கையாகியுள்ளது. இது சிங்களவர்களுக்குப் போகும் பத்திரிகை. அவர்களுக்கு வேறோர் உருவம்; முழுத் தகிடுதத்தம்; கபடம்.

தமிழ் மக்களுக்கு ஒன்று கூறுகிறார்கள். சிங்கள மக்களுக்கு வேறென்று கூறுகிறார்கள், முழுச் சந்தர்ப்பவாதிகள். யாழ்ப்பாணத்தில் தமிழுக்கு ஒத்து ஊதுகிறார்கள். சிங்களப் பகுதிகளில் தனிச் சிங்களத்தைச் சீராட்டி வளர்க்கிறார்கள். வேண்டுமாயின் துப்பாக்கி கொண்டும் போராடுவோம் என்று தமிழருக்கு கூறினர். அச்செய்தி சிங்கள மக்களுக்கு எட்டும் என்று கண்டு ஆங்கிலப் பத்திரிகையில் அதைத் தணிக்கை செய்துள்ளனர். இதுவே கம்யூனிஸ்ட்டுகளின் கபடத்தை உள்ளங்கை நெல்லிகனிபோல் காட்டுகிறது.

அவர்கள் நூறு சதவிகிதம் பலாத்காரவாதிகள் என்பதை இந்தப்பேச்சு தெளிவுபடுத்துகிறது. பாராளுமன்றத்தில் நான்கே ஸ்தானங்களை வைத்துக்கொண்டு தேய்ந்து வளரும், வளர்ந்து தேயும் ஒரு சின்னஞ்சிறு கட்சி அரசாங்கத்தின் பலம் வாய்ந்த முப்படைகளையும் எதிர்த்து துப்பாக்கி ஏந்திப் போராடப் போகிறதென்பது ஒரு கேலிக்கூத்து

சி. க. சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்.

### அறிக்கைகள் போதும் செயல்படுங்கள்

தமிழ்க் காங்கிரசின் கொழும்புக் கிளை, திரு. செல்வநாயகம் தனிச் சிங்களத் திணிப்பை எப்படி எதிர்க்க வேண்டும் என விடுத்த அறிக்கையைக் கண்டித்து, மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சர்வகட்சி மகாநாடு கூட்டுவதையன்றி வேறு வழி இல்லையென வற்புறுத்தியுள்ளது.

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியிலிருந்து ஆனைப்பந்திக் காங்கிரஸ் எனப் புனைப்பெயர் பெற்ற காங்கிரஸ் தற்போது கொழும்பில் சரணடைந்து அறிக்கை விடுவதாலும், சமஷ்டிக் கட்சியை எதிர்ப்பதாலும் புத்துயிர் பெற நினைப்பது பகற்கனவாகத்தான் முடியும். மற்றவர்களுக்குப் போதனை செய்வதையும் அவர்களை எதிர்ப்பதையும் கைவிட்டு விட்டு தாங்களாகவோ,அல்லது ஆளும் கட்சியையோ மறுகட்சிகளையோ அண்டியோ எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதில் ஒரு சிறிதளவாகிலும் முன்னேறுவார்களேயானல் அது அவர்களுக்கு ஏதாகிலும் பயன்தரலாம். அறிக்கைகளும் எதிர்ப்பும் போதும். செயல் படுத்திப் பலனைக் காட்ட இதுவே தருணம்.

சு. நன்னித்தம்பி.
சுதுமலை.

### இடைத் தேர்தலில் வாக்காளர் கடமை

தேச நலனையும், குறிப்பாகத் தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கத்தையும்கொண்ட சுதந்திரன் திரும்பவும் மக்கள் கையில் பவனி வருவதைக் கண்டு மகிழ்கின்றார்கள் மக்கள். எனவே இக்கடிதத்தை வெளியிடுமாறு வேண்டுகிறேன்.

ஈழத்து மக்கள் சுதந்திரம் பெற்று விட்டனர். ஆனல் தமிழ் மக்களின் சுதந்திரம் பேச்சளவில் தானிருக்கிறது. மொழி, நில, குடி உரிமைகள் எல்லாம் பறிக்கப்பட்டு விட்டன. இந்த இக்கட்டான கட்டத்தில் தான் இடைத் தேர்தலும் நெருங்கி வருகிறது. சிந்தித்துச் செயலாற்றும் தேவை எம்மை எதிர்நோக்கி இருக்கிறது. பல கட்சிகள் வாக்கு வேட்டை ஆடப் போகிறார்கள். எந்தக் கட்சிக்கு வாக்களித்தால் வருங்காலத் தமிழ் பேசும் மக்களுக்கு வாழ்வு உண்டு என்று எண்ணிச் செயலாற்றும் பொறுப்பு எம்மைச் சார்ந்திருக்கிறது.

தமிழுக்கும் சம உரிமை தர முன்வந்த கட்சிகள் தமிழ் உணர்வையே கொல்லும் கட்சிகளாக மாறிவிட்டன. அது மட்டுமா தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களின் வருடச் சம்பள உயர்வை, சிங்களத்தில் தேர்ச்சி அடையவில்லை என்ற காரணத்திற்காக நிறுத்தி வைத்திருக்கும் ஆட்சியாளரின் கட்சியும், ஒருசில 'எட்டப்பன் கூட்டத்தாருடன், கிழக்கிலங்கையிலும் போட்டியிட முன் வருகிறதாம். இவர்களுக்கு மக்கள் தகுந்தபடி பதில் கொடுப்பார்கள் என்பதில் ஐயப்படத் தேவையில்லை.

தமிழ் பேசும் மக்களின் நல்வாழ்வுக்காக, அழகு தமிழையும் அரியாசனத்தில் அமரச் செய்யவும், அரசுரிமை எமக்களிக்கவும், நம்மை நாமே ஆளும் பொறுப்பேற்கவும், எவருக்கும் சரிநிகர் சுபீட்ச வாழ்வு மலர அயராது உழைக்கும், கடமை, கண்ணியம், கட்டுப்பாடு பொருந்திய கட்சிக்கு வாக்களித்தால் வாழ்வு மலரும். கண்களை விற்றுச் சித்திரம் வாங்குதல் மடமைதானே. நமது கையில் தான் வாழ்வும் தாழ்வும்.

அடிமை வாழ்வா அல்லது சுதந்திர வாழ்வா எமக்கு வேண்டும்? இதனை உணர்ந்து வாக்காளிப் பெருமக்கள் செயலாற்ற வேண்டும் எதிரே வரும் இடைத் தேர்தலில்.

கரவைச் சலீம்
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருதலைக் கொள்ளியாக உருண்டு வரும் பொதுவுடமைவாதிகள்!

## சுதந்திரம் பறிபோன பின் பொருளாதாரம் யாருக்கு?

## அதிகாரத்தைப் பங்கிட்டுக் கேட்பது எப்படித் தவருகும்?

—கே எஸ். ஏ கபூர்—

தமிழ் பேசும் மக்கள் உரிமைத்தாகம் கொண்டு, இன எழுச்சியின் மகத்துவத்தை உணர்ந்து—மொழிப்பற்று பீறிட்டவர்களாகத் திரண்டெழுந்து, இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக எதையும் இழக்கத் துணிந்து, போராடிக் கொண்டிருக்கின்ற நேரத்தில் கம்யூனிஸ்டுகள் என்போர் சில அப்பாவித் தமிழ் பேசும் மக்களின் மதியை மயங்க வைத்துப் பொருளாதாரத் திட்டம் என்னும் போலி வர்ணத்தைக் காட்டி அவர்களை வளைத்துப் பிடித்துக் கொள்ள முயற்சி செய்கின்றன. எங்கோ இருக்கின்ற ரஷ்யாவின் பொருளாதாரத்தையும்—அரசியல் சட்டத்தையும் வைத்துக்கொண்டு இங்குள்ள பொதுவுடமைவாதிகள் மலைநாட்டில் வளருகின்ற தேயிலைச் செடி மன்னாரில் ஏன் கொழுந்துவிட்டு வளராது; மன்னாரில் வளருகின்ற முந்திரிகைச செடி மலைநாட்டில் ஏன் வளர முடியாது என்று அறிவுக்குப் பொருத்தமற்ற முறையில் விவாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இலங்கை அரசியல் சட்டம் ஒரு பெரும் தேசிய இனத்திற்கு மாருக வகுத்து வைத்து அடக்குமுறை தர்பாரில் நடந்து கொண்டிருக்கின்றது என்ற உண்மையை பொதுவுடமை வாதிகளுககு எடுத்துச் சொல்லியும் புரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றார்கள். அதனால் பொருளாதாரம் பொருளாதாரம், என்று ஓயாது கத்திக் கொண்டிருக்கும் இவர்கள் இலங்கைக்கேற்ற ஒரு பொருளாதாரத் திட்டத்தை இன்றுவரை பயன்படக்கூடிய வழியில் வெளியிட்டதே கிடையாது. இனிமேலும் வெளியிட வேண்டுமென்ற எண்ணமும் கிடையாது.

அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் முதலாளி தொழிலாளி கூச்சல் ஒன்றுதான். இதைக் கொண்டே தான் அவர்கள் பாமர மக்கள் மத்தியிலே அவர்களை ஏமாற்றிப் பவனி வந்து கொண்டிருக்கின்றார்கள்.

### பொருளாதாரமா, சுதந்திரமா? எது முதல்?

இனவிடுதலையில் வீறுகொண்டெழுந்து வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கும் தமிழரசையும், தமிழ் பேசும் மக்களையும் பார்த்து "பொருளாதாரம்" என்று காலம் நேரம் அறியாது கத்திக் கொண்டிருக்கும் பொதுவுடமைவாதிகள் ஓர் இனத்திற்குப் பொருளாதாரத்தை விட சுதந்திரம் தான் முதல் முக்கியம் என்பதை எப்படியோ உணர முடியாதவர்களாகி விட்டார்கள். அடக்கு முறைச் சட்டத்தால் அடக்கி ஒடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எந்த இனமும் சுதந்திரத்தை மிதித் தொதுக்கி விட்டு, பொருளாதாரத் திட்டத்திற்காகப் போராடியதாக சரித்திரத்தில் நம்மால் பார்க்கவே முடியாது. ஏன் ரஷ்யாவின் தந்தை—"லெனின்" கூட ஜார் எதிர்ப்புப் புரட்சி வெற்றியடையு முன் பொருளாதாரத்தைப் பற்றிக் கவலைப்பட்டது கிடையாதே!

முதலில் ரஷ்யா மக்கள் விடுதலை அடைய வேண்டும் என்றுதானே அவரும் தொடர்ந்து புரட்சியை நடத்திக் கொண்டிருந்தார். அப்படியிருக்க அவரின் சிஷ்யர்கள் மட்டும் எந்தச் சரித்திரத்தை வைத்து சுதந்திரத்திற்கு முன் பொருளாதாரம் தேவை என்று தமிழரசுக் கட்சியைப் பார்த்துக் கேட்க முடியும்?

### இனப் பாதுகாப்புத்தானே சமஷ்டி!

இருதலைச கொள்ளியாக உருண்டு வரும் இப்பொதுவுடமைவாதிகளின் பொருளாதாரம் இலங்கைக் குப் பொருந்துமென்று விவாதத்திற்காக நாம் ஏற்றுக் கொண்டு—சோவியத் யூனியனின் அரசியல் சட்டத்தைப் பற்றிக் கேட்டால் அதற்கு எதை எதையோ கூறி மூடி மறைக்கின்றார்கள். சமஷ்டி என்னும் இனப்பாதுகாப்பு இலங்கைக்குத் தேவையில்லை என்று அதைப் பற்றித் தெரிந்து கொள்ளாமலேயே பேசிக் கொண்டிருக்கின்றார்கள்.

இலங்கைக்கு ஒவ்வாத ஒற்றையாட்சி அரசியல் சட்டத்தின் பெயரில் இரு பெரும் தேசிய இனங்களில் ஒன்ருன தமிழ் தேசிய இனத்தை நிர்மூலமாக்கி ஓர் ஏகாதிபத்திய அரசை உருவாக்கத் துடிதுடித்துக் கொண்டிருக்கும் துட்டகைமுனு வாரிசுகளையும்—அவர்களின் மனித நீதிக்கப்பாற்பட்ட அன்ருட செயல்களையும் சட்டத்தையும் சரி எனக் காணும் பொதுவுடமைவாதிகள் தம் விசுவாசத்திற்குரிய லெனின் சித்தாந்தத்தையும்—சோவியத் யூனியனின் அரசியல் அமைப்பையும் தெரிந்து கொள்ளத் தவறியது ஆச்சரியமாகவே இருக்கின்றது.

### உரிமை வழங்கினுர் லெனின்

1917-ம் ஆண்டு ஜார் புரட்சி முடிந்தபின் லெனின் வெளியிட்ட "தேசியப் பிரச்சனை" என்ற அறிக்கையில், ஜார் ஆட்சியில் அமுக்கப்பட்ட நாடுகள் சுயமாகப் பிரிந்து போக நினைக்கின்றதா அல்லது, தொடர்ந்து ரஷ்யாவுடன் இணைந்து வாழப் போகின்றதா என்று கேட்டிருந்தார். ஆனல் அமுக்கப்பட்ட சில நாடுகள் லெனினுக்குப் பயந்து தன் கருத்தை வெளியிடத் தயங்கி நிற்கின்றன. சாடையிலே இதைத் தெரிந்து கொண்ட லெனின் மீண்டும் அதே அறிக்கையை வற்புறுத்தி, அமுக்கப்பட்ட எந்த நாடும் விரும்பினுல் பிரிந்து போகலாம், ஓர் இனம் அடக்கு முறைக்கு உட்படாது தனித்து வாழ்ந்தால்தான் தன்னலனுக்கும் உலக நலனுக்கும் அதனுல் உழைக்க முடியும், சிறுபான்மை மக்களை அடக்க ஒடுக்க நினைத்த ஏகாதிபத்தியங்கள் சட்டப்படி மலையேறி விட்டன, எனவே எனது எதிர்ப்புக்கஞ்ச வேண்டாம், விரும்பினுல் பிரிந்து போகலாம், என்று மறு அறிக்கையை விடுத்தார்.

அதன்படி உடனே பின்லாந்து, போலந்து, போன்ற பகுதிகளின் சுயாட்சி விருப்பத்தை லெனின் ஏற்று அவைகளுக்குத் தனி ஆட்சி வழங்கினுர். அன்று அவர்கள் மேலும் அடக்கப்பட்டிருந்தால் இன்று அந்த இனங்கள் உலகத்தில் தலைநிமிர்ந்து வாழ முடியாது போயிருக்கும். உலகிற்கு அதிகமான எழுத்தாளர்களைத் தந்திருக்க மாட்டார்கள். நோபல் பரிசைப் பெற்றிருக்கவும் மாட்டார்கள். இந்த உண்மையையும்—லெனின் சித்தாந்தத்தையும் ஈழத்துப் பொதுவுடமைவாதிகள் தெரிந்தும்தானு தமிழ் பேசும் மக்கள் இன முழக்கமிடுவதைத் தவறு என்று சொல்கிருர்கள்?

### இன உணர்வில்லாதவர்கள்

அங்கே அல்ஜீரியாவுக்கு சுதந்திரம் வழங்கவேண்டுமென்கிருர்கள். ஆபிரிக்காவுக்கு தனி உரிமை கொடுக்க வேண்டுமென்கிருர்கள். இங்கே தனிச் சிங்களச் சட்டத்தின் மூலம் ஒரு தேசிய இனம் அழித்தொழிக்கப்படுவதைச் சரி என்று கைதட்டி வரவேற்கின்ருர்கள். இவர்கள் எந்த நாட்டில் வளர்ந்தாலும்—வாழ்ந்தாலும் அந்நாட்டுக்கும்—மக்களுக்கும் நம்பிக்கைத் துரோகமிழைத்தவர்களாகத்தானிருக்கின்ருர்கள். இந்தியா, திபேத் போன்ற நாடுகளே நமக்கு சாட்சி.

ஒன்றுக்கு மேற்பட்ட தேசிய இனங்களை உள்ளடக்கிய நாடுகளில்

(15-ம் பக்கம் பார்க்க)

---

பொருள் வளம் சிறக்க 3:

# வளமிக்க மங்கள நாடாக யாழ் நகர் மாறும் நாள் எந்நாளோ?

## ஆக்க வேலைகளுக்கு ஊக்கம் அளிப்பது பணம் படைத்தோர் பொறுப்பாகும்

இன்றைய எம் சூழ் நிலையில் பொருள வளம் சிறக்க வழி தேட வேண்டியது மிக மிக முக்கியம். இன்றைய மக்களின் நிலையிலும், அரசியலின் அவலப் போக்கிலும் சிக்குண்டு கிடக்கும் பொருளாதாரம் நிலையான ஆதாரமாக நாட்டிற்கும் எமக்கும் பயனளிக்கும் வழி வகைகளை ஒவ்வொரு உள்ளமும் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியது அவசியமாகும்.

> பொருள் வளம் சிறக்க... என்ற தலைப்பின் கீழ் ஏற்கனவே இரு கட்டுரைகள் வெளியாகியிருந்தன. இது மூன்ருவதாகும்.
>
> வடக்கு, கிழக்கு மாகாணப் பொருளாதார வளர்ச்சிக்கு வாசகர்களிடமிருந்து ஆலோசனைகளையும், கட்டுரைகளையும் மேலும் எதிர்பார்க்கிறேம்.

ஈழத்தாயின் மூளைப் பகுதியென விளங்கும் யாழ் நகர், கற்பக தருவாம் பனை வளத்திற்குக் குறை போகாத இடமாகும். பருத்தித்துறைப் பகுதி ஒருபடியென்ன இருபடி மேலான பனை வளத்தையுடையது. இந்தப் பனைப் பிரயோகத்தைப் பாழ் வழியில் பயன் படுத்தும் முறையொழிந்து வாழ்வளிக்கும் நிறை வழியில் செய்துதவுவதற்கு முயல வேண்டும். அப்படி முயற்சியை யெடுப்பதற்கும் எடுத்த முயற்சிக்கு ஆதரவு தேடும் வகைக்குமே இதனை எழுதலுற்றேன்.

சென்ற இருபத்தைந்து முப்பது ஆண்டுகட்கு முன்னர் என நினைக்கிறேன் 'பொலிகண்டி' என்னுமிடத்தில் ஐரோப்பியர் சிலரால் ஒரு சீனி உற்பத்தித் தொழிற்சாலை நிறுவப் பட்டது. பெரிய அளவில் குறைவற்ற திட்டங்களோடு நிறுவப்பட்ட அந் நிறுவனம் பேராசைக்காரர்களாலும், அண்டினவரைக் கெடுக்கும் நம்மவர் சிலராலும் பெரு நட்டத்துடன் மூடப்பட்டு

### "புலோலியாள்"

விட்டது. அன்று அதை நல்ல முறையில் கொண்டு செலுத்தியிருந்தால் இன்று இலங்கையிலேயே சிறந்த சீனி உற்பத்தித் தொழிற் சாலையாகி வேலையில்லாத் திண்டாட்டமும் நீங்கி வடபகுதி வளம் பெற்றிருக்கும்.

அன்று அழிந்த சீனி உற்பத்திச்சாலை மீண்டும் சிறிய அளவில் தொடங்கப்பட்டு விரும்பத்தக்க முறையில் நடைபெற்று வருகி[illegible] வுற்பத்திச்சாலையை பெருமதியான மூலதனங்கள் போட்டுப் பெரியதோர் நிறுவனமாக்கப்பெரு முதலாளிமார்களாயினும் அரசாங்கமாயினும் முன்வர வேண்டும்.

வடபகுதியில் இறக்கப்படும் கருப்ப நீரைச் சேர்த்து சீனி, பனங்கட்டி முதலானவைகளை உற்பத்தியாக்கலாம். மேலை நாடுகளிலிருந்து பல வகையான இனிப்புகளை (நோய்களும் கூட வரத்தான் செய்யும்) வரவழைக்கிறேமல்லவா? அதற்குப் பதிலாக நம்முடைய தூய்மையான நோயற்ற தன்மை வாய்ந்த சீனி, பனங்கட்டி முதலியவைகளை உபயோகித்தால் என்ன? நாகரீக மில்லையா? பொருளாதாரம் வளர்ந்து விடும் என்ற பயமா?

பாணிப் பனட்டி. இது மேலை நாட்டிலிருந்து வரும் சொக்கிலேட்டிலும் பார்க்க உருசியும், ஆபத்தற்றதுமாகும். பாணிப் பனட்டை அபிவிருத்தி செய்து நாடு முழுமையும் பரவவிட்டால் எம்மவரது வாழ்விற்கும் வழி பிறக்கும். பொருளும் செழிக்கும். அவற்றேடு பிற நாட்டிலிருந்து வரும் ஜாம் (Jam) வகைகளையும் பனையின் பிரயோசனங்களிலிருந்து [illegible] எவ்வளவு நன்மை பயக்கும்!

(15-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்துடன் இந்த அடையாளத்தை பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும், மலஜலத்தை சுகமாகக் கழித்து அசதி, சோம்பல் மேல் கால், கை, கணுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, திரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து நெஞ்சடைப்பு, சகல வித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அனேக வியாதிகள் தீரும். சிலகாலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூபா 5-75. சிறியது ரூபா 3-00.

இத்துடன் "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லால் எழுதினுல் இனமாக அனுப்புவோம்.

பெரியது ரூபா 5-50. சிறியது ரூபா 3.00.

வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:

ஆனந்தா வைத்தியசாலை,

நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு—11.

# சுதந்திரன்
SUTANTIRAN

1962 ஜூன் மாதம் 3-ந் தேதி

194 ஏ, பண்டாரநாயக்க மாவத்த, கொழும்பு - 12.
தொலை பேசி எண் : 3411 த. பெ 1183


## ஜூன் ஐந்து துக்க தினம்

ஜூன் ஐந்தாம் திகதியைத் தமிழ் பேசும் மக்கள் ஹர்த்தால் நடத்தித் துக்கதினமாக அனுட்டிக்குமாறு திரு. செல்வநாயகம் அறிக்கை விட்டுள்ளார். தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரையில் இத்தினம் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அத்தோடு இன்றையச் சூழ் நிலையிலே இத்தினத்தில் ஹர்த்தால் அனுட்டிப்பதால் தமிழ் பேசும் மக்கள் விழிப்புடன்தான் இருக்கிறார்களென்பதையும் எடுத்துக் காட்ட முடியும்.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் மொழியுரிமையைப் பறித்து அவர்களை நடைப் பிணங்களாக்கும் பொருட்டு சிங்களம் மட்டும் சட்டத்தை இயற்றிய தினந்தான் ஜூன் 5-ந் திகதி. இச் சட்டத்தை எதிர்த்து காலிமுகக் கடற்கரையில் தமிழரசுக் கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் அஹிம்சா முறையில் சத்தியாக்கிரகம் நடத்தியபோது ஆட்சியாளர்கள் காடையர் கூட்டத்தை அவர்கள் மீது ஏவிவிட்டு சத்தியாக்கிரகிகளை அடித்துத் துன்புறுத்தி இரத்தக் களரி ஏற்படுத்தியதும் இந்நாளில்தான். தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரலை அடக்கச் சிங்கள ஆளும் வர்க்கம் பலாத்காரத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்ததும் இந்தத் தினத்தன்றே. ஆதலின் இந்தத தினத்தைத் தமிழ் பேசும் மக்கள் என்றுமே மறக்க முடியாது. மற்றொரு வகையிலும் ஜூன் 5-ந் திகதி முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

1958-ம் ஆண்டு சிங்கள வெறியர்களின் பேயாட்டத்தை யொட்டி எழுந்த வகுப்புக் கலவரத்தின் விளைவாக தமிழரசுக் கட்சித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்ட தினமும் ஜூன் 5-ந் திகதியே. அத்துக்க தினத்தையும் தமிழ் பேசும் மக்கள் மறந்துவிட முடியாது. ஆகவே இவ்விரு முக்கிய சம்பவங்களும் நிகழ்நந்த நாளை நினைவூட்டு முகமாகவே ஜூன் 5-ந் திகதியில் ஹர்த்தால் நடைபெறவிருக்கிறது.

ஹர்த்தால் என்றதும் சில பிரகிருதிகள் சிம்மசொற்பனம் கண்டவர்கள் போல் பீதியடைந்து விடுகிறார்கள். ஹர்த்தால் நடத்தினால் சிங்கள மக்களுக்குக் கோபம் வந்துவிடுமாம். அவர்கள் ஆத்திரப்படுவார்களாம். என்னே மதியீனம்! ஹர்த்தால் என்பது சிங்களப் பெருமக்களுக் கெதிரான நடவடிக்கையல்ல என்பதைக் கூட அவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. தமிழ் பேசும் மக்களின் போராட்டங்கள் எவ்வகையிலும் சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிக்கவோ, அவர்களின் மொழி, கலை, கலாசாரம் முதலியவைகளுக்கு பாதகம் விளைவிக்கவோ மாட்டா. அவர்களுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டுமென்ற நோக்கம் இம்மியளவுகூட தமிழ் பேசும் மக்களுக்குக் கிடையாது. தமிழ் பேசும் மக்கள் போராடுவதெல்லாம் அவர்கள் இழந்து போன உரிமைகளை மீண்டும் பெறுவதற்காக மாத்திரமே. இப் போராட்டங்கள் எவ்வகையிலும் சிங்கள மக்களைப் பாதிக்க மாட்டா. பறிக்கப்பட்ட உரிமைகளை மீண்டும் கேட்பது சிங்கள மக்களுக்கு எதிரான செயலென்று எப்படிக் கூற முடியும்? திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் முன்பு ஒரு சந்தர்ப்பத்தில் கூறியதைப் போல தமிழ் பேசும் மக்கள் மூச்சு விடுவது கூட தங்களுக்கு விரோதமான செயலென்று சிங்கள மக்கள் கருதினால், அதற்காக அவர்கள் மூச்சு விடுவதை நிறுத்திவிட வேண்டுமா? நிறுத்தி விடத்தான் முடியுமா?

தமிழ் பேசும் மக்கள் எதையும் ஆரம்பத்தில் எதிர்ப்பார்கள். விரைவில் எதிர்ப்பைக் கைவிட்டு சரணாகதியடைந்து விடுவார்கள் என்னும் ஒரு தப்பபிப்பிராயம் திரு. டி. எஸ். சேனநாயக்கா போன்ற சிங்கள அரசியல் வாதிகளிடமிருந்து வந்தது. இன்றும் அதே எண்ணத்தைக் கொண்டுள்ள சிங்களத் தலைவர்கள் இப்போதெல்லாம் தமிழ் பேசும் மக்கள் ஓய்ந்து விட்டார்களென திர்க்கமாக முடிவுகட்டி விட்டார்கள். இல்லை—இது தவறான முடிவு. உரிமைப் போராட்டம் ஓயவேயில்லை. உரிமைகள் கிடைக்கும் வரை அது தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டுதானிருக்கும் என்பதை ஜூன் 5-ந் திகதி நடக்கவிருக்கும் மகத்தான ஹர்த்தால் ஆட்சியாளருக்கும் இதர சிங்களத் தலைவர்களுக்கும் வெளி உலகத்துக்கும் தெளிவாக உணர்த்தட்டும்!

இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை; அவர்களின் போராட்டங்கள் அனைத்தும் அஹிம்சையையும் சத்தியத்தையும் அடிப்படையாகக் கொண்டவை. காந்திமகான் காட்டிய வழிதான் அவர்களின் வழி என்ற கருத்து உலகம் முழுதும் பரவியதால் தான் உலக அனுதாபம் இதுவரை நம் பக்கம் இருந்தது. தெரிந்தோ தெரியாமலோ சடுகளவுகூட பலாத்காரம் நமது இயக்கத்தில் கலந்து விடும் பட்சத்தில் அந்த அனுதாபத்தை நாம் கண்டிப்பாக இழந்து விடுவதோடு, அவர்களின் வெறுப்பையும் நாம் தேடிக் கொள்ள வேண்டிய நிலை ஏற்படும். ஆகவே உலக அபிப்பிராயத்தை நமக்குச் சாதகமாகத் திரட்டும் பொருட்டு இந்த ஹர்த்தாலை முழுக்க முழுக்க சாத்வீக முறையில்தான் நடத்த வேண்டும்.

ஹர்த்தால் தினத்தன்று பலாத்காரச் சம்பவங்களைத் தூண்டிவிட்டு மீண்டும் அடக்குமுறைப் பேயாட்டத்தைக் கட்டவிழ்த்துவிட ஆட்சியாளர்கள் திட்டமிட்டு முயற்சி செய்யக் கூடும். அதற்காகத் தமிழ் பேசும் மக்கள் மத்தியிலுள்ள ஐந்தாம் படையினரைப் பயன்படுத்திக் கொள்ளவும் ஆட்சியாளர் தயங்க மாட்டார்கள். போராட்டங்கள் ஏற்படும் போதெல்லாம் இந்த எட்டப்பர் கூட்டம் போராட்டத்தில் முன்னணியில் நிற்கும் தொண்டர்களைக் காட்டிக் கொடுத்துப் போராட்டத்தை முறியடிப்பதில் முனைந்து நிற்கும். ஜூன் 5-ந் திகதியன்றும் அவர்கள் தங்கள் கைவரிசைகளைக் காட்டக் கூடும். மக்களைப் பலாத்காரத்தில் ஈடுபடச் செய்து தங்களின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆத்திரமூட்டும் செயல்களைத் தூண்டுவார்கள். அத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகள் எந்த உருவத்தில் வந்தாலும் மக்கள் அவற்றுக்குப் பலியாகாதிருக்க வேண்டும். அவசரகாலச் சட்டம் இன்னும் அமுலிலிருக்கிறதென்பதையும் மறந்து விடக் கூடாது

இதற்கு முன்பு நடத்தப்பட்ட உரிமைப் போராட்டங்களிலே சத்தியத்தையும் அஹிம்சையையும் சரிவரக் [illegible] ஏராளவு அனுபவமும் பெற்றிருக்கிறார்கள் தமிழ் பேசும் மக்கள். ஆகவே அவர்கள் முழு உலகமும் பாராட்டக்கூடிய முறையில் ஹர்த்தாலை அமைதியாக நடத்துவார்களென்பதில் சந்தேகமில்லை.

# மூதூர் வாக்காளர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

## "தமிழரசுக் கட்சிக்கே வாக்களியுங்கள்"

## தமிழரசுத் தந்தை வேண்டுகோள்

கடந்த சத்தியாக்கிரகப் போராட்டத்தின் மத்தியில் மூதூர் தொகுதியின் முதலாவது பாராளுமன்ற உறுப்பினர் திடீரென மறைந்ததனால், அத்தொகுதி தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்களினது உண்மையான குரல் பாராளுமன்றத்திலோ அல்லது வெளியிலோ கேட்க முடியாது போய் விட்டது. அவசரகாலச் சட்டங்கள் மாதாமாதம் புதுப்பிக்கப்பட்டு வந்தமையினால், ஒரு வருடத்துக்கு அதிகமான காலம் மக்கள் சார்பில் குரல் எழுப்ப முடியாமல் அநீதியான முறையில் தடுக்கப்பட்டது. திருவாளர் ரி. ஏகாம்பரம் அவர்களுடைய மறைவினால் ஏற்பட்ட இடைவெளியை நிரப்புதற்கான அவகாசம் இப்பொழுது மூதூர் வாக்காளர்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் இடைத் தேர்தலில் உங்களுடைய தொகுதியில் போட்டியிட இலங்கைத் தமிழரசுக் கட்சி அபேட்சகராக, ஜனுப் எம். ஈ. எச். முகம்மது அலி அவர்களை நியமித்திருப்பதை நீங்கள் அறிவீர்கள். முகம்மது அலி அவர்களை உங்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டியதில்லை. மூதூர் தொகுதி அங்கத்தவராகத் தனது தொகுதிக்கு, வெவ்வேறு காலங்களில் தொண்டாற்றியுள்ளார். அவர் சிறந்த குணங்களுடையவர். மூதூர் தொகுதி வாக்காளர்களுக்கு சாதிமத பாகுபாடின்றித் தொண்டாற்றியுள்ளார். கடந்த சத்தியாக்கிரகத்தில், எவருடைய தூண்டுதலுமின்றி தானாகவே பங்குபற்றினார். மறைந்த திரு. ரி. ஏகாம்பரம், திருமலை பாராளுமன்ற உறுப்பினர் திரு. என். ஆர். இராசவரோதயம் ஆகியோருடன் இணைந்து போராட்டத் தலைவர்களுள் ஒருவராகப் பணிபுரிந்தார். இப்பணியே ஜனுப் அலி மக்களுக்கு ஆற்றிய சேவைகளில் எல்லாம் தலையாயதாகும். திரு. ஏகாம்பரம் உயிருடன் இருக்கையில் அவருடன் சேர்ந்து ஜனுப் அலி போராட்டத்தில் ஈடுபட்டுழைத்தது, எந்தவகையான சொந்த நோக்கத்துடனுமல்ல.

எதிர்வரும் இடைத் தேர்தல் பல வழிகளிலும் சிறப்புப் பொருந்தியதாகும். இது இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் மீது அடிமை முத்திரை பொறிக்க முயலும் சுதந்திரக் கட்சியின் அடிமை விலங்கை ஏற்றுக் கொண்ட ஒரு தமிழ் பேசும் மகனுக்கும், தமிழ் பேசும் இனத்தின் விடுதலைப் போராட்டத்தை நடாத்தும் தமிழரசுக் கட்சியின் முத்திரையைப் பெற்ற வேறு ஒருவருக்குமிடையே நடைபெறும் போட்டியாகும்.

அடுத்து, தமிழ் பேசும் மக்களின் ஏனைய பாராளுமன்றப் பிரதிநிதிகள் ஒன்றுபட்டு எதிர்க்கும் போது, மறைந்த திரு டி. எஸ். சேனநாயக்காவின் மந்திரி சபையில் சேர்ந்து, பெருந்தொகையான சிங்கள மக்களை மூதூர் தொகுதியில் குடியேற்றவும், தமிழ்பேசும் மக்களின் இன்றைய சூழ்நிலையை உருவாக்கவும் ஆதரவாகவிருந்த ஒருவருக்கும், இலங்கைத் தமிழரசுக் கட்சி நியமித்த ஒருவருக்குமிடையே நடைபெறும் போட்டியாகும்.

மூன்றாவதாக, சுதந்திரக் கட்சி அரசாங்கத்தின் ஆயுதம் தாங்கிய படையினரின் அட்டகாசங்களினால் தமிழ் பேசும் மக்கள் அடங்கி ஒடுங்கிவிடவில்லையென்பதையும், தமிழ் அரசுக் கட்சியின் புனிதமான நோக்கங்கள் ஈடேறும் வரை திடசங்கற்பத்துடன் ஒன்றுபட்டுப் போராடுவோம் என்பதையும் அரசாங்கத்துக்கும், வெளி உலகத்துக்கும் எடுத்துக்காட்ட, பொதுவாக தமிழ் பேசும் மக்களுக்கும், குறிப்பாக மூதூர் தொகுதி வாக்காளர்களுக்கும் இத் தேர்தல் ஒரு மகத்தான சந்தர்ப்பத்தை அளிக்கிறது.

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்கள் அனைவருடைய கவனமும் உங்கள் பால்தான் இருக்கிறது. உங்களுடைய கட்சியான இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிடும் ஜனுப் முகம்மது அலி அவர்கள் வெற்றி பெற உங்களால் இயன்ற அளவு முயற்சிகள் செய்வீர்கள் என்று பெரிதும் நம்புகிறேன்.

தனிப்பட்டவருக்காக வாக்களியாதீர்கள். கட்சிக்கே வாக்களியுங்கள்.

## உகனைக் கச்சேரி நிறுவியதில் அரசாங்கத்தின் சூழ்ச்சி

—பட்டிருப்பு எம். பி.

அரசியல் காரணங்களால் உகனையில் கச்சேரி நிறுவ முயன்ற அரசாங்கம் அவசர அவசரமாக அபிவிருத்தி செய்யப்படாத ஒதுக்கப்பட்ட மட்டக்களப்பு தமிழ் பகுதியுடன் இப்பிரிவையும் (தமிழ் கிராமங்களான மண்டூர்-பழுகாமப் பகுதிகள் இருப்பதால்) சேர்த்துவிட்டு கச்சேரியை இரு கூறாக்கியது சூழ்ச்சியென்றே கருதக் கூடியதாக இருக்கிறது!

சமீபத்தில் மட்டக்களப்பு மாகாண அதிபரிடம் கல்லோயா அபிவிருத்திச் சபையினரால் கையளிக்கப்பட்ட



திரு. எஸ். எம். இராசமாணிக்கம்

குடியேற்றப் பகுதியின் இடதுகை வாய்க்கால் பிரதேசத்தின் அபிவிருத்தி சம்பந்தமாக—பட்டிருப்பு—பாராளுமன்ற உறுப்பினர் திரு. இராசமாணிக்கம் கூட்டிய பல முக்கிய உயர்தர உத்தியோகஸ்தர்களை உள்ளடக்கிய மாநாட்டில் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்:—

படுவான் கரை என்று அழைக்கப்படும் இப்பகுதி அபிவிருத்தி செய்யப்பட்டதாகவும்—பல்வேறு சாக்குப் போக்குகளைச் சொல்லியும்—மட்டக்களப்பு கச்சேரி நிர்வாகத்தினுள் ஒப்படைக்கப்பட்ட இடது கை—வாய்க்கால் பிரதேசம் உண்மையாகவே அபிவிருத்தி குன்றியிருக்கிறது என்று கூறினார்.

இம் மாநாட்டுக்கு கல்லோயா அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. ஐ. எம். டி. சில்வா தலைமை வகித்தார். மாகாண அதிபர் திரு. டெறிக் அலுவிகாரை, கல்லோயாச் சபை ஜெனரல் மனேஜர்—திரு. ஜெயவீர, ஆர். எம். குணரெத்தின சந்திரசேனன், பொறியல் அதிபர் இஸ்மாயில், மண்டெதன் எருவில் போரதீவுப் பற்று பிரிவுக் காரியாதிகாரி திரு. பி. மகாதேவன் ஆகியோர் பிரசன்னமாக இருந்தார்கள்.

பிரிவுக்கு நீர்ப்பாசன வசதிகளை நல்குதல் சீர்கேடான வீதிகளை முதல்தர வீதியாக திருத்தி அமைத்தல்—மண்டூர்—குறுமண்வெளித்துறை இயந்திரப் படகு சேவை ஆரம்பித்தல் போன்றவை அலசப்பட்டு தீர்வு காணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூதூர் தேர்தல் : ஜனுப் அலியின் வெற்றி நிச்சயம்!

## இந்திய வர்த்தக சங்கத்தின் புதிய தலைவர்

ஜனுப் செய்யத் முகமது மௌலானு



"இலங்கையிலுள்ள இந்திய வர்த்தகர்களின் நன்மைக்காக நான் வருங்காலத்தில் உழைக்கத் தவற மாட்டேன்" என்று கொழும்பிலுள்ள இந்திய வர்த்தக சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. செய்யத் மொஹம்மது மௌலானு அவர்கள் கூறினுர்கள். இவர் கடந்த வருடங்களில் மேற்படி சங்கத்தின் உப தலைவராகவும், நிர்வாக அங்கத்தவராகவும் இருந்து, அரும் பெரும் சேவை செய்துள்ளார்.

சென்னைப் பல்கலைக் கழகத்தின் பி. ஏ. பட்டம் பெற்ற ஜனுப் மொஹம்மது மௌலானு, கொழும்பு மௌலானு லிமிட்டெட் ஸ்தாபனத்தின் மனேஜிங் டைரக்டராவார். இந்தியாவில் மௌலானு பிரைவேட் லிமிட்டெட், பாச்சா ஸ்டோர்ஸ் ஆகிய ஸ்தாபனங்களும் இவருக்குச் சொந்தமானதே. இலங்கையிலும், சிலோன் சிப்பிங் லைன்ஸ், ஷேர்மன் ரெக்ஸ்டைல்ஸ் ஆகிய ஸ்தாபனங்களின் பங்காளியுமாவார்.

கொழும்பு ரோட்றி கிளப்பின் அங்கத்தவரான ஜனுப் மொஹம்மது மௌலானு நவாயத் முஸ்லிம் ஜமாத் இயக்கத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிருர். இவருக்கு, சமூக சேவையில் நிறைந்த நாட்டமும் ஈடுபாடுமுண்டு.

இவர் காலஞ்சென்ற ஜனுப் கான் பகதூர் அபூபக்கர் மௌலானு அவர்களின் புதல்வரும், ஜனுப் பாச்சா அவர்களின் சகோதரருமாவார்.

## சுந்தரலிங்கத்துக்கு ஏற்பட்டுள்ள சங்கடமான நிலைமை

(நமது நிருபர்)

**மூதூர் உபதேர்தலில் தமிழரசுக் கட்சி அபேட்சகர் ஜனுப் முகமது அலி வெற்றி சர்வ நிச்சயமென்றும் அவரை எதிர்த்துப் போட்டியிடும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் அபேட்சகருக்குக் கிடைக்கக் கூடுமென எதிர்பார்த்திருந்த சிங்கள வாக்குகளில் பெரும் பகுதியைச் சுயேச்சையாகப் போட்டியிடும் சிங்கள அபேட்சகர் அடித்துக் கொண்டு போய் விடுவாரென்றும் தேர்தல் களத்திலிருந்து நமக்குக் கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.**

ஆகவே கடந்த பொதுத் தேர்தலில் சுதந்திரக் கட்சி பெற்ற வாக்குகளைக் காட்டிலும் மிகக் குறைவான வாக்குகளையே இம்முறை அக்கட்சியின் அபேட்சகர் பெறுவார் என்றும் அவர் மண் கவ்வுவது தவிர்க்க முடியாதென்றும் அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்.

திரு. சுந்தரலிங்கத்துக்கு இந்த உப தேர்தலில் வெற்றி கிடையாதென்பது ஏற்கனவே நிச்சயமாகிவிட்டது. அது அவருக்கும் தெரியும். தான் வெற்றி பெறுவதற்காக இத் தேர்தலில் போட்டியிடவில்லை என்று திரு. சுந்தரலிங்கம் விடுத்துள்ள அறிக்கையைச் சுட்டிக்காட்டும் அரசியல் வட்டாரங்கள், தமிழ் வாக்குகளைப் பிரித்து தமிழரசுக் கட்சி அபேட்சகரைத் தோற்கடித்துவிட வேண்டுமென்பதே அவரது நோக்கம் என்றும் கூறுகின்றன.

ஆனுல் அவரது இத்தவருன நோக்கம் நிறைவேருது என்பதற்கு நான்கு காரணங்கள் எடுத்துக் காட்டப் படுகின்றன.

(1) தமிழரசுக் கட்சி மீதும் அதன் சக்தி வாய்ந்த தலைவர் மீதும் தமிழ் பேசும் மக்கள் கொண்டுள்ள அசைக்க முடியாத நம்பிக்கை.

(2) திரு. சுந்தரலிங்கம் தமிழ் பேசும் மக்களிடையே தனது அரசியல் செல்வாக்கை இழந்து நிற்பது.

(3) தமிழரசுக் கட்சியின் பலம் பொருந்திய பிரசார பீரங்கிகள் முழங்க ஆரம்பித்ததும் திரு. சுந்தரலிங்கத்தின் சகாக்கள்கூட அவரைக் கைவிட்டு ஓடிவிட்டார்கள் என்பது.

(4) தமிழரசுக் கட்சி அபேட்சகர் தனது நீண்டகால சேவையின் மூலம் தமிழ் பேசும் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருப்பது.

அனுராதபுரம் உபதேர்தல் கண்டிச் சிங்களவர்—தாழ்ந்த பிரதேச சிங்களவர் போட்டியாக மாறியுள்ளது. சுதந்திரக் கட்சி அபேட்சகரும், யு. என். பி. கட்சி அபேட்சகரும் கண்டிச் சிங்களவர்களாதலின், சுதந்திரக் கட்சியிலிருந்து விலகிச் சென்று சுயேச்சை அபேட்சகராகப் போட்டியிடுபவரும், தாழ்ந்த பிரதேச சிங்களவருமான திரு. சுகதபால தலுவத்தையை இவ்விரு கட்சிகளையும் சேர்ந்த தாழ்ந்த பிரதேச சிங்களவர்களில் பெரும் பாலோர் ஆதரிக்கின்றனராம்.

## பணைகொடையில் உருவான கருத்துக் கருவூலங்கள்

பணைகொடையில் தமிழரசுத் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்த போது, தலைவர்களுக்கு சிந்தனு சக்தியைத் தூண்டுவதற்கு வசதிகள் இருந்தன அத்தகைய சிந்தனைக் கருவூலங்கள் சுதந்திரனில் தொடர்ந்து வெளிவரும்.

அடுத்த இதழில் அறப்போர் அணித் தலைவர் திரு. ஆர். டபிள்யூ. வி. அரியநாயகம் இயற்றிய காவடிச் சிந்து வெளியாகவிருக்கிறது. பக்தி ததும்ப உளம் நெகிழ அமைந்துள்ள இப்பாக்கள் தமிழரசுக் கூட்டங்களின் போதும் பாடப்படலாம்.

உங்கள் 'சுதந்திரன்' பிரதியைப் பெறுவதற்கு முன் கூட்டியே பதிவு செய்து கொள்ளுங்கள்.

## கொம்யுனிஸ்டுகளுக்கு திரு. பிலிக்ஸ் சூடு

"ஒரு கொம்யுனிஸ்ட் பட்ஜெட்டுக்கு ஆதரவு திரட்டுவதற்காக கொம்யுனிஸ்ட் கட்சி பிரசாரம் செய்கிறது. அவர்களின் பட்ஜெட்டையும், அவர்கள் கூறும் ஏனைய திட்டங்களையும் நாங்கள் ஏற்றுக் கொண்டால் இந்த பௌத்த நாடு ஒரு ஹிட்லரின் ஆதிக்கத்துக்கு உட்பட்டுவிடும். அப்படியாயின் இது ஒரு சனநாயக நாடாக இருக்க முடியாது" என்று நிதிமந்திரி திரு பிலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா மாத்தறையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறினுர்.

கொம்யுனிஸ்டுகள் தனக்கு பட்ஜெட் தயாரிக்கும் முறையைக் கற்றுக் கொடுக்க முயற்சி செய்கிருர்கள் என்று நிதிமந்திரி அவர்களைக் கிண்டல் செய்தார்.


**புத்தகம்**

சாத்திரி ஓர் அரிய சோதிட நூல். உங்களினதும் உங்கள் குடும்பத்தினதும் சாதகங்களின் பலாபலன்களை இலேசாயும், இரகசியமாயும் அறிய உதவும். இதில் கைரேகைச் சாத்திரமும் இருது ஜனன சாத்திரமும் அடங்கியுள்ளன.

உடனே எழுதவும்.

வி. பி. பி.மூலம் அனுப்பி வைக்கலாம் விலை(தபாற் செலவு உட்பட) ரூபா 3-65.

செ. சோதிநாதன்,

தபால் பெட்டி 147, கொழும்பு.

யாழ்ப்பாணம்-கொழும்பு-கண்டி மாத்தளை-திருகோணமலை-மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தமிழ்ப் புத்தகக் கடைகளில் வாங்கலாம்.





சி. சி. பி. புகையிலை பசளைக் கலவைகள்



கொழும்பு கொமர்ஷியல் கொம்பனி லிமிட்டெட்,

பசளைப்பகுதி.

அக்லண்ட் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு- 2. போன்: 7935.


## வீழ்ச்சியுற்ற...

(5-ம் பக்கத்தொடர்ச்சி)

இந்திய சர்க்காரும், இந்திய சர்க்காரின் தலைமை அமைச்சர் நேரு பண்டிதரும் செய்ய முடியாத ஒரு காரியத்தை உங்களால் செய்ய முடியும் என்றும் நம்புகிறோம்!

நேரு பண்டிதர், தமிழர்களை தவிக்க விடுகிருர். அவர்களது வாழ்வைப் பறித்தும் மகிழ்கிருர்.

தமிழகத்து அரசாங்கமும், உரிமையற்று, அடிமையாய் கிடக்கிறது.

இந்த நிலையில் உங்களது பணியால்தான் அங்கு வாழும் தமிழகத்து தமிழர்களுக்கு வாழ்வு கிடைக்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகம் உங்களுக்கு உற்ற துணை புரிவதோடு—அங்கு வாழும் தமிழ்க்குடி மக்களுக்காக இங்கு போராடி தக்க பரிகாரமும் தேடும்.

## கூப்பனின்றி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

எவரையும் இத்திட்டம் பாதிக்கலாம். தங்கள் பிறப்பிடத்தை விட்டு, வெளியூருக்கு சில நாட்கள் தங்குவதற்காகச் செல்ல நேர்ந்தாலும், ஒருவர் தன்னுடன் தனது கூப்பன் புத்தகத்தையும் கொண்டுசெல்ல வேண்டியிருக்கும். விரைவில் இம்முறையை அமுலாக்க வழிவகைகள் ஆலோசிக்கப் படுகின்றது.


# கமலா பீடி

ஒளியில் சிறந்தது சூரியப் பிரகாசம்

பீடியில் சிறந்தது கமலா பீடியே!

ஒரு முறை வாங்கி உபயோகித்தால் அதன் உண்மை விளங்கும்.


கமலா ஸ்டோர்ஸ்.

நிர். 15, செட்டியார் தெரு,

கொழும்பு 11.

தந்தி: "தாமரை" போன்: 3597—6522.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வறுமையின் வேதனை

த. சண்முகசுந்தரம்

**பாலசிங்கத்துக்குப் பத்து வயது தான். யாழ்ப்பாண மாவட்டத்தில் அன்றுட வாழ்க்கைக்கு வழி பண்ண, ஏதோ கொஞ்சம் விவசாயத்தைச் செய்து வாழும் ஆயிரக்கணக்கான விவசாயிகளுள் பாலசிங்கத்தின் தந்தையும் ஒருவன். படிப்பிலே கெட்டிக்காரனுன பாலசிங்கம் பரிசளிப்பு விழாவுக்குப் போக உடுப்பு வேண்டுமெனத் தந்தையைக் கேட்கிருன். சிறுவனுக்குக் கிடைக்கும் பரிசு, பிஞ்சு முதுகிலே பலம் வாய்ந்த அடிகள் தாம்...............**

**முருகுப்பிள்ளை தான் என்ன செய்வான்?**

"பூச்சைப் பாலனைப் போட்டுக் குத்து குத்து என்று குத்திப் போட்டு இப்படி ஏன் மூஞ்சையை நீட்டிக்கொண்டு இருக்கிறீர்கள்?" என்று கூறிய பொன்னம்மா ஆத்திரத்துடன் நையாண்டியாகச் சிரித்தாள்.

அதற்கு மறுமொழி முருகுப்பிள்ளையின் கண்ணீர்த் துளிதான்.

"சரி, போனது போகட்டும் வாருங்கள் பழஞ்சோறு பழுதாகப் போகுது. என்ன இருந்தாலும் என்னுடைய பத்து வயதுப் பாலனை வேலையில் போட்டு கசக்கிப்பிழிகிறீர்கள். போதாக் குறைக்கு அடிக்கிறீர்கள். அன்பாக நடத்தாவிட்டாலும் கடு கடுக்காமல் இருந்தாற் போதும்," எனப் பொன்னம்மா புத்தி புகட்டினுள்.

"ம்...ம்..." மீண்டும் முரட்டு முருகுப் பிள்ளையின் கண்களிலிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. பேச்சே வரவில்லை. மூக்கைச் சிறிக் கொண்டு முருகுப் பிள்ளை எழுந்தான்.

"ஆண்டவன் என்னைப் படைத்திருக்கப்படாது, அதிலும் வறுமையாகப் படைத்திருக்கப்படாது, எங்களுக்குப் பள்ளிக்கூடமேன்? பரிசளிப்பு பிழாவேன்? நாங்கள் இருக்கிற நிலையில் பரிசளிப்பு விழா வேண்டாம். பாடை கட்டு விழாத்தான் வேண்டும்." என்று தன் ஆத்திரத்தைச் சொல்மாரியாகப் பொழிந்து தள்ளினுன், முருகுப்பிள்ளை.

"எந்த நாள் என்ருலும் உங்களுடைய வாயில் நல்ல பேச்சு வருமோ? வளரும் பிள்ளையை இப்படி வாழ்த்தினுல் நாளைக்கு அதற்கு ஏதும் நடந்து விட்டால்...? பன்னிரண்டு வயதில் தத்து என்று சாதகம் பார்த்த சோதிடர் சின்னத்தம்பி சொன்னுர்..." இவ்விடத்தில் பொன்னம்மா அழுதாள். முருகுப்பிள்ளையும் சேர்ந்து அழுதான்.

முருகுப்பிள்ளை எழுந்து போய்ப் பொன்னம்மாவின் கண்ணீரைத் தன் மரத்துப் போன கைகளாலே துடைத்தான். பத்து வயது நிரம்பாத பாலசிங்கம் அவ்விடம் ஓடி வந்தான். தாயைப் போல கலகலவென்று பேசும் இயல்பு பாலசிங்கத்துக்கும் இருந்தது.

"ஐயாவும் அழுகிருர் அம்மாவும் அழுகிருர். தம்பி! தங்கைச்சி!! வாருங்கோ நாங்களும் அழுவோம்..." எனச் சிறுவன் கூறினுன். அப்படிச் சொல்லும் போதே சிறுவனுக்கும் அழுகை வந்து விட்டது.

"எல்லாம் உன்னுலே தான் பாலா வந்தது..." எனப் பொன்னம்மா சொல்லி முடிப்பதற்குள், சிறுவன் இடை மறித்துப் பேசினுன்.

'நான் என்னம்மா செய்தேன்? ஐயா எனக்கடித்துப் போட்டுத்தான் அழுகிருர். அடிவாங்கின நான் அழவில்லை," என்று சொல்லும் போதே அவன் இதழ்களிடையே ஒரு புன்சிரிப்பு நெழிந்தோடியது.

"தம்பி முதுகைக் காட்டடா," என்று கூறி முருகுப் பிள்ளை மகனின் முதுகைப் பார்த்தான்.

தாயைப் போலவே பிள்ளைக்கும் சிவந்த மேனி அதிலே அந்த முரட்டுக் கையின் ஐந்து விரல்களும் பதிந்திருந்தன. முதுகுக்கு சிறிது நல்லெண்ணெய் தடவினுன் முருகுப்பிள்ளை. தந்தை முதுகைத் தடவ மைந்தன் சிரித்தான். தாய்மையும் கல கலத்தது.

"அது சரி தம்பி ஏனடா ஐயா அடித்தார்" என்று பொன்னம்மா கேட்டாள்.

"ஐயா, சொல்லட்டோ?" என்று கேட்டு விட்டு சிறுவன் தயக்கத்துடன் தந்தையைப் பார்த்தான்.


"தம்பி இண்டைக்கு என்னேடு சந்தைக்கு வரப் போருனும்," என்று முருகுப் பிள்ளை, பாதி உண்மையும் பாதி பொய்யுமாகச் சொன்னுன்." அதற்குப் பிள்ளையை ஏன் அடிப்பான்? போன சந்தைக்கு நீங்கள் காய்ச்சல் என்று படுத்து விட்டீர்கள். தம்பி தானே மாயனேடு போனுன்," என்ருள் பொன்னம்மா.

"அம்மா! ஐயா சொன்ன கதையின்ரை மிச்சத்தை நான் சொல்லுகிறேன், கேளம்மா. இந்த முறைச் சந்தைக் காசில் எனக்கு ஒரு நீலக்காற் சட்டையும் வெள்ளைச் சட்டையும் வாங்கித் தரச் சொன்னேன் அம்மா. தேன். சொல்ல மறந்து விட்டேன்,"

இதைக் கேட்டதும் பொன்னம்மாவின் முகத்தில் ஏமாற்றத்தின் உருவம் நிழலாடியது. அதன் நிழல் சிறுவன் முகத்திலும் விழுந்தது. அவர்களிடையே சிறிது நேரம் மௌனம் நிலவியது.

பொன்னம்மா தன் மூக்கில் அணிந்திருந்த மின்னியைக் கழற்றினுள். முருகுப் பிள்ளை செயலற்றுப்போய்ப் பேசாமல் பார்த்துக் கொண்டிருந்தான்.

"தம்பி இதைக்கொண்டு போய் சிங்கப்பூர் செல்லத்துரை வீட்டிலே வைத்துப் பத்து ரூபா வாங்கடா.



சந்தையில் சோனகனுடைய சீலைக்கடையில் நிறையத் தைத்து வைத்திருக்கிருர்களம்மா. போன முறைச் சந்தைக்குப் போட்டு வரும் போது பார்த்தேனம்மா அதற்கு ஐயா காற்சட்டை மேற்சட்டை போட்டு கவுண்மேந்து உத்தியோகம் பார்க்கப் போறியோடா? என்று சொல்லி அடித்தார்." என்று சிறுவன் ஒரே மூச்சில் கூறி முடித்தான்.

"பின்னை நான் என்ன செய்வது? சந்தை போன முறையும் ஏமாற்றிப் போட்டுது. வெற்றிலை குப்பை மலிவு, மரவள்ளிக் கிழங்கின்ரை கதை பேசத் தேவை இல்லை. நான் எங்கே போகக் காசுக்கு?"

"ஏன் கொழுந்துத் தோட்டத்துப் படலையடியில் பெரிய கதலிக் குலையை விற்ருல் போதும். ஒன்பது ரூபாவுக்குக் காணுமே!"

"நேற்று அது இடைப் பழம் [illegible] ணீர்க்கடைக்குக் கொடுத்துத் தான் அரிசி வாங்கி வந் சொல்லு முப்பத்தைந்து ரூபாவிற்குச் செய்வித்தது என்று" என்று பொன்னம்மா தாயன்பு சுரக்கச் சொன்னுள்.

"அம்மா நான் போகமாட்டேன்."

'ஏன் இராசா?!'

"அப்படித்தான்."

"அதென்ன அப்படித் தான்?"

"அம்மா எனக்கும் தவநாதனுக்கும் தான் வகுப்பிலே போட்டி" எனச் சிறுவன் சொல்லும் பொழுது ஏமாற்றத்தின் அலை முகத்தில் மீண்டும் மோதியது.

"அம்மா செல்லத்துரையருடைய தவநாதனுக்கு வீட்டில் ஆள் வைத்துப்பாடம் சொல்லிக் கொடுக்கிருர்கள். வீட்டு வேலை ஒன்றும் நாதனுக்கு இல்லை. இருந்தாலும் மூன்று தவணைகளிலும் நான் தானம்மா முதல். எனக்கு ஆறு பாடத்தில் முதற் பரிசு விளையாட்டுப் போட்டிக் கிண்ணமும் எனக்குத்தான். தேவாரப் போட்டிப் பரிசும் எனக்குத்தான். தவநாதனுக்கோ இரண்டே இரண்டு பரிசு தான், அம்மா. நாளைக்குப் பரிசளிப்பு விழா. உடுப்பிற்கோ காசு என்று கேட்பார்கள். நான் போகமாட்டேன்" என்று சிறுவன் காரணத்தைத் தெளிவு படுத்தினுன். தாய் தந்தையரால் அதற்கு மறுபபு ஒன்றுமே சொல்ல முடியவில்லை.

முருகுப்பிள்ளையின் ஓலைக் குடில் வீடும் செல்லத்துரையின் பங்களாவும் தங்களுக்குள் ஏதோ பேசிக்கொண்டன.

"ஐயா கத்தரிக்கன்றுகளுக்குத் தண்ணீர் வார்க்கவில்லை. எனக்கும் பள்ளிக்கு நேரமாகுது" என்ருன் சிறுவன்.

"தம்பி நீ போ. நூறுகன்று தானே? நான் ஊத்துவேன்;' என்ருள் தாய்.

சிறுவன் பாடசாலைக்குப் புறப்பட்டான். அந்தப் பிஞ்சு உள்ளத்தில் நிழற் படங்கள் தோன்றின. வகுப்பு ஆசிரியரும் தன்னைப் பார்த்துச் சிரிப்பது போன்ற உணர்ச்சி அவனுக்கு எழுந்தது. சிறுவன் தன்னை நினைத்து வெட்கித்தான். தன்னுடைய தகப்பனின், காவி படிந்த பற்களையும் செம்மண் ஏறிய கைகளையும் அழுக்குப்பிடித்த பரட்டைத் தாடியையும் தலை மயிரையும் எண்ணி வெட்கினுன். அவன் முன்பாகத் தவநாதனின் ஒய்யாரமான உடையலங்காரமும் சிங்கப்பூர்ச் செல்லத்துரையின் காற்சட்டை மேற்சட்டை தொப்பியும் வந்து நின்றன. பாடசாலையில் ஆண்டிற்கு ஒரு முறை நடக்கும் பரிசளிப்பு விழா. இரண்டு பரிசு பெற்ற தவநாதனுக்குக் கொழும்பில் இருந்து உடுப்புக்கள் தைக்கப்பட்டு வந்திருக்கின்றன. "எட்டுப் பரிசு பெற்ற எனக்கு...?" அப்பிஞ்சு மனதை வேதனை வாட்டியது.

போதாக் குறைக்கு வகுப்பாசிரியர் சொன்னதும் சிறுவனின் காதில் ஒலித்தது. "புதன்கிழமை பரிசளிப்பு விழா எல்லோரும் நீலக் காற்சட்டையும் வெள்ளைச் சட்டையும் போட்டுக் கொண்டு வரவேண்டும். தலை மயிரை வெட்டி வாரிவிட்டுச் சுத்தமாக வரவேண்டும். பரிசு பெற மேடையேறும் மாணவர் இன்னமும் சுத்தமாக எடுப்பாக உடுத்திவருவது நல்லது" என்ருர்.

வகுப்பு முழுவதும் தன்னைப் பார்ப்பதைச் சிறுவன் உணர்ந்தான். பேசாமல் இருந்தான். ஆசிரியர் மேலும் தொடர்ந்து சொன்னுர் "பரிசளிப்பு விழாவிற்கு உங்கள் பெற்ருரையும் அழைத்து வாருங்கள்". சிறுவனுக்கு இடி இடிப்பது போல் இருந்தது. ஒரு கிணறு தண்ணீர் கொண்டு கழுவினுலும் முருகுப்பிள்ளையின் செம்மண் காவியைப் போக்க முடியாதே! வீட்டிற்குப் போனதும் ஒன்றும் பேசாமற் சிறுவன் சாப்பிடாமல் தலையிடி என்று சொல்லிக்கொண்டு படுத்தான்.

சந்தையிலிருந்து வந்த முருகுப்பிள்ளை பட்டையைப் பூட்டிக் கொண்டிருந்தான்.

"ஐயா சந்தையில் வெற்றிலை நல்ல விலையோ?" என்ருன் சிறுவன். "எனக்கு உடுப்பு வாங்கி வந்திங்களோ?" என்று கேட்க அவனுக்குப் பயம்.

அழகான ஒரு சோடி உடுப்பைப் பொன்னம்மா அவன் முன்னுல் வைத்தாள். மூன்று உள்ளங்களும் மலர்ந்தன.

பரிசளிப்பு விழாத் தினமும் வந்தது.

"தம்பி சலூனுக்குப் போய்த் தலையை வடிவாக வெட்டிக் கொண்டு வா. இந்தா பௌடர் சீப்பு

(13-ம் பக்கம் பார்க்க)

நம்பிக்கையான

நைலோன்



வலைகளுக்கும், நூல்களுக்கும்

சேகரம் அன் சன்ஸ்

74, ஆஸ்பத்திரி வீதி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 693

தந்தி: சேகரன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திக்கு வந்தவை!

—காலகண்டன்—

### தமிழ்காங்கிரஸ் கொழும்புக்கிளை மீன்பிடி இலாகாவுள்...

நமது ஒற்றர் படைத்தலைவர் அப்பாக்குட்டி அம்மான் ஓடோடி வந்தார். அவரை ஆறுதலாக அமரவைத்து விசாரித்ததில் பெரியதொரு இரகசியத்தைக் கண்டு பிடித்து விட்டார் என்பது தெரிய வந்தது.

'அகில இலங்கை ஆனைப் பந்திக் காங்கிரஸ்' என்ற தமிழ் காங்கிரஸ் இப்போது கொழும்புக்கிளைக் காங்கிரசாக இருந்துகொண்டு பத்திரிகைகளில் 'டூப்' அடிக்கிறதை எல்லோரும் கவனித்திருப்பார்கள். நமது அப்பாக்குட்டி அம்மான் இந்த 'கொழும்புக்கிளை' எங்கே இருக்கிறது என்பதைத் தேடிக் கண்டு பிடித்து விட்டார்.

செனநாயக்கா மந்திரி சபையில் பொன்னம்பலம் அவர்களை மீன்பிடி மந்திரி ஆக்கிவைத்தார்களல்லவா? அந்த நாட்களில் பொன்னரின் கையாள் ஒருவர், மீன்பிடி இலாகாவினுள் புகுத்தப்பட்டார். பாவம் இன்று செஞ்சோற்றுக்கடன் அளித்து வருகிறார். தமிழன் பத்திரிகையிலும் அழப்பு, மழுப்புவேலைகள் செய்வதும் இதே பேர்வழிதானும் என்று அப்பாக்குட்டி அம்மான் கூறுகிறார்.

மீன்பிடி இலாகா காரியாலயம் தான் தமிழ் காங்கிரசின் கொழும்புக்கிளை என்பது தெளிவாகிவிட்டது. தலைவர், செயலாளர், செயற்குழு உறுப்பினர் எவருமில்லாத தனிப்பிரமுகர் கட்சி வெறும் கடுதாசி வேடிக்கை காட்டுகிறது. அந்தோ பரிதாபம்.

### நாய்க்கும் சிங்கள மோகம்?

மன்னரில் சிங்களம் படிக்கும் தமிழ் உத்தியோகத்தர் ஒருவர் அவசரமாக ஊருக்குப்போய் விட்டார். ஊருக்குப்போகும் அவசரத்தில் வீட்டினுள் நாயைவைத்துப் பூட்டி விட்டுப்போய் விட்டார். பாவம் நாய்! பசியாலும், தாகத்தாலும் அவதியுற்ற நாய்க்கு என்னசெய்வதென்று தெரியவில்லை, படிக்கும் அறையில் ஏராளமான புத்தகங்கள் அடுக்கடுக்காக விருந்தன. அவற்றைப் பதம் பார்த்தாவது பசி தீர்க்க ஆசை ஏற்பட்டு விட்டது நாய்க்கு. அங்கு கிடந்த புத்தகங்களில் அந்நாயைக் கவர்ந்தது தன் எஜமானர் இரகசியமாகப் படிக்கும் சிங்களப் புத்தகம் தான். தன் பசியையும் (ஆத்திரத்தையும்) அந்தச் சிங்களப் புத்தகங்களிடம் காட்டியது நாய்.

எப்படியுள்ளது நாயின் புத்தி!

### பொறுப்பான மந்திரியின் பொறுப்பற்ற பேச்சு

நிதி மந்திரி பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா அண்மையில் தமது நண்பர்களிடம் சில விஷமத்தனமான செய்திகளை அம்பலப் படுத்தியுள்ளார்.

"தமிழரசுக்கட்சியை அடித்து மூலையில் ஒதுக்கி விட்டோம். இனிமேல் அவர்களால் எதுவுமே செய்ய முடியாது. எந்தெந்த உருவத்தில் அவர்கள் உரிமைக் கிளர்ச்சி யென்ற போர்வையில் தலைதூக்கினாலும், அந்தந்த உருவத்தில் அவர்களை நசுக்க நல்ல ஆயுதங்கள் எம்மிடம் உள்ளன. இனிமேல், தமிழரசுக்கட்சியாரோ அல்லது தமிழரின் உரிமை கோரும் எந்த இயக்கமோஎங்களிடம்வாலாட்ட முயன்றால், வாலை ஒட்ட நறுக்கிவிடுவோம்" என்றெல்லாம் பொறுப்பற்ற முறையில் பிதற்றியுள்ளாராம். பொறுப்பான மந்திரியின் பொறுப்பற்ற பேச்சுக்களுக்குச் சவுக்கடி கொடுக்க தமிழ் பேசும் மக்கள் குமுறி எழப்போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை!

### அலறி மாளிகையில் அமளி

மூதூர் இடைத்தேர்தலுக்கு ஆளும்கட்சி ஆள் தேடும் படலம் நடைபெற்றுக்கொண்டிருந்தவேளையில் திருமதி சிறிமாவோ திருமலை, மூதூர் பகுதிகளிலுள்ள தனதும் தனது அடிவருடிகளின் சிபாரிசின் பேரிலும் சில பிரமுகர்களை 'அலறி மாளி' கைக்கு வரும்படி தந்தி மூலம் அழைத்தாராம். பலர் அங்கு வந்து குழுமினர். மூதூருக்குப் போட்டியிடப் பொருத்தமானவர்களெனக் கருதப்பட்டோர் பட்டியல் பரிசிலனைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது. சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் பிரசன்னமாயிருந்தனர்.

ஜனாப் எம் ஏ. ஹமீது ஒரு சாது. அவருடைய பெயர் பரிசிலனைக்கெடுத்துக்கொள்ளப்பட்டு கருத்து வேற்றுமைகள் பரிமாறப்பட்டன. இதனால் அலறி மாளிகையில் பெரிய அமளி ஏற்பட்டது. கந்தளாய்க்குடியேற்றப் பகுதியைச் சேர்ந்த சில சிங்களப் பிரமுகர்கள், "சென்ற தேர்தலின் போது கந்தளாய்ச் சிங்கள மக்கள் எல்லோரும் முஸ்லிம் அபேட்சகரை ஆதரித்து வெற்றியீட்டிக் கொடுத்தமையினால், இம்முறை சிங்கள அபேட்சகரை நிறுத்தி அவருக்கு முஸ்லிம்கள் ஆதரவு கொடுக்க வேண்டும்" என்றும் வாதிட்டனர். சில கசப்பான பிரச்சினைகள் எழுந்தமையினால் ஜனாப் ஹமீதின் பாடு பெரும்பாடாகி விட்டதால் வெளியேறி விட்டார். ஹமீது அவர்களைத் தேர்தலுக்கிழுப்பதில் மும்முரமாக நின்ற ஜனாப் மஜீதுக்கும், ஜனாப் ஹமீதுக்கும் கைபரிமாறுமளவுக்கு விடயங்கள் முற்றி விட்டனவாம். வசை மொழிகளைத் தாங்க முடியாத ஜனாப் மஜீத் ஓடோடிச் சென்று திருமதி சிறிமாவோவை பயமுறுத்தியுள்ளார். கட்சிக்குள்ளிருந்து முஸ்லிம் எம். பியான மஜீத் வெளியேறா திருப்பதற்காக, ஜனாப் ஹமீதையே அபேட்சகராக நிறுத்த வேண்டியேற்பட்டுவிட்டதாம்.

### நீலச்சால்வை நீலித்தனம்

யூ. என். பிக் கட்சியையும், சுதந்திரக் கட்சியையும் தன் பேனாமுனை மழுங்கு மளவும் தாக்கி, திருவாளர்கள் ஜீ. ஜீ. பொன்னம்பலம், வி. நல்லையா, எஸ். யூ. எதிர்மன்னசிங்கம், ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி ஆகியோரையும் காரசாரமாகக் கண்டித்து பிரபலமான பத்திரிகைகளில் எழுதிய ஒருவர் தனக்கு ஒரு நல்ல பதவி கிடைக்க வேண்டுமென்ற காரணத்தினாலும், தன் அந்தரங்க ஆசைகளுக்கு முட்டுக்கட்டை போட்டவர்களைப் பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்தினாலும், தன் பேனாமுனைக் கண்டனத்துக்குட்பட்ட பிரமுகர்களைக் காக்காய் பிடித்துக் காரிய மாற்ற முன்வந்திருப்பதாக அறிகிறோம்.

நமது அப்பாக்குட்டி அம்மான் கூறியுள்ள சில திடுக்கிடும் சம்பவங்களும், சுய காரிய வேட்டைக்காக செய்யப்படும் ஊழல்களும் இப்பகுதியில் விரைவில் வெளிவரவிருக்கின்றன.

ஆளும் கட்சியான சுதந்திரக் கட்சிக்காரர்கள் நீலச் சால்வை ஒன்றை அணிவது வழக்கம். அண்மையில் பிரஸ்தாப பேர்வழி, தகவல் இலாகா முதல்வரை, யார் தொழிலுக்கோ உலை வைக்க வழிதேடிப் போயிருந்த போது, நீல நிறச் சால்வை ஒன்று அவர் கழுத்தில் தொங்கியதாம். இதை நமது அந்தரங்க நிருபர் அப்பாக்குட்டி அம்மான் கண்டு விட்டார்.

காரியத்தைச் சுலபமாக முடிக்க, ஆளும் வர்க்கத்தாருக்குப் பிடித்தமான நீலச் சால்வையை அணிந்து சென்றுள்ளார். இந்தப் பிரகஸ்பதியின் தந்திர வேலைகளை நன்குணர்ந்த தகவல் அதிகாரி "நீலச் சால்வை நீலித்தனத்"துக்கு மசியவில்லை. பேட்டி கொடுக்கக் கூடிய வாய்ப்புக்களிருந்த போதிலும், போதிய முன் அறிவித்தலின்றி வந்தமையினால் பேட்டி தரமுடியாது, என்று கூறி அனுப்பிவிட்டாராம்

நீலச் சால்வை போட்டுச் சென்றும், உரிய கௌரவம் கிடைக்காததனால் சால்வை சட்டைப் பைக்குள் சுருண்டு கொண்டதாம். இந்தச் சந்தர்ப்பத்தில் அவருடைய முகத்தில் கருமை தட்டியிருக்குமோ என்பதை யாரும் அவதானிக்க இயலவில்லை. காரணம் — அவருடைய முகத்தில் ஏற்கனவே பல கருமை ரேகைகள் இருப்பதுதான்.

### சிங்களம் பயிற்ற ஆதரவு

கொழும்பிலிருந்து நமது ஒற்றர் படைத்தலைவர் அப்பாக்குட்டி அம்மான் திடீரென ஒரு செய்தியை அவிழ்த்து விட்டார். தமிழ் மொழிக்கும் சைவ சமயத்துக்கும் தொண்டாற்றும் ஒரு கல்வி நிலையத்தில் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு சிங்களத்தை இரண்டாவது பாடமாகப் போதிக்க, பெற்றோர்கள் தொண்ணூறு வீதம் ஒப்புதல் அளித்துள்ளதாகச் செய்தி கிடைத்துள்ளதாம். இத்துறையில் அக்கல்வி நிலைய ஆசிரியர்கள் பலரும் பெற்றோருக்கு ஊக்கமளித்துள்ளனராம். அம்மான் முழு விசாரணையும் முடித்துக் கொண்டு அடுத்த வாரம் முழு விபரத்தையும் தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார். அதற்கிடையில் இக் கல்வி நிலைய அதிகாரிகளும், ஆசிரியர்களும், மாணவர்களின் பெற்றோர்களும் மனமாற்றம் செய்து கொண்டால் நமது சந்திக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படாது.

### மதமும் மாறவேண்டும்...!

தேசியமய சேவை மந்திரி கனம் சிறிவர்தன அண்மையில் பௌத்த மதச் சித்திரக் காட்சியைத் திறந்து வைத்துப் பேசுகையில், "பௌத்த சிங்களவர்களுக்கே எல்லா அரசாங்க உயர்தர உத்தியோகங்களும் வழங்கப்படல் வேண்டும்" என்று கூறியுள்ளார். இதுதான் பெரும்பான்மை பௌத்த சிங்கள மக்களின் அந்தரங்க ஆசை. மந்திரிகள் மட்டுமல்ல, ஆட்சி பீடத்திலுள்ள பௌத்த சிங்களவர்கள் அனைவருக்கும் இதுவேதான் ஒரே ஆசை.

இன்று விழுந்தடித்துக் கொண்டு சிங்களம் படிக்க முயலும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒன்று கூற விரும்புகிறோம்:—

சிங்களத்தை......
ஆண்டாண்டுதோறும் அலசிப் படித்தாலும்
வேண்டும் தொழிலெதுவும் நமக்குக் கிடையாது!

ஆங்கிலம்
ENGLISH
ஆறே மாதங்களில் ஆங்கிலம்
★ பேச
★ வாசிக்க
★ எழுத
தபால் மூலம் கற்றுக் கொள்ளக்கூடிய அருமையான சிறந்த இடம் அற்லஸ்ஹோல் நீங்களும்ஆறே மாதத்தில் ஆங்கிலம் கற்றுக்கொள்ளக்கூடிய இலவச விபரங்கட்கு இன்றே எழுதுங்கள்.
அற்லஸ் ஹோல்,
723, மருதானை றோட்,
கொழும்பு-10.

வியாபாரத்திற்கழகு
விளம்பரம் செய்தல்

வர்ண ஜால நிறங்களில் வனிதையரை
ஜொலிக்க வைப்பது!!!
எலைட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்!!



எழில் மிகு பல ஹை-பை நிறங்கள்;
எல்லோரும் விரும்பும் நவீன டிசைன்கள்;
சிறந்த தயாரிப்பு இவை அனைத்தும்
எலைட் சுப்பர்லோன்
ஜோர்ஜெட்டை
ஏனைய ஜோர்ஜெட்டுகளிற் கெல்லாம்
என்றும் முன்னிற்க வைக்கின்றன.
★ ★ ★
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை நாலு நாற்பத்தைந்திலிருந்து ஐந்து மணிவரை இலங்கை வானொலி வர்த்தக ஒலிபரப்பில் குண்டன்மால்ஸ் ஸ்தாபனத்தார் அளிக்கும் "லண்டன் கந்தையா" நிகழ்ச்சியைக் கேட்டு மகிழுங்கள்.
ஏக விநியோகஸ்தர்கள்:
குண்டன்மால்ஸ் லிமிட்டெட்,
சில்லறை வியாபாரப் பகுதி: [illegible] 114, [illegible] வீதி.
கொழும்பு.
மொத்த வியாபாரப் பகுதி: 26, கெய்ஸர் வீதி.
—Mylads/KL. 291/62—

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரன் கலைப் பகுதி

# ஆடல்பாடல்காட்சி

## தமிழ் பல்கலைக்கழக நிதிக்கு குமாரி அம்பிகையின் நடனவிருந்து

தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் கலாச்சாரப் பாலம் ஒன்று அமைய வேண்டும் என்பது கலைஞர்களின் பேரவாவாகும். இந்தக் கலாச்சாரப் பாலம் அமைவதற்கு ஏதுவான ஒரு முறைடை வகுக்க வாய்ப்பை அளிப்பவர்களில் சிறப்பானவர் குமாரி அம்பிகை நடராஜா.

அரசினர் உதவி கோரிப் பலன் எதுவும் கிடைக்கவில்லை. தமிழ் பேசும் மக்களின் எதிர்காலச் சந்ததியின் சிறப்புறு வாழ்வைச் செம்மைப்படுத்தும் ஓர் கற்பக விருட்சமாக வளரும் பல்கலைக் கழகத்துக்கு பொருளென்னும் நீரூற்றி வளர்க்க வேண்டியது நமது தலையாய கடமையன்றோ!



சென்னையில் உஷ்ணம் அதிகம். கடல் அளிக்கும் தண்மையும், அடை ஆறு கொடுக்கும் குளிர்மையும், அடர்ந்து வளர்ந்த ஆலை மரங்களின் பசுமையும் ஒருங்கே சேர்ந்து வளம் கொடுக்கும் பிரதேசமான அடையாறு பகுதியிலே கலை வளர்க்கும் கலைக் கோயிலாம் கலாட்சேத்திரம் அமைந்துள்ளது. அடையாறையே பிறப்பிடமாகக் கொண்ட குமாரி அம்பிகைக்கு கலை வளம் சிறப்புறப் பொருந்தும், மென் மேலும் சிறப்பளிக்கும். குமாரி, அம்பிகையின் தந்தை திரு. நடராஜா அடையாறிலே உள்ள "தியசோபிக்கல் சொசைட்டி"யின் தொண்டர்களுள் முதல்வர். அம்பிகையின் தாயாருக்கும் இலங்கைத் தொடர்புண்டு. ஆகவே கலாச்சாரத்தூதுவராக— இரு நாட்டின் கலாச்சாரத் தொடர்புக்கு வழி அமைப்பார் குமாரி அம்பிகை என்று கூறுவதில் ஐயமில்லை.

கலாட்சேத்திர மாணவிகளுள் முதன்மையான இடத்தைப் பெற்றுள்ள குமாரி அம்பிகையின் பரதநாட்டியக் கச்சேரி தமிழ் பல்கலைக் கழக நிதிக்காக இலங்கையின் பல பாகங்களிலும் நடைபெற்றுள்ளது. 2-6-62-ல் கொழும்பு மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

ஆட்சியாளரின் உதவி எதுவுமின்றி ஒரு பல்கலைக் கழகத்தை நடத்துவது மிகவும் கடினமானது. தமிழ் பேசும் மக்களின் கலை, கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைப் பேணிக் காத்து, செய்முறை தொழில் முறைக் கல்வி அபிவிருத்திக்கான வழி வகைகளை ஆராய்ந்து தொண்டாற்ற 1956-ம் ஆண்டு தமிழ் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கப்பட்டது.

நாடக விமர்சனம்

## அவள் யார்?

கருங்குயில் குன்றத்துக் கொலை என்ற கதை சில காலத்திற்கு முன் மரகதம் என்ற படமாக வந்ததை அறிவீர்கள். இதே கதையை அவள் யார்? என்ற நாடகமாக யாழ் திருக்குடும்பக் கன்னியர் நிவாசம் (கொன்வென்ட்) மேடையேற்றினர். விறுவிறுப்பான கதையுடன் நல்ல நடிப்பும் சேரவே நாடகம் பார்ப்போரைக் கவர்ந்தது.

கதாநாயகன் வரேந்திரன் பாகத்தை ஏற்ற செல்வி மாலினி கனகசபையின் நடிப்பு, கள்வர் குகையில் நண்பன் சுட்டுக் கொல்லப்பட்ட போது சகிக்க மாட்டாது கதறியபோதும், மாறு வேடமிட்டு வளவனைத் துப்பறிந்த போதும், உச்சத்தையடைந்தது. வரேந்திரன் அதிகமாக சவுக்கும் கையுமாகத் தோன்றியதன் காரணம்தான் விளங்கவில்லை. கதாநாயகி அலமுவாக நடித்த செல்வி பற்றீசியர் கிருஷ்ணராஜா தன் கண்களிலேயே முகபாவச் சிறப்பை வெளிப்படுத்தினர். குரல் கடைசி வரை எட்டாவிட்டாலும் நடிப்பும் குரலினிமையும் அதனை ஈடு செய்தன.

பொய்க்குற்றம் சாட்டப்பட்ட மாரமாத்தாண்டனை வந்த செல்வி லெலிற்ரு பேர்டினன்ட் "காவலர்கள்

(13-ம் பக்கம் பார்க்க)

## "இலங்கேஸ்வரன்" 500 வது நாள் விழா

### மனோகருக்குப் பொன்னுடை

சினிமாப் படங்கள் சிறப்புற்று விளங்கும் இந்நாட்களில் ஒரு நாடகம் 500 நாட்கள் அரங்கேற்றப்படுவதென்றால் ஆச்சரியப்படவேண்டியது தான். 100 நாட்கள் ஒரு படம் தொடர்ந்து ஓடிவிட்ட தென்றால், பெரிய பாராட்டு விழாக்களெல்லாம் நடைபெறும். புதுப்புது உத்திகளைக் கையாளுவதால் மாயாஜால மந்திர வித்தைகள் போன்று சினிமாவில் எத்தனையோ காட்சிகளைப் புகுத்தி மக்களைக் கவரலாம். அப்படியிருந்தும் கலைஞர் மனோகர் தனது இலங்கேஸ்வரன் நாடகத்தை 500 நாட்கள் நடத்தியுள்ளார்; இன்னும் 5000 நாட்கள் வேண்டுமானாலும் நாடகம் நடத்தலாம். அத்தகைய சிறப்பம்சங்களைக் கொண்டது "இலங்கேஸ்வரன்" நாடகம்.

மனோகர் சில வருடங்களுக்கு முன் இலங்கைக்கு தன் நாடகக் குழுவினருடன் வந்திருந்தார். புதுவிதமான கோணத்தில் இலங்கேஸ்வரனை இராவணனின் கதையை நாடகமாக்கி இருந்தார். அந்நாடகம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கேஸ்வரனைத் தோன்றிய மனோகருக்கு இலங்கை ரசிகர்கள் "இலங்கேஸ்வரன் மனோகர்" என்று அழைத்து மகிழ்ந்தனர்.

இத்தகைய சிறப்புக்கள் அமைந்த "இலங்கேஸ்வரன்" நாடகதின் 500வது நாள் விழா அண்மையில் சென்னை திருவல்லிக்கேணி எம். கே. டி. கலாமண்டபத்தில் பெண் மந்திரி ஜோதி அம்மாள் தலைமையில் நடைபெற்றது. இலங்கேஸ்வரனைத் தோன்றி வரும் மனோகருக்கு ஜோதி அம்மாள் பொன்னுடை போர்த்தினர்.



"நீ ஓடினாலும் நான் உன்னை விட மாட்டேன். உன்னைப் பிடிக்க முடியாவிட்டாலும் உன் [illegible] டேன்" என்று எம். [illegible] கூறுகிறார் போலும்.

—படம்: பாசம்.



தென்னாட்டுப் பண்பு தென்னாட்டுப் படங்களில்தான் தோன்றும் இது வடநாட்டுப் படம். ஆகவே தென்னாட்டுப் பண்பாடு கெட்டுவிட்டதே என்று குறை கூறாதீர்கள் என்று பத்மினி ஓர விழியால் கெஞ்சுகிறார்......

—படம்: ஜிஸ் தேஸ் மென் கங்கா பேத்தி ஹே! (ஹிந்தி)

பட விமர்சனம்:

## ஆஷிக் (ஹிந்தி)

### ஆஷிக்—(கலைக்) காதலன்

ஊர்ப்பிரமுகர்கள் எல்லோருமுள்ளார்கள், ஜமீந்தாரின் மூத்தமகனின் திருமணவிழாவில். மணமகன் அலங்காரங்கள் செய்து கொண்டு ஊர்வலமாகக் குதிரை மீதமர்ந்து வரவுள்ளான். எதிர்பார்த்திருந்த மக்கள் அனைவருக்கும் மணமகன் வந்த நிலை அதிர்ச்சியை அளித்தது. நல்லொழுக்க முடையோன் எனப் போற்றப்பட்ட மணமகன் மணக்கோலத்தில் வரும் போது மதுபோதையுடன் வருகிறான். எப்படியிருக்கும்? சீறிய தந்தை மகனின் முகத்தில் ஓங்கி அறைகிறார். தான் வந்தவேலை முடிந்து விட்டதென்பதை உணர்ந்த மகன் வெளியேறுகிறான். இம்மாறுதலை வேண்டியவள்—ஆனால் எப்படி நடக்குமோ என்று ஏங்கியிருந்த மணமகள், சித்தம் பூரிக்கிறாள்; தன்காதல் ஈடேறப் போவதை மானசீகமாக உணருகிறாள்.

சங்கீதப் பித்தன் கோபால் கலையைத்தவிர வேறு எதையும் அறியாதவன். ரேணுகா அடக்க ஒடுக்கமான கிராமப் பெண். கோபாலனை மானசீகமாகக் காதலிக்கிறாள். கோபாலின் அண்ணன் பிரதீப் ரேணுகாவை விரும்புகின்றான். இருபகுதிப் பெற்றோரும் பிரதீப், ரேணுகாவை ஒன்றாக்க நாள் குறிப்பிட்டதும் ரேணுகா கோபாலை அணுகித் தன்னை ஏற்கும்படி வேண்ட, கோபால் மறுக்கிறான். ரேணுகா தனது தம்பி கோபாலைக் காதலிப்பதை அறிந்த பிரதீப் மூகூர்த்த நாளன்று குடிபோதையுடன் தோன்றி தந்தையின் கோபத்திற்குள்ளாகி வெளியேறிவிடுகிறான். இதனால் கோபால்—ரேணுகா சோடி சேர்கின்றனர்.

நடனமும், பாட்டும் கைவரப் பெற்ற ரேணுகாவின் உறவினளான பிரீதி, கோபாலைத் தன் இசையாலும், நடனத்தாலும் கவர்ந்தது தம் குடும்பத்தில் புயல்வீசுகிறது. ரேணுகா குழந்தைக்குத் தாயாகி, மனக் கசப்பில் தற்கொலை முயற்சியி லீடுபட, கோபாலின் தந்தை மாரடைப்பால் மரணமடைய, கோபால் ஊரை விட்டு வெளியேறி மது அரக்கனின் பிடியில் சிக்கி—இப்படிக் குடும்பமே சின்னபின்னமாகிறது.

கோபாலுக்குப் பிறந்த மகள் சங்கீதாவின் கிராமபோன் ஆசை, குடும்பத்திலிருந்து வெளியேறிய சோபாலை இசைத்தட்டு மூலம் புகுத்துகிறது இசைத்தட்டில் கேட்டகுரல் யாருடையது என்பதைத் தேடிக் கண்டு பிடித்த பிரதீப், தன் தம்பியை மீண்டும் தன் குடும்பத்தில் நுழைத்து விடுகிறான். தன் மனைவி, தன் குழந்தை, தன் தாய், தனது வீடு என்ற யாவற்றையுமே மறந்தவனை கோபால் தன் வீடு வந்தும் திண்டாடுகிறான். தன அண்ணனிடம் கொடுக்கும்படி குழந்தை சங்கீதாவிடம் கொடுத்து விட்டுச் செல்லும் மணிப் பேர்சை திருப்பிக் கொடுத்து விட வெளிவந்த ரேணுகாவும், கோபாலும் சந்திக்கின்றனர்—பிரிந்த குடும்பம் ஒன்றுபடுகின்றது.

கண்ணகி கோவலன் கதையைச் சாயலாகக் கொண்ட கதையில் புதுமை இல்லையானாலும், சம்பவக்கோர்வையும், காட்சிகளின் விறுவிறுப்பும் நம்மை மெய் மறந்து கதையுடன் உறவாடவைத்து விடுகின்றன. மொழி விளங்காது போனாலும், நடிகர் நடிகைகளின் விழிகள் பேசும் மொழிகளே போதுமானதாகும்.

வெளிப்புறக் காட்சிகளை வெகுநேர்த்தியாகப் படமாக்கியுள்ளனர். தென்னிந்திய சங்கீத இரட்டையர்கள் விஸ்வநாதன் இராமமூர்த்திக் கொப்பான ஷங்கர் ஜெய்க்கிஷன் காதுகளுக்கு மதுரமான சங்கீதத்தை வழங்கியுள்ளனர்.

கோபாலாக வரும் ராஜ் கபூரின் முகச்சாயல்களில் காலரேகைகள் தென்பட்ட போதிலும், நடிப்பில் இளமை இல்லாமலில்லை. நேற்றுத்தான் குழந்தை நடிகையாக விருந்து, இன்று பெரிய பாட்டியோ என்று வியக்கும் அளவு முன்னேறி விட்டார் நந்தா—நமது அனு

(13—ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பில் வள்ளுவர் விழா

“இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் இந்தியாவின் தென் பகுதியில் வாழ்ந்த தமிழ் மக்கள் மத்தியில், பிற இனத்தவரின் வருகையாலும மதகலாச்சாரக் கலப்புகளாலும, தமிழர் தம் கலாச்சாரமும் பண்பும் இழந்துபோன வேளையில் வள்ளுவர் தோன்றினர். மொழி, கலை வாழ்க்கை முறை கலாச்சாரப் பண்புகளை பாதுகாத்து வாழ்க்கைக்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்தார்”. இவ்வாறு பேராசிரியர் திரு. ஐயன் பெருமாள் கோனர் விவேகானந்த சபையில் நடைபெற்ற வள்ளுவர் விழாவின் போது பேசினர். அவர் தொடர்ந்து பேசுகையில் “வள்ளுவம் தமிழ் மக்களின் மறையாக இருப்பினும் அது ஒரு பொது மறை” என்றும் குறிப்பிட்டார்.

திரு. கி. இலக்குமணன் அவர்கள் தலைமையில் விவேகானந்த சபை மண்டபத்தில் சனிக்கிழமையன்று நடைபெற்ற வள்ளுவர் விழாவில் மற்றும் பேராசிரியர் திரு. சாலை இளந்திரையனும், திருமதி சாலை இளந்திரையனும் சொற்பொழிவாற்றினர்கள்.

‘அறிவின் சிகரம்’ என்னும் பொருள் பற்றி திரு. சாலை இளந்திரையன் பேசினர்.

### சைவமங்கையர் கழகத்தில்

ஞாயிற்றுக்கிழமை (27—5—62) கொழும்பு தமிழ்ச் சங்கம், சைவ மங்கையர் கழகத்தில் திருவள்ளுவர் தினத்தைக் கொண்டாடியது. காலையில், தமிழ்மறைக் கழகத் தலைவர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கம் ஒன்று நடைபெற்றது. ‘திருக்குறள் அறநூலா? இலக்கியமா?’ என்பதுதான் பொருள். பேராசிரியர் திரு. சாலை இளந்திரையனும் அவர் கட்சிக்காரரும் திருக்குறள் அறநூல் என்றும், திருமதி சாலை இளந்திரையனும் அவர் தம் கட்சிக்காரரும திருக்குறள் இலக்கியம் என்றும் வாதாடினர். குழுமியிருந்த பெரு மக்களுக்கு இந்தக் கருத்தரங்கப் போட்டி ருசிகரமாக அமைந்தது.

மாலையில், திரு. கோ. ஆழ்வாப்பிள்ளை அவர்களின் தலைமையில் விழா நடைபெற்றது. திருமதி சாலை இளந்திரையன், திரு. சாலை இளந்திரையன், செல்வி ஞானமணி சுப்பிரமணியம், திரு. ஐயன் பெருமாள் கோனர் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

## ஆஷிக்

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

தாபத்தைப் பெறுபவர்-நம்மைக் கண்கலங்கவைத்து விடுகிருர். ரேணுகாவாக நந்தா தோன்றுகிருர்.

பிரீதியாகத் தோன்றும் பத்மினியின் உடலமைப்பு காட்சிக்குக்காட்சி மாறுபட்டுள்ளது. இது படப்பிடிப்புக் காலங்களைப் பொறுத்துள்ளது. பத்மினியின் கலியாணகாலத்தின் முன்னரும் பின்னரும் எடுக்கப்பட்ட காட்சிகள் தோன்றும் போது இக்குறைபாடுகள் திரையில் பரிமளிக்கின்றன.

வில்லனே இல்லாத இப் படத்தில் நகைச்சுவை அதிகமில்லை. பத்மினியின் நடனங்கள் தென்னகத் திரைகளில் சோபிப்பது போலில்லை.

உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் உயரிய நடிப்பும் கண்குளிரும் காட்சிகளும் கொண்ட உருக்கமான படம் ‘ஆஷிக்’.

—பானு

## பசி! பட்டினி!..

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைக்காகத் தியாகம் செய்தாக வேண்டும்.

1958-ம் ஆண்டிலே தமிழ்த் தாய்மார்கள் கண்ணீர் விட்டனர். “அல்லற் பட்டாற்ருது அழுத கண்ணீர் அன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை” என்ற வள்ளுவன் வாக்குப் பொய்க்கவில்லை. கணவர்களைக் குழந்தைகளைப் பறிகொடுத்து கற்பையும் காடையர்களிடம் பறிகொடுத்து வருந்தி அழுத தமிழ்ப் பெண்களின் கண்ணீர் வீண்போகவில்லை. ஒரு வருடத்திற்குள்ளேயே சிறிமாவோ தன் கணவனை இழந்து கண்ணீர் வடித்ததை நாம் பார்த்தோம். தமிழரசுத் தந்தை செல்வநாயகம் அவர்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட பண்டாரநாயக்கா, யாரின் வேண்டுகோளுக்காக ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தாரோ அதே காவி உடைக்காரர்களின் கையாலேயே சுட்டுக் கொல்லப்பட்டார். பண்டாவின் பாதையிலேயே செல்லும் சிறிமாவோவுக்கும் இந்த போன்ற கதிதான் ஏற்படலாம்.

சத்தியாக்கிரகம் முடிவடைந்ததும் ராணுவத்தினர் கட்டவிழ்த்து விடப்பட்டார்கள். அவர்கள் நடாத்திய அலங்கோல அராஜகம் எண்ணிலடங்காதவை. பெண்ணின் ஆட்சியிலே அவரின் ஆட்சியின் பாதுகாவலரே பெண்களைக் கற்பழித்தனர். இந்தக் கேவலம் வேறு எந்த நாட்டில் ஏற்பட்டுள்ளது?


### காந்திஜி உயிரோடு இருந்தால்.. ...

கடந்த சத்தியாக்கிரகம் உலக மக்களின் கவனத்தைப் பெரிதும் கவர்ந்தது. சத்தியாக்கிரகம் தோல்வியென்று இன்று பலர் கூறுகின்றனர். இந்தச் சத்தியாக்கிரகத்தின் பெருமையை அறிந்த ராஜாஜி அவர்கள் “காந்திஜி உயிரோடு இருந்தால் நிச்சயமாக ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருப்பார்—இலங்கைத் தமிழ் பேசும் மக்களின் சத்திய யுத்தத்தைக் கண்டு” என்று கூறியுள்ளார்.

நமது வருங்கால மக்களுக்கு அறிவு பெறவோ, நல்ல வாழ்க்கை வழி வசதிகள் பெறவோ எந்த விதமான வசதிகளும் கிடைக்கப் போவதில்லை. சாதாரண சம்பள உயர்வுகளுக்காக நாம் சிங்களம் படிக்க முன் வந்தால், நாம் நிரந்தர அடிமைகளாகப் போவது உண்மை. சிங்களத்தைக் கற்ற தமிழ் பேசும் ஒரு சிவில் சேவை உத்தியோகத்தருக்கே கடமையாற்ற முடியாது போய்-இந்நாட்டை விட்டே அவர் வெளியேற வேண்டியதாகிவிட்டது.

1945-ல் உலக யுத்தம் முடிவுற்றதும், சர்ச்சிலிடம் இந்திய விடுதலைப் பற்றிப் பிரஸ்தாபிக்கப்பட்ட போது, அவர் பிரித்தானிய சாம்ராஜ்யத்தை அழிக்க நான் வரவில்லை என்று திட்டவட்டமாக மறுத்து விட்டார். ஆனல் அவர் அப்படிக் கூறிய இரண்டு வருடங்களிலேயே இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்து விட்டது.

நமது சுதந்திரப் பாதையிலே பவனி செல்ல நினைப்பவர்கள் பசி, பட்டினி, சிறைச்சாலை, தூக்குமேடை ஆகியவற்றை எதிர்நோக்கியேயாக வேண்டும். இத்தகைய தியாக சித்தியுள்ளவர்களின் போராட்டத்திலே தான் நமது விடுதலை தோன்றும். அந்தக் காலம் வெகு தூரத்திலில்லை.



வேலணையில் நடைபெற்ற 10-வது திருக்குறள் மாநாட்டின்போது பேராசிரியர் திரு. சாலை இளந்திரையன் பேசிக்கொண்டிருக்கிருர். தலைமை தாங்கிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம், தமிழ் மறைக் கழகத் தலைவர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் ஆகியோரையும் படத்தில் காண்க.

## அவள் யார்?

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

துரத்தி வருகிருர்கள்” என்று பதைபதைத்த காட்சியும் கள்வன் உக்கிரமசிம்மனுக வந்த செல்வி சரோஜினி கனகரத்தினத்தின் பயங்கர நடிப்பும் பார்த்தவர் மனதை விட்டகலாது. உக்கிரமசிங்கனின் சிரிப்பு மட்டும் சோபிக்கவில்லை. கற்பகவல்லியாக வந்த செல்வி ஹெலன் கோசபின் உணர்ச்சி மிக்க நடிப்பும், செல்வி நொயாளா பெனடிக்ட், செல்வி ரஞ்சினி கனகரத்தினம் இருவரது வில்லன் நடிப்பும் நாடகத்திற்கு மெருகூட்டின. மறுபக்கம் வில்லியாக வந்த செல்வி தம்பிரத்தினமும் டால்டனுக வந்த செல்வி சபாபதியும் தத்ரூபமாக நடித்தார்கள்.

விசுவம், குண்டோதரன், வளவன் பாகங்கள் எல்லோரையும் சிரிக்க வைத்தன. விலோசனையின் பணிவு சொரியும் நடிப்பும் ஆஞ்சனு தேவி, மாதவி இருவரது நடிப்பும் குறிப்பிடத்தக்கவை. இத்தனை பாத்திரங்கள் கொண்ட நாடகத்தை பழக்கியோர் யார் என்று குறிப்பிடவில்லை. ஆனல் அவர்கள் போற்றப்பட வேண்டியவர். உடை அலங்காரத்திற்கும் காட்சிச் சோடனைகளுக்கும் சிரமமெடுத்து சிறப்பாகச் செய்து நாடகத்திற்கு ஒரு சோபையைக் கொடுத்திருந்தார்கள்.

ஒரு குறிப்பு: நீலா சத்தியலிங்கத்தின் சிஷ்யைகளின் நடனங்களுக்காகவே நாடகத்தைப் பார்க்கலாம் என்று சிலர் கூறினரென்றல் — மேலும் கூற வேண்டுமா? கடைசியில் குறைகள் இருப்பினும் சிரமமான நாடகத்தைச் சிறப்பாக, அதுவும் யாழ்ப்பாணத்தில், பெண்கள் கல்லூரி மேடையேற்றிய தாயின் அவர்கள் உண்மையாகப் போற்றப்பட வேண்டியவர்களே. இவ்விதம் மேலும் பல நாடகங்கள் வெளிவரும் என எதிர்பார்க்கிருேம்.

—மதி

### வைத்தியக் கட்டுரை

வைத்திய ஆராய்ச்சித் துறை சம்பந்தமாக செ. குமாரசாமி அவர்களால் எழுதப்படும் கட்டுரையின் தொடர்ச்சி இடமின்மை காரணமாக இம்முறை இடம் பெறவில்லை. அடுத்த வாரம் வெளி வரும்.

## வறுமையின் வேதனை

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

சவுக்காரம் எல்லாம் வாங்கி வா.” என்று பொன்னம்மா ஐந்து ரூபாவைச் சிறுவனின் கையில் வைத்தாள். சிறுவனல் அதை நம்ப முடியவில்லை.

பரிசளிப்பு விழாவும் வந்தது. ஒய்யாரத்துடன் சிறுவன் பாலசிங்கம் மேடை மீது ஏறிப் பரிசுகளைப் பெற்ருன். விழா மைதானத்தின் பின்புறத்தில் இருந்து முரட்டுக் கைகள் இரண்டு படார் படார்,” என ஒலியை எழுப்பின.

தவநாதன் வரவில்லை. “சிங்கப்பூர் செல்லத்துரை போன ஆண்டு கூட்டுறவுப் பண்டகசாலைகளின் சமாசத்தின் செயலாளராக இருந்த பொழுது பத்தாயிரம் ரூபா மோசடி நடைபெற்றுள்ளதாம். விசாரணை செய்ய பொலிசார் செல்லத்துரையைப் பிடித்து கொண்டு போயிருக்கிருர்கள்,” என்று யாரோ பேசிக் கொண்டு போனது சிறுவனின் காதில் ஏற்கனவே விழுந்திருந்தது.

பரிசளிப்பு விழாவில் மூன்று உயிர்கள் தான் மிகவும் மகிழ்ச்சி அடைந்தன. நிலாக்காயும் முற்றத்தில் அம் மூன்று உயிர்களும் ஒன்றிப் போயிருந்தன.

“தம்பி, உன் அப்பாவுக்கு இன்னமும் மனஞ் சரியில்லை உனக்கு உடுப்பு வாங்க முடியவில்லை என்ற கவலையுடன் சந்தைக்குப் போனராம். சந்தை ஏமாற்றிப் போட்டுது. என்ன செய்யலாம் என்று தவித்தாராம். பக்கத்திலே யாரோ ஐம்பது ரூபா தாளொன்றைத் தவற விட்டுப் போய்விட்டார்களாம். பேசாமல் ஒருவருக்கும் தெரியாமல் காசை எடுத்து வைத்துக்கொண்டு ஒரு மணித்தியாலத்திற்கு மேல் ஆடாமல் அசையாமல் அந்த இடத்திலேயே நின்ருராம். ஒருவருமே வந்து கேட்கவில்லையாம். காசை எடுத்துச் செலவு செய்து போட்டார். தன்னைப்போல ஓர் ஏழை அந்தக் காசைப் போட்டிருந்தால், அவன் மனம் என்ன பாடுபடும்! என்று நினைத்து நினைத்து மனவேதனைப்படுகிருர்” என்ருள் தாய்.

சிறுவன் பெருமையுடன் தன் தந்தையைத் தாவியணைத்தான்.

செம்மண் படிந்து கறையாகத் தாடி வளர்ந்துள்ள முகத்தில் உள்ள வாய், வாய்மையின் இருப்பிடம்; சிங்கப்பூரிலிருந்து வந்து பொன்னுற் கட்டிய பல்லை உடைய வாயோ பொய்யைக் கக்கும் வாய். சிறுவனின் முகம் பெருமையால் மலர்ந்தது.


# விற்பனைக்கு

வீட்டுக் கட்டிடத்துக்குத் தேவையான சகல விதமான இரும்புச் சாமான்கள் எங்களிடம் மலிவான விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

## என். வயித்திலிங்கமும் சகாக்களும் வரை.

33, 3-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.

450, பழைய சோனகத் தெரு, கொழும்பு.

138, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# எங்கள் கோரிக்கை

எஸ். அப்துல் கபூர்
கொழும்பு.

அந்த நாள் முதல் இந்த நாள் வரை நாங்கள் நன்றியுள்ளவர்கள். என்று பெயர் பெற்றவர்கள். உப்பிட்டு வளர்த்தவர்களை எங்கள் உயிர் உள்ள மட்டும் மறக்கவே மாட்டோம். பகல் கொள்ளை, பிக்பாக்கெட் திருடர்கள், கொலைகாரர்கள் இவர்களை யெல்லாம் பிடிப்பதற்கென்று எங்களில் ஒருசிலருக்குப் பயிற்சி தந்திருக்கிறார்கள்; தந்து கொண்டும் இருக்கிறார்கள். எங்கள் இனத்தவர்களில் சிலர் தெருவெல்லாம் அலைந்து ஒரு பிடிசோற்றுக்கு எத்தனையோ பாடுபட வேண்டியிருக்கிறது. பசியின் கொடுமையினால், பலரைக் கடித்துக் காயம் உண்டாக்கியும் விடுகிறார்கள்.

இது ஒரு பக்கம் போக, எங்கள் இனத்தவர்களுக்கு இன்னொரு அபாயமும் உண்டு. பசியின் மயக்கத்தில் பாதையில் செல்லும் போது எமன் வந்தது போல் மிகத் தந்திரமாகக்கயிற்றை வீசி லாரியில் போட்டுக் கொண்டு போய்விடுகிறார்கள். அப்புறம் எங்களுக்கு மரணம் தான் என்பதைச்சொல்லவும் வேண்டுமா? ஐந்தாறு குட்டிகளை நாங்கள் பெற்றெடுத்ததும் உங்கள் உறவினர்களோ, நண்பர்களோ வந்ததும் ரொம்பத் தாராள மனப்பான்மை உள்ளவர்கள் போல் எங்கள் குட்டிகளைத் தூக்கிக் கொடுத்து விடுகிறீர்கள். அந்த நேரத்தில் பெற்றவளின் வயிறு பற்றி எரியும் என்பதை உணரத் தவறி விடுகிறீர்களே!

இனிமேல் எங்கள் இனத்தவர்கள் ஒவ்வொருவரை உங்கள் வீட்டுக்காவலுக்கு வையுங்கள்! இதனால் வீட்டுக்கு வரும் தேவையற்ற விருந்தினர்களையும் நாங்கள் விரட்டி விட்டு உங்களுக்கு வீண் செலவு ஆகாமல் செய்கிறோம்.

எங்கள் இனத்தவர்கள் தான் வான வெளிக்குச் சென்று பெரும் வெற்றியை மனித சமூகத்துக்குத்தேடித் தந்திருக்கிறார்கள். எங்களுக்கு என்று ஒரு சங்கம் ஏற்படுத்த வேண்டும் தெருவெல்லாம் சுற்றி அலையும் எங்கள் இனத்தவர்களை இந்தச்சங்கம் ஒன்று கூட்டி, நகரத்தைச்சுற்றியுள்ள ஒவ்வொரு தெரு முனையிலும் இருவரைக் காவலுக்கு வைக்க வேண்டும். இந்த முயற்சியால் திருடர்களும் திருட அஞ்சுவார்கள். இதே முறை உலகம் முழுவதும் ஏற்பட்டால் திருடர்களே இந்த உலகத்தில் இருக்க மாட்டார்கள் என்பது எங்கள் கருத்து.

எங்களைக் கண்ட இடத்தில் ஓட ஓட விரட்டிக்கல்லால் அடிக்கும் சிறுவர்களுக்கு ஒரு ஆண்டு சிறைத் தண்டனையும் எங்கள் முகத்தில் அடித்தாற் போல் உணவு வைப்பவர்களுக்கு ஆறு மாத சிறைத்தண்டனையும் கொடுக்க வேண்டும். இதுவே எங்கள் கோரிக்கை.




# தங்கைக்கு...

"மதியமுதன்"

அன்பகலாத்
தங்கை மலர்,

எனதுளம் நிறைந்த வணக்கம். பலகாலம் என் பைந்தமிழஞ்சல் காணாத நீ இம்மடல் கண்டு ஆச்சரியப் படமாட்டாய்! காரணம், நமது கருத்துக் குவியல்கள் சிந்தனைச் சிதறல்கள் சிந்திமலரும் "சுதந்திரன்" வார இதழ் தடைசெய்யப்பட்டிருந்தது.

அனைத்தையுங் கடந்து அன்னை தமிழ் காக்க, அறப்போர் தொடுக்க அதோ! உதித்து விட்டான் "சுதந்திரன்".

மலர், கற்பின் செல்வி கண்ணகிக்கு விழா எடுக்கும் நாள் — சிலப்பதிகாரத்தைச் சிரமேற்றுங்காலம் வைகாசித்திங்கள்! அதைப் பற்றித் தான் நான் உனக்கு எழுத விரும்புகிறேன்.

கண்ணகி கோவலனுடன் வாழ்ந்தாள், கோவலன் மாதவியோடு வாழ்ந்தான். பொருட்கள் அழிந்தன. அதனாற் பாண்டிய நாடு சென்று பொருளீட்டக் கண்ணகியின் சிலம்பொன்றைக் கொண்டு சென்ற கோவலன் அரண்மனைப் பொற்கொல்லனால் கள்வனெனக் குற்றஞ் சாட்டப்பட்டுக் கொலை செய்யப்படுகிறான். கேள்விப்படுகிறாள் கண்ணகி. மறு காற்சிலம்போடு பாண்டிய மன்னனிடம் வருகிறாள். தனது கணவன் கள்வனல்லன் என்பதைச் சிலம்பை அவன் முன்னிலையில் எறிந்து பரல் முத்துச் சிதறவைக்கிறாள். அதன் மூலம் அரசன் தனது தவறை உணர்கிறான். அக்கணமே உயிர் விடுகிறான். அரசன் அவன் மனைவி கோப்பெருந்தேவியும் அக்கணமே உடன் கட்டை ஏறுகிறாள்.

கண்ணகியின் கோபம் தணிந்துவிடவில்லை. இடது முலையைத் திருகி வீசுகிறாள். மதுரைமாநகரம் தீப்பற்றி எரிகிறது. அவள் காவேரிக் கரை வழியே சேர நாட்டையடைகிறாள். அங்கு திருச்செங்கோடு என்னுமிடத்திலுள்ளபறம்புமலையில் இவளை இக் கோலத்திற் கண்ட குன்றக்குறவர் வணங்கிவரலாறு கேட்கக் கூறிய வண்ணம் சிவபதமடைகிறாள். குறவர் தமது தெய்வமாகக் கண்ணகியை வணங்குகின்றனர். நாட்டு வளப்பம் பார்க்க வந்த, செங்குட்டுவன்—அச் சேர நாட்டு மன்னன்—யாவற்றையுங் கேட்டறிகிறான். அந்த விழாவுக்கு "கடல் சூழிலங்கைக் கயவாகு" மன்னனும் அழைப்பு வந்து செல்கிறான். அவன் விழா முடிந்து வரும்போது சும்மா வரவில்லை. கண்ணகியின் சிலையொன்றையுங் கொண்டு வந்தான்.

ஒரு சிங்கள மன்னன் கண்ணகிக்கு விழா எடுத்தானென்றால்—அது அவன் தமிழ் மங்கையரின் கற்புக்குத் தலை வணங்கினான் என்று குறிப்பிடலாமல்லவா தங்கச்சி! உன் போன்ற ஆயிரமாயிரம் கற்பரசிகள், நமது ஈழத்தமிழினத்தில் தோன்றினால் ஆட்சியாளர் உங்கள் காலடியிலே விழாமலிருக்க முடியுமா மலர்? எண்ணிப்பார் என் தமிழ்த் தங்கையே! எம்மினத்தின் இழந்து விட்ட உரிமைகாக்கும் பணி யாருடையது? உன் போன்ற உத்தமிகளுடையதல்லவா?

கடல் சூழிலங்கையில் கயவாகு மூலம் கண்ணகி வழிபாடு பரவியது. இலங்கையின் பல பாகங்களிலும் கண்ணகி ஆலயங்களிருந்த போதிலும் மிகக்கூடுதலாகக் கிழக்கிலங்கையிலே கோயில் கொண்டு விட்டாள் கண்ணகி.

கிழக்கிலங்கை மக்கள் சேரர் மரபு வந்தவர்கள் என்று கற்றோரும், மற்றோரும் கருதுகின்றனர். காடும் காடு சார்ந்த இடங்களிலுந்தான் கண்ணகி ஆலயங்கள் அமைந்துள்ளன. இங்கெல்லாம் வைகாசித்திங்களிற் தான் விழாக்கள் நடைபெறுகின்றன.

கிறிஸ்தவக் கத்தோலிக்க மக்களுக்கும், இஸ்லாமிய மக்களுக்குங்கூட வைகாசித் திங்கள் வனப்புடையது தான் மலர்! வைகாசித் திங்களை வாழ்த்தி இவ்வேளை விடைபெற்றுப் பின் எழுதுகிறேன்.

அன்புள்ள
அண்ணன்
"மதியமுதன்"

# அவனியிற் தீந்தமிழ் பரப்பிடுவோம்!

'சிந்தனைச் செல்வி', ஏழாலை மேற்கு.

செந்தமிழினை வளர்த்திடுவோம்—நாம்
சிறந்த கிதங்கள் பாடிடுவோம்
எந் தமிழினைக் கற்றிடுவோம்—நாம்
எங்கும் தமிழ்க்குரல் எழுப்பிடுவோம்.

உண்மைத் தமிழினை உயர்த்திடுவோம்—அதை
உரிய இடத்தினில் வைத்திடுவோம்
அரிய தமிழினைச் சுவைத்திடுவோம்—இந்த
அவனியிற் றீந்தமிழ் பரப்பிடுவோம்.

தூய தமிழினைப் பயின்றிடுவோம்—அதன்
துன்பம் நீங்கிட உழைத்திடுவோம்
தொன்மைத் தமிழினைத் துதித்திடுவோம்—பல
தொண்டுகள் செய்து மகிழ்ந்திடுவோம்.

# கடலுக்கடியில் வாழும் விசித்திர மீனினம்

அன்ரனி பெர்னாண்டோ, கிரிலப்பனை

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பச்சோந்தியைப் போலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு தன் உடலின் நிறத்தை மாற்றிக் கொள்ளக் கூடிய மீன்களும் கடலில் வசிக்கின்றன. "ஸ்குவிட்" எனப்படும் ஒரு வகை மீன். விரோதிகள் நெருங்கினால் ஒருவகை மையைக் கக்கியவாறு வேகமாக நீந்திச் செல்கிறது. நீரோடு மை கலந்ததும் விரோதியால் அந்த மீனைக் கண்டுபிடிக்க முடிவதில்லை, வானில் பறக்கும் ஜெட் விமானம் புகை கக்கிக் கொண்டு செல்வதைப் போல இந்த மீன் மை கக்கியவாறு நீரில் நீந்துவது கண்கவர் காட்சியாகும்.

வாழும் இடத்திற்கேற்ப தன் நிறத்தை மாற்றிக் கொள்ளும் தன்மை வாய்ந்த மற்றொரு மீன் தான் "சிராட்ட கந்தஸ்" எனப்படுவது. இந்த மீன், நமது வீடுகளில் வளர்க்கப்படும் பசுவின் முகத்தையொத்த தோற்றத்தைக் கொண்டுளது. பசுவுக்கு இருப்பதைப் போல இதற்கும் இரு கொம்புகள் இருக்கின்றன. இந்தக் கூர்மையான கொம்புகள் விரோதிகளை எதிர்த்து வெல்வதற்கும் இரைகளைக் கொல்வதற்கும் பயன்படுகின்றன. இது ஒரு விசித்திர மீன் என்பதில் வியப்பில்லையன்றோ?

கடலில் வாழும் விசித்திர [illegible] விரோதிகளை [illegible] வதற்குக் கையாளும் தந்திரம் நமக்குச் சிரிப்பை வருவித்தாலும் அதன் புத்தி சாதுரியத்தையும் நாம் மெச்சாமல் இருக்க முடியாது. இந்த மீனின் உடலமைப்பு கடலில் மிதந்து செல்லும் ஒருவகைத் தண்ணீர்ச் செடியை ஒத்துளது. பிரஸ்தாப தண்ணீர்ச் செடியின் கிளைகளைப் போலவே அதன் உறுப்புகள் யாவும் அமைந்துள்ளதோடு, அச்செடியின் காய்களைப் போன்ற தோற்றமுடைய தழும்புகளும் அதன் உடம்பில் காணப்படுகின்றன. இதனால் அந்த மீன் , விரோதிகளைக் கண்டதும் செடியைப் போல் நீரில் மிதந்து இலகுவில் விரோதிகளிடம் சிக்காமல் தப்பிக்கொள்ள முடிகிறது. அதுமட்டுமன்றி, அதன் தழும்புகளைக் காய்களென நினைத்துப் பறித்துண்ண வரும் மற்றைய மச்சங்களை இந்த மீன் இலகுவில் பிடித்து இரையாக்கிக் கொள்வதற்கும் அதன் தோற்றம் பயன்படுகிறது.

'பைல்' எனப்படும் ஒரு வகைச் சிறிய மீன் விரோதிகளிடமிருந்து தப்புவதற்குக் கையாளும் தந்திரம் மிகவும் விநோதமானதா[illegible] கடல் நீரிலுள்ள செடிகளில் தன் தலையை மறைத்துக்கொண்டு, அச்செடியின் இலையையொத்த தன் வாலை இலைகள் ஆடும் தாளத்திற்கு ஆட்டுகிறது, இந்த மீன். கரையிலுள்ள செடிகளில் வாழும் இலைப்பூச்சிகளைவிட நடிப்புக்கலையில் ஒருபடி முன்னேறி இலையாகப் பாசாங்கு செய்வதோடு மட்டுமன்றி அதைப்போல அசைந்து நடித்தும் தப்பிக் கொள்ளும் இந்த மீனைப் பற்றி அறியும்போது எவர் தான் வியப்படைய மாட்டார்.

மிக மிகச் சிறிய மீனொன்று எவ்வளவு பெரிய சுறுமீனையும் தனிமையில் எதிர்த்து வெல்கிறது என்றால் வியப்பாகத்தான் இருக்கும். மீன் சிறிதாக இருந்தாலும் இது விரோதிகளை எதிர்க்கும் முறை மிகவும் பெரிய முறையென்றே கூறவேண்டும். பெரிது மட்டுமென்ன, மிகப் பயங்கரமான முறையும் தான் அது! தன்னை விழுங்க வரும் மச்சங்களின் வாயினுள் புகுந்து செவுள்களையோ வேறொரு இடத்தையோ பற்றிப் பிடித்துக் கொள்கிறது, இந்தச் சிறிய மீன். அப்பொழுது அதை விழுங்கவும் முடியாமல் துப்பவும் முடியாமல் அதன் விரோதி படும்பாடு! அப்பப்பா!! சொல்லுந்தரமன்று.

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக் கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12. என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

## வளர்மதி
## சுதந்திரன் மாணவர் மன்றம்
### அங்கத்தவர் மனுப் பத்திரம்

இல. 4.

பெயர் ______

பாடசாலை ______

விலாசம் ______

______

பெற்றோர் அல்லது ஆசிரியர் கையொப்பம் ______ கையொப்பம் ______

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## கம்பளையில் வள்ளுவர் விழா

வள்ளுவர் விழா கம்பளை "ஈழமணி" அலுவலகத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

திருவள்ளுவரின் படத்தை வீடெல்லாம் வைத்து காலமெல்லாம் விழாக் கொண்டாடுவது போலக் குறளையும் நாளெல்லாம் கற்று வள்ளுவன் வழி நடக்க முயல வேண்டும். இதை விட்டு தீபாவளி பண்டிகை கொண்டாடுவதி போல் கலகலவென்று கொண்டாடுவதில் எப்பயனும் இல்லை.

இவ்வாறு விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் திரு. தமிழ்ப்பித்தன் (ஆசிரியர் "ஈழமணி") கூறினார். அவர் மேலும் பேசுகையில்:—

மலைநாட்டில் எல்லோரும் ஓரளவிற்காவது கல்வி பயின்றால் தான், வள்ளுவரின் பெருமை புலப்படும், குறளின் இனிமை விளங்கும். கல்வி அறிவு எமக்கு இல்லையாயின் எதையும் அறிந்துகொள்ள முடியாது. கூடிப் பேசுவது இன்னதென்று விளங்காது, தடுமாற வேண்டி ஏற்படும். ஆகவே எல்லோரும் கல்வி கற்று முன்னேற இன்றே சங்கற்பம் செய்துகொள்ள வேண்டும்.

வள்ளுவன்படமிருக்குமிடமெல்லாம் அவன் பேச்சாகவும், அவன் வழி செல்பவர்களாகவும் இருக்கவேண்டும் என்றார்.

இறுதியாக, விழாவில் கலந்து கொண்டோருக்கு விருந்துபசாரம் நடைபெற்றதுடன் விழா இனிது முடிவுற்றது.

—

## மட்டக்களப்பு கச்சேரி நாடக மன்றம்

மட்டககளப்பு—கச்சேரி உத்தியோகஸ்தர்கள், ஊழியர்கள் உட்பட நாடகமன்றமொன்றை நிறுவியுள்ளனர். மாகாண அதிபர் திரு. டெறிக் அலுவிகாரை தலைமையில் நடைபெற்ற இந் நாடக மன்ற அமைப்புக் கூட்டத்தில் புது உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டதுடன் 'நடமாடி' எழுதிய 'துரோகி' என்ற நாடகத்தை மன்ற நிதிக்காக நடத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. அலுவலக உதவியாளரும் முன்னாள் ரேடியோமாமாவுமான திரு. பேரம்பலம் அவர்களின் தயாரிப்பில் வளரும் இந் நாடகத்தில் பிரிவுக் காரியாதிகாரி திரு. தியோபிளஸ், திரு லிங்கன், நடமாடி, செல்வி சிவயோகம் பொன்னம்பலம் ஆகியோர் முக்கிய பாகமேற்று நடிக்கவிருக்கின்றனர்.

நிர்வாகிகள்:—

தலைவர்: திரு. டெறிக் அலுவிகாரை. உப தலைவர்: திரு. பேரம்பலம். செயலாளர்: திரு. இராசரெத்தினம் (நடமாடி) பொருளாளர்: திரு. ஈ. பாலகராஜா.

—

## வள்ளுவர் படிப்பக புதிய நிர்வாகிகள் தெரிவு

வள்ளுவர் படிப்பக 1962-ம் ஆண்டின் புதிய நிர்வாகிகள் தேர்வு 1-5-62 இரவு 8 மணியளவில் இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக பணிமனையில் இ. தி. மு. க. நாவல் நகர் மாவட்டக் கிளையின் செயலாளர் தோழர் மு. இரட்ணம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அவ்வேளையில் இ.தி.மு.க. நாவல் நகர் மாவட்டக்கிளை பொருளாளர், தோழர் சி. இரா. பத்மநாதன் பொறுப்பாளராகவும், தோழர் க. மணி உதவி பொறுப்பாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இ.தி மு.க. நாவல் நகர் மாவட்டக்கிளை செயற்குழு உறுப்பினர்கள் உதவி புரிவதாக ஒத்துக் கொண்டபின் கூட்டம் இனிது முடிவுற்றது.

—

## இ. தி. மு. க. நாவலப்பிட்டிக்கிளை

இலங்கை திராவிடர் முன்னேற்றக் கழக நாவல் நகர் மாவட்டக்கிளையின் 1962-ம் ஆண்டின் புதிய நிர்வாகிகள் தேர்வு 1—5—62 மாலை 5 மணியளவில் இ. தி. மு. க. பனிமனையில் இ. தி. மு. க. நாவல் நகர் மாவட்டக் கிளை முன்னாள் செயலாளர் தோழர் மு. இரட்ணம் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது.

அத்தருணம் கீழ்க்கண்டவர்கள் புதுவருட நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:

செயலாளர்: மு. இரட்ணம். துணைச் செயலாளர்: சி. ப. இராஜேந்திரன். பொருளாளர்: சி. இரா. பத்மநாதன். செயற்குழு உறுப்பினர்கள்:— எம். அண்ணாமலை, கே. பாண்டியன், பி. வேலு, க. தமிழ்மாறன், பி. ச. மலர்மாறன், எஸ். சொக்கலிங்கம்.

—

## பழைய மாணவர் சங்கத்தின் சிலப்பதிகார விழா

வந்தாறுமூலை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தினரால் சென்ற 20-5-62ல் வந்தாறுமூலை கண்ணகையம்மன் வீதியில் ஆசிரியர் திரு. கோ நடுவில்தம்பி தலைமையில் சிலப்பதிகார விழா கூட்டப்பட்டது. அக் கூட்டத்தில் பங்குபற்றிய ஆசிரியர் திரு. எஸ் இளையதம்பி, பாரதிக்கு முன் தோன்றிய புரட்சிக் கவிஞன் தான் இளங்கோவடிகள் என்றும், அவன் முடியாட்சியைப் போக்கிக் குடியாட்சியை நிலைநிறுத்த அடிகோலினன் என்றும் தமது பேச்சிற் குறிப்பிட்டார். மற்றும் திருவாளர்கள் மா. சோமலிங்கமும், க. நடராசாவும் உரை நிகழ்த்தினர். ஏருவூர் தையற் கலைஞர் திரு. ராஜூவின் பாடல் விருந்தும் அளிக்கப்பட்டது. பின்னர், பழைய மாணவர் சங்கக் காரியதரிசி செல்வி பா. தேவகியின் நன்றி உரையுடன் கூட்டம் இனிது முடிந்தது.

—

## மஞ்சந்தொடுவாய் குடிசைக் கைத்தொழில் சங்கம்

குடிசைக் கைத்தொழிலில் ஆண்களும் பெண்களும் தீவிரமாக அக்கறை செலுத்தினால் நமது பொருளாதாரம் விருத்தியடைவதோடு நாட்டின் வேலையில்லாத் திண்டாட்டமும் பெருமளவில் குறையும்.

இவ்வாறு மஞ்சந்தொடுவாய் குடியேற்றப் பகுதி குடிசைக கைத்தொழில் சங்க விசேடக் கூட்டத்தில் பேசுகையில் மட்டக்களப்புப் பாராளுமன்றப் பிரதிநிதி திரு. செ. இராசதுரை கூறினார். கூட்டத்துக்குச் சங்க ஆலோசகர் திரு. மாஸ்டர் சிவலிங்கம் தலைமை தாங்கினார். சங்கத்தலைவர் திரு. க. இரத்தினம் திரு. இராசதுரைக்கு மாலை சூடி வரவேற்றார்.

சங்க உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர்: திரு. க. இரத்தினம். உபதலைவர்: திரு. க. மரியான் தம்பி. செயலாளர்: திருமதி அருளம்மா இரத்தினம். உப செயலாளர்: திருமதி இராசமணி இராசதுரை. பொருளாளர்: திருமதி பத்தினிச்சி தம்பிராசா. ஆலோசகர்: திரு. மாஸ்டர் சிவலிங்கம். செயற்குழு: திரு. வே. சிவராசா, ம. தங்கராசா, திருமதி. கனகம்மா மரியான் தம்பி.

---

# இருதலைக்கொள்ளி...

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒற்றையாட்சிச் சட்டத்திற்கு மாறாக சமஷ்டி ஆட்சி முறைகளைக் கையாண்டு வரும் ஜனநாயக நாடுகளைப் போன்று, சோவியத் யூனியனும் தன் தேசிய இனங்களுக்கேற்ற வகையில் யூனியன் குடியரசுகள், சுயாட்சிக் குடியரசுகள், சுயாட்சிப் பிரதேசங்கள், தேசியப் பகுதிகள் என்று நான்கு பிரிவுகளாகப் பிரிந்து பல்வேறு இன மக்களுக்கும் சுயாட்சிப் பலனை அனுபவிக்கக் கொடுத்துக் கொண்டிருப்பதை இலங்கைக் கம்யூனிய வாதிகள் இன்னும் தெரிந்து கொள்ளாமலா இருக்கின்றார்கள்?

14க்கு மேற்பட்ட தேசிய இனங்களை ஏற்றுக் கொண்டு அவர்களுக்கு மொழி—அந்தஸ்து—உத்தியோகம் தொழில் போன்ற இன்ன பிற சகல உரிமைகளையும் வழங்கி வரும் பொதுவுடமைவாதிகள், தமிழ் பேசும் மக்கள் தன் இன எழுச்சிக்காகப் போராடுவதை எந்தச் சான்றை வைத்துத் தவறு என்று வாதிடுகின்றார்கள்?

இருந்தும் ஒற்றையாட்சியையொழித்து சமஷ்டி ஆட்சி மூலம் தமிழ் பேசும் மக்கள் தலை நிமிர்ந்து வாழ அதிகாரத்தைப் பங்கிட்டுக் கேட்பதை எப்படி தவறென்று கூற முடியும்? எனவே இனிமேலாவது பேடித்தனமான கம்யூனிசத்தை ஒதுக்கிவிட்டு உண்மை லெனினிசத்தைப் பின்பற்றுங்கள். அந்தந்த தேசியத்திற் கேற்றவாறு [illegible] மாற்றியமையுங்கள். அப்போதுதான் தேசிய இனங்கள் வளரும்—வாழும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

---

# கால்நடைகளுக்கு உணவு....

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கொடுக்கிறார்கள். அங்கு வைக்கோலை அவ்வளவு அதிகமாகப் பயன் படுத்துவதில்லை. ஆனால் இந்தியாவிலோ நிலைமை முற்றிலும் எதிர்மாறானது. புல் பயிர் செய்வதற்கென்று அதிக நிலம் இங்கு ஒதுக்கப்படுவதில்லை. தீவனப் பயிர்களுக்குக் கூடத் தனியாக நிலம் ஒதுக்கும் வழக்கம் இங்கே கிடையாது. இதர சத்துப் பொருள்களை ஆடு மாடுகளுக்குத் தரவேண்டும் என்ற எண்ணமும் பெரும்பாலான விவசாயிகளுக்குத் தோன்றுவதில்லை. எனவே, இந்தியாவின் கால் நடைகள் தானியங்களின் வைக்கோலையும் நிலத்தில் வறண்டு முற்றியுள்ள புல்லையும் மட்டும் உண்டு வாழ வேண்டிய பரிதாபமான நிலையில் இருக்கின்றன.

வைக்கோலைமட்டும் அதிகமாகத் தின்னும் மாடு, எருமைகளில் பல மூத்திர நோயால் பாதிக்கப்படுவதாவும் தெரிய வருகிறது. வைக்கோலில் பொட்டாசியம்உப்புகள் அதிகமாக இருப்பதே இதற்குக் காரணம். மேலும் நெல் வைக்கோல் தின்னும் கால்நடைகள் தங்கள் உடலமைப்பில் தேவையாகவுள்ள சுண்ணாம்புச் சத்தை அதிகமாக இழந்து விடுகின்றன. இவைகளை ஆலோசித்தால் மாடுகளுக்கு வைக்கோல் போடுவது ஒரு பெரிய சிக்கலான பிரச்சினையாகும். ஆனால் வைக்கோலைப் போடாமல் தடுப்பதென்பதும் தீவனப்பற்றாக்குறையாகவுள்ள நமது நாட்டின் சூழ்நிலையில் இயலாது. மேலும் பல கோடி ரூபாய் விலை மதிப்புள்ள வைக்கோலை ஆண்டுதோறும் வீணாக்குவது சாத்தியமில்லை. ஆகவே வைக்கோலிலுள்ள குறைகளை நீக்க அவற்றைப் பாடம்செய்தல், தண்ணீரில் ஊற வைத்தல், தண்ணீரில் வேக வைத்தல், சிறிய அளவில் வெட்டிப் போடுதல், காரப் பரிகாரம் செய்தல் முதலிய பல வழிகளில் ஒன்றையோ பலவற்றையே கையாளலாம். அல்லது வைக்கோலோடு பல துணைத் தீவனங்களை இயன்ற அளவு அதிகமாகக் கலந்து போடலாம்.

## துணைத் தீவனங்கள்

வைக்கோலுடன் துணைத் தீவனமாக உபயோகிக்கக் கூடிய பொருள்களைப் பற்றியும் உபயோகிக்கும் விதங்களைப் பற்றியும் இந்தியக் கால்நடை வைத்திய ஆராய்ச்சி நிலையம் பல சோதனைகளைச் செய்து பார்த்தது. பிண்ணாக்கோடு கால்சியம் கார்பனெட்டைக் கலந்து மாடுகளுக்குப் போட்டால் அவைகளுக்குச் சுண்ணாம்புச் சத்துக் கிடைக்கிறதென்று பரிசோதனைகள் மூலம் கண்டறியப்பட்டது. இவ்வித கலவைப் பிண்ணாக்குடன் கோதுமை அல்லது அரிசித் தவிட்டைக் கலந்து போட்டால் மாடுகள் அவற்றைச் சுவையோடு உட்கொள்ளும். கோதுமைத் தவிட்டில் பாஸ்வரம் இருப்பதால் தீவனத்தில் பாஸ்வரமும் சேரும். பருத்திக் கொட்டை, கடலை, உழுந்தின் உமி, வீட்டில் அரிசி களைந்த தண்ணீர், கஞ்சி முதலானவற்றையும் அடிக்கடி பசுந்தழைகளையும் ஆடு மாடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்கலாம். சில மணி நேரம் ஆடுமாடுகளை வெளியில் மேய விடுவது மிக முக்கியமாகும். அவைகள் வெளியில் திரிந்து பற்பல பசுந்தழைகளையும் புல்லையும் உண்பதில் பல நன்மைகள் உண்டு. கருவேலாங்காயையும் ஊறவைத்த புளியங்கொட்டை முதலானவற்றையும் ஆடுகளுக்குப் பல இடங்களில் கொடுக்கிறார்கள். இவ்விதம் சிற்சில துணைத் தீவனங்களைக் கால் நடைகளுக்கு அளித்து வந்தால் அவற்றுக்கு வேண்டிய ஊட்டமும் சக்தியும் சரிவரக் கிடைக்கும்.

பெரிய பண்ணைகளிலும் அரசாங்கக் கால் நடை வளர்ப்பு நிலையங்களில் மட்டிலும் வைக்கோலைக் குழிப் பாடம் செய்தும், காரப் பரிகாரம், தண்ணீர் பரிகாரம் முதலியன செய்தும் அதில் ஊட்ட அபிவிருத்தி செய்து கால் நடைகளுக்குப் போடலாம். இம் முறைகளைத் தெரிந்துகொள்ள விரும்புவோர் அரசாங்க விவசாய அலுவலகங்களுக்கு நேரிடையாகச் சென்று செய்து காட்டிச் சொல்லித் தெரிந்துகொள்ளலாம்.

---

# வளமிக்க....

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்படியான ஆக்க வேலைகட்கு அரசியலை நம்பிப் பயனில்லை. நெருப்பாற்றில் நூல் பாலத்தில் நடை பயிலும் அவர்களை விட்டு விட்டு, பணம் படைத்த முதலாளிகள் உதவினால் என்ன?

பெரும் பூான்மையான கிராமங்களில் சிறு சிறு நிலப் பரப்பாய் பரந்து கிடக்கின்றன வயல்வெளிகள். இவைகள் வெடித்து,வாய் பிளந்து காட்சியளிக்கின்றன. காரணம் நீரின்மை. இவ்விதமான வயற் பரப்புகட்கு அருகாமையில் இருக்கும் குளங்களைத் திருத்தியும், இல்லாதவைகட்கு வெட்டியும் ஆவன செய்தால் நியாயமான அளவிற்கு விளைச்சலை எதிர் பார்க்கலாம். அனாதைகளாய்க் காட்சியளிக்கும் பனைகளையும் வயல்களையும் கட்டிக் காத்து வந்தால் வடபகுதி, குறிப்பாக யாழ்நகர், வளம் பல கொழிக்கும் மங்கள நாடாகும். அந்நாள் எந்நாளோ?

இது மட்டுமல்ல இன்னும் பல உற்பத்திச் சாலைகளை நிறுவுவதற்கு வாயளவில் பலமாகச் சொல்லக் கேட்டிருக்கிறோம். கிழக்குக் கடற்கரையை யடுத்துள்ள உட்பிரதேசத்தில், அதாவது சரித்திரப் புகழ் வாய்ந்த வல்லிபுர கோவிலைச் சூழ்ந்த பெருமணல் வெளியில், கண்ணாடித் தொழிற்சாலை நிறுவப் போவதாகக் கூறினார்கள். நில வசதியும், வேறு, உற்பத்திக்கான பொருள் வசதியும் உடைய அந் நிலப் பரப்பில் வேலையை விரைவிற் றொடங்கினால் வருங்காலம் ஒளிமயமாகும்.

அடுத்து வல்லைவெளியில் பருத்தி செய்கை உற்பத்தியும் அதற்குரிய ஆலையும் ஒன்று நிறுவப் போவதாக அளந்து கட்டினார்கள்.

ஆகவே யாழ்நகரில், சீனி உற்பத்திச்சாலை, கண்ணாடி உற்பத்தித் தொழிற்சாலை, பருத்தி ஆலை இவை மூன்றும் இங்கே நடைபெற ஆவன செய்து ஆக்க வேலையில் வெகு விரைவாகக் கவனம் செலுத்தி வந்தால் இன்னும் 10, 15 ஆண்டுகளில் யாழ் நகரில் பொருள் வளமும், வாழ்க்கை வளமும் பல்கிப் பெருகும். வேலையில்லாத் திண்டாட்டத்திற்கு வேலையே இராது. அரசினரின் மனம் பரந்த மனமாகி வட பகுதியில் இவைகளை நிறுவுவதற்கு விரும்பாவிட்டாலும், குன்று போல் பணம் குவித்துவைத்திருந்து கட்டிக் காக்கும் முதலாளிவர்க்கம் அப்பணத்தை இப்படியான ஆக்க வேலைகட்கு அளித்து கண்ணுங் கருத்துமாய் அந் நிறுவனங்களைப் பாதுகாத்து வந்தால் என்ன? எப்பொழுது இவ்வெண்ணம் உதிக்குமோ? எக் காலம் பொருளாதாரம் நிலையான ஆதாரமாய் நிற்குமோ?

எதிர்பாருங்கள்
வெகு விரைவில்!
சினிமாஸ் திரைகளில்



இலட்சிய நடிகர்
எஸ். எஸ். ராஜேந்திரன் M.L.A.
இலட்சிய நடிகை
விஜயகுமாரி
எம். ஆர். ராதா, சௌகார் ஜானகி,
எஸ். வி. ரங்கராவ், பி. எஸ். சரோஜா
நடித்த

மாடர்ன் தியேட்டர்ஸ் **குமுதம்**

இசை: கே. வி. மகாதேவன்
டைரக்ஷன்: ஏ. சுப்புராவ்

---

**50 வது**
**வெற்றித் தினம்**
**கிங்ஸ்லி**
(கொழும்பு)
**வெலிங்டன்**
(யாழ்ப்பாணம்)
மற்றும் 11 திரைகளில்
பார்த்தோர் பரவசப் படுகிறார்கள்
பார்க்காதவர்கள் இன்றே பார்த்து மகிழுங்கள்.
பி. சரோஜா தேவி
சிவாஜி கணேசன்
எம். ஆர். ராதா
சௌகார் ஜானகி
மற்றும் பலர் நடித்த
டைரக்ஷன்:
ஏ. பீம்சிங்




---

வெகு விரைவில்!
**கெயிட்டி** (கொட்டாஞ்சேனை)
மற்றும் 7 திரைகளில் ஆரம்பமாகும்
பிரேம் நஸீர்-எம்.என். ராஜம்-தங்கவேலு
முதலியோர் நடித்த




---

**வெகுவிரைவில்**
**எல்பின்ஸ்டன்**
(மருதானை)
**றெக்ஸி**
(வெள்ளவத்தை)
மற்றும் 6 திரைகளில்
புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்,
ராஜசுலோசனா,
ஈ. வி. சரோஜா,
நம்பியார், கண்ணாம்பா
மற்றும் பலர்
திறம்பட நடித்த

**நல்லவன்!**
**வாழ்வான்**




---

**சென்ட்ரல்**
(மருதானை)
2-30, 6-15, 9-30க்கு.
ஞாயிறு காலை 10-00க்கு

* ராஜ் கபூர்
* பத்மினி
* நந்தா
* அபி
* ஹனி இராணி

நடித்த
**ஆஷிக்**
(சிறந்த ஹிந்தி படம்)



**கண்கவர் நடனங்கள்!**
**காதிற்கினிய பாடல்கள்**
**நிறைந்த படம்!**
**ஆஷிக்**

உங்கள் மனதைவிட்டு அகலாத படம் "ஆஷிக்"!
சிறந்த பாடல்கள் நிறைந்த படம் "ஆஷிக்"!
அன்பு, நேர்மை, தன்னம்பிக்கை இவைகள் எப்பொழுதும் வெற்றி பெற்றே தீரும் என்பதற்கு எடுத்துக்காட்டு.
**"ஆஷிக்"**
டைரக்ஷன்:
முக்கர்ஜி
இசையமைப்பு:
ஷங்கர்-ஜய்கிஷன்
பின்னணி:
முகேஷ்-லதா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு, 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை இலக்கத்தில் 1962-ம் வருடம் ஜூன் மாதம் 3-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டது.